Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

செப். 30 - ஒக். 06, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU IL WEEKLY முரசு 582



## இ.தொ.கா VS ம.ம.மு மோதலில்


## கூத்துப் பார்க்கும் கூட்டமைப்பு

## ஜனாதிபதியின் உரையும் பேச்சுவார்த்தையின் நிலையும்

## சந்திரபாபு ஒரு சரித்திர புருஷன்

## காதல் உணர்வுகளில் காத்திருக்கும் சங்கதிகள்

# ஆன்மீகம்



## மனிதருள் மாணிக்கமாக வாழப் பழக வேண்டும்

ஆன்மீக சக்தியை எவரொருவர் அடையாது விடுகின்றாரோ அவர் அமைதியை இழந்து தவிப்பவராவார்.

இக் காலகட்டத்தில் எல்லை மீறிப் போகும் நாகரிக மோகம் நாசத்தையே விளைவித்து வருகிறது. ஆபாச சினிமா, மதுபானப் பாவனை, அதிர்ஷ்டலாபச் சீட்டில் நாட்டம், அரசியலில் புரட்டு, கள்ளக்கடத்தல், இலஞ்சம், ஊழல், கட்டாய மதமாற்றம், பாலியல் துஷ்பிரயோகம் இப்படிப் பற்பல வேண்டத் தகாத விடயங்களில் புகுந்து விளையாடி வீணாகி நின்றவர்களை நாம் அறியாமலில்லை.

இறைவனுக்குப் பயப்படாத, மனச்சாட்சிக்கு மதிப்பளிக்காத மிருக மனமே ஆன்மீக நெறியில் வாழாத மனிதர்களைப் பீடிக்கின்றது.

விஞ்ஞான ரீதியாக விளங்கும் இந்து மதத் தத்துவங்களை விளங்கிக்கொண்டு மனிதருள் மாணிக்கமாக வாழ அர்த்தமுள்ள இந்து மத அறநூல்களைக் கற்றுய்வோமாக!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

## இயேசுவின் அன்பு என்றும் மாறாது

"அஞ்சாதே நான் உன்னை மீட்டுக்கொண்டேன். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன். நீ எனக்கு உரியவன். நீர்நிலைகள் வழியாக நீ செல்லும்போது நான் உன்னோடு இருப்பேன். ஆறுகளைக் கடந்து போகும்போது அவை உன்னை மூழ்கடிக்க மாட்டா! தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்படமாட்டாய், நெருப்பு உன் மேல் பற்றியெரியாது;" (ஏசாயா 43-:2-3)

அன்புள்ளங்களே! பார்த்தீர்களா இயேசு கூறுவதை. உங்கள் பெயரைச் சொல்லி அழைப்பது மட்டுமல்ல, நீ எனக்கு உரியவன்; என் அன்பு குறையாது! என்று கூறுகிறார். அத்தோடு நீர், நெருப்பு மட்டுமல்ல இவ்வுலகில் உள்ள அனைத்தும் அவரது கட்டளைக்கு அடிபணிகின்றன! இயேசு ஒருவரே உண்மையான கடவுள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா!

பிரகாசியம்மாள் அந்தோனிப்பிள்ளை, திகனை

## வறுமையைப் போக்கும் இஸ்லாம்

ஒவ்வொரு மனிதனும் தன்னை வறுமையிலிருந்து காத்துக்கொள்ள உழைத்தேயாக வேண்டும். தொழில் செய்யும் அடியான் மீது அல்லாஹ் பிரியமாக இருக்கின்றான்.

இஸ்லாம் வறுமையை விதைக்கவுமில்லை. வளர்க்கவுமில்லை. வாழ்க்கைக்குப் பொருள் தேடுவது அவசியம் என வலியுறுத்தும் இஸ்லாம் "பாடுபடுங்கள் பயனுண்டு, கஷ்டப்பட்டு உழையுங்கள் சுகமுண்டு; பாடுபட்டுத் தேடும் பணம்தான் பயனும் நலமும் தரும் என்று கூறுகிறது.

ஆண்கள் உழைத்துச் சம்பாதிப்பவை ஆண்களுக்குரியவை.

பெண்கள் உழைத்துச் சம்பாதிப்பவை பெண்களுக்குரியவையாகும்.

எனவே ஆண், பெண் ஒவ்வொருவரும் உழைப்பின் மூலம் அல்லாஹ்வின் அருள் கொடைகளைக் கோருங்கள்.

அல்குர்ஆன் 4:32

ஆகவே, நாம் வறுமையிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள பிறர் கையையும், பணப் பையையும் எதிர்நோக்கி நிற்கும் இழிநிலையிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளவோமாக.

—எம்.சி.கலீல், கல்முனை — 05.

## கவிதைப் போட்டி இல.579



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### மஞ்சத் துயில்

வானகமே கூரை
மர நிழல் மாளிகை
மரக் கிளையில் குழந்தைக்கு
தொட்டில்
கணவனைப் பாதகர் பலி எடுக்க
விதவை எனப் பெயர் எடுத்த நீ
இன்று வீதியில்!
மீள்குடியமரக் கேட்டவர்கள்
இன்று மஞ்சத்திலே நித்திரை!

-வறோனி
சில்வெஷ்டர், மூதூர்.

### பெண்நிலை அறிவரோ?

தொட்டிலில் ஒன்று
தூக்கத்தில் ஒன்று
தொடர்வன கல்வியை
இடர் தாங்கி இரண்டு
எல்லாம் இருந்தென்ன
என்னவர் இல்லா இப்
பெண்நிலை அறிவரோ
போர் ஆர்வம் கொண்டோர்?

—பாத்திமா சனா, நீலாவணை.

### மர வாசகம

நாட்டின்
எதிர்காலம்
துயில்கிறது...
உன் கிளையில்!
வாழ்வின்
போராட்டம்
நிகழ்கிறது....
உன் நிழலில்!

—முகைசிரா
முகைடீன்,
பாலையூற்று.

### மீண்டும் அகதி வாழ்வு!

தன்னினம் எப்படியானாலும்
அவர்களுக்கென்ன.....
அவர்களுக்கு தேவை
அரசியல் நாற்காலிதான்....!!

—புள்ளகுழிமணல் பிரோஸ்கான்,
கிண்ணியா — 03.

### மீண்டும் வாராதோ?

இரண்டோடு அகதிகளாய்
இம் மரத்தடிக்கு வந்தோம்
மூன்றாகி, இன்று மாதங்கள் பல
சொந்த மண்ணில்
சுவாசிக்கும் காலம்
என்றும் வாராதோ
ஈசா எமக்கு?

—அ.சந்தியாகோ, கண்டி.

### ஏக்கம்

மர்மக்கொலைகள்
மலிந்த நம்
நாட்டில்
இரை தேடச்
சென்ற
கணவன்
இருட்டியும்
விட்டது
இதுவரையில்
இன்னும்
வரவில்லையே
என்று ஏங்குதோ
இவள் மனம்?


—எஸ்.பி.பி.கணேஷ்,
தாண்டியடி.

### இனிய சேதி

கைக் குழந்தை ஒன்று தனை மறந்து இங்கே
தூக்கம் கொள்ளுது மரக் கிளைத் தூழியிலே
இடம் பெயர்ந்த மக்கள் வருமோ ஒரு யுத்தம் என்று - மனச்
சஞ்சலத்தில் வாடுகின்றார் அச்சப் பீதியிலே - வீறு நடை
போட்டுப் பயணித்த பேச்சுவார்த்தை வண்டியதோ - முட்டுக்
கட்டை நிலையில் கிடக்குது சரி பாதியிலே - பெரும்
துன்பம் துயரம் எல்லாம் ஓடிப் போய்த் தொலைந்தது என்று
தினமும் முரசு ஒலித்து முழங்கட்டும் இனிய சேதியிலே.

-த.சங்கீதா, திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.582



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.10.2004

கவிதைப் போட்டி இல.582
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எது தப்பு?





அநாதையானது தப்பா?
அடைக்கலம் தேடியது தப்பா?
அரசியல் மாற்றம் தப்பா?
அடிக்கடி விலையேற்றம் தப்பா?
போர் நிறுத்தம் தப்பா?
சமாதான பேச்சே தப்பா?
மானிடராய்ப் பூமியில் பிறந்ததே தப்பா?

—ஆர்.ராஜபுலேந்திரன், கந்தேகெதர.

### தோற்றுப் போன வாழ்வு

எத்தனை பத்திரிகைகளில்
பக்கம் பக்கமாய்
எங்கள் அகதி நிலையை
எழுதி, எழுதி
உயிர்த்துக்கொள்கின்றான்
கவிஞனும்
அரசியல்வாதியும்!
பாவம்.....
நாங்கள்தான் தோற்றுக்
கிடக்கின்றோம்
இந்த நயவஞ்சகர்களிடம்!

—இராமச்சந்திரன் தவேந்திரன்,
ஹாலி — எல.

### அடைக்கலம்

அன்று புத்தனுக்கு
அடைக்கலமளித்தது
அரசமரம்
இன்று
அகதிகளுக்கு
அடைக்கலமளிப்பதென்னவே
இது போன்ற
ஆல மரந்தான்.

—கமால்தீன், அல்
ஆஷாத், ஏறாவூர் — 01.

### விண்ணப்பம்!

இரக்கம் சிறிதும்
இல்லாது - தன்
இனத்தை அழிப்பவரே....
ஓர் வேண்டுகோள்!
யுத்த காலத்தில்
உடைமைகளை இழந்து
சமாதானச் சூழலில்
உறவுகளை இழந்து
தவிக்கிறோம் - ஆகவே
எங்களையும்
கொன்றுவிடுங்கள்!
எங்கள் மரணத்தையும்
நியாயப்படுத்த
நாட்டுப் பற்றாளரா
இல்லை?

—சசிதா நாகேந்திரன்,
ஆரையம்பதி — 03.

## உங்கள் பக்கம்

### தொழிலாளர் ஊதியத்தை உயர்த்துவீரா?

மதிப்பிற்குரிய மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களே! மலையக உழைக்கும் வர்க்கத்தினரின் வாய்களுக்கு வாய்ப் பூட்டுப் போட்டவர்களே! எம்மைப் பற்றிச் சற்றேனும் அக்கறை இல்லாதவர்களே! இந் நாட்டின் முதுகெலும்பு என வர்ணிக்கப்பட்டு வரும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பல துன்பங்களை அநுபவிப்பவர்கள். நம் நாட்டில் இன்று அதிகரித்துள்ள பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப பஸ் கட்டணம் அதிகரித்துள்ளது. இவ்வாறு நடைமுறை வாழ்க்கை பொருளாதாரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் மலையக உழைக்கும் மக்களின் ஊதியத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இதுவரை காலமும் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றமடைந்து வருவதே மிகுதியாக உள்ளது. இந்த ஊதியப் பிரச்சினை மக்கள் மத்தியில் அன்றாடம் பேசப்பட்டு வருகின்றது. மலையகப் பிரதேசங்களில் வயது குறைந்த சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தல் மீண்டும் அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. காரணம் சிறுவர்களின் உழைப்பும் தொழிலாளர்களின் அன்றாட ஜீவியத்திற்கு உதவுகின்றது. முதலாளித்துவ சம்மேளனத்துடனான இரண்டு வருட ஊதிய கூட்டு ஒப்பந்த காலம் முடிவடைந்தும் எவ்வித கோரிக்கைகளும் இன்றி கூட்டமைப்பு அரசின் பலத்தை உயர்த்தியுள்ள மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்களே! தோட்டத் தொழிலாளர்களின் பெயரைக் கூறி தப்பினேன் பிழைத்தேன்" எனச் செல்லும் உறுப்பினர்களே! உங்கள் பார்வையை எம் பக்கம் திருப்புங்கள். நன்றி மறப்பது நன்றல்ல தோழர்களே. எங்கள் ஊதியத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பீர் என்ற நம்பிக்கையோடு- எதிர்பார்ப்போடு- காத்திருக்கின்றோம்.

-நன்றி
மக்களுடன் என்றும்
நி.லோரன்ஸ்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசக[ர்] சாலை

### வேண்டாம் ஒரு யுத்தம்!

முரசு....
இதழ் 574 இதமாக இருந்தது.
அரசியல் விடயங்கள்...மனதிற்குச் சற்று வேதனையைத் தந்தது.
மீண்டும் யுத்தம் ஆரம்பித்துவிடுமோ என்ற பயத்தினால்
அறுபதையும் தாண்டிய ஆசைகள். *என்ன செய்ய!
காலம் மாறிப்போச்சு.
வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை நியாயமானதே.
நிச்சயம் நியாயம் கிடைக்க வேண்டும். சாமுராய் நண்டு
அதிசயம்.....இறைவனின் படைப்பினில் எத்தனை
அதிசயங்கள். தேன்கிண்ணம் - சுவை
சிறப்புக் கவிதையும் - கவிஞரும் பகுதியில் கவியூரனின்.
நிவாரணம்
வெறுமை
சொந்தம்
என்-வாழ்வு போன்ற கவிதைகள் சிறப்பாக இருந்தன.
அவரது மரணம் மறக்க முடியாத நிகழ்வுதான்.

—முஸம்மில், குவைத்.

### நீ வருவாய் என....

முரசே நீ
வரும் நாளை எதிர்பார்த்து
என் விழிகள் தவம்
கிடக்கின்றன.
உன்னைப் பார்க்க
என் உள்ளம் துடிக்கிறது.
முரசே! உன் முகக்
கவர்ச்சியில் கிறங்கித்தான்
போகிறேன்.
முரசே! உன் மனதைத்
திறந்தால் என்ன அதிசயம்
உலகத்தை உன்னில் அல்லவா
அடக்கி வைத்திருக்கிறாய்!
ஒவ்வொன்றும் என்னை
வியக்க வைக்கிறது!
தடைகள் பல வந்தாலும்
இன்று போல்
என்றும் வீர நடை போட
வாழ்த்தும் உன்னவன்.

—ஆர்.கோபிநாத், கம்பளை.

### வருக... வருக!

576வது முரசின் ஆக்கங்களுள் இனித்ததில் பிடித்ததாக 'டுயட் டொட்கொம்' (நியாஸ் முஸாதிக்) 'நினைப்பு' (பொன்குமார்) போன்றன இன்னும் என் ஞாபகத்தில். வருக....வருக.....இனிய சேதிகள் தாங்கி வருக...!

-ஷான்கெண்டி, லண்டன்

### வாழ்க!

தோகை இளம் மயிலும்
கூவும் இசைக் குயிலும்
முரசே உன் நலத்தைக்
கேட்குது எம்மிடத்தில்.
வாழ்க நீ முரசே!
வளர்க நீ தினமும்!

—கொ.அனிஸ்ரலா, புங்குடுதீவு.

### திகட்டாத தினமுரசே!!

நீ வாரந்தோறும்
வாரி
வழங்கும்
கிரிக்கெட்டின் வரலாறு
முட்பாதையில் மரித்த
மிதவாதம்,
பாப்பா முரசு, லேடீஸ்
ஸ்பெஷல், தகவல்
பெட்டி போன்ற
பகுதிகள் எமது
அறிவுக்கு
விருந்தளித்து
உள்ளத்தின்
உணர்வுகளுக்கு
உரமூட்டுகின்றன.

—ஏ.எம்.இப்திகா,
புத்தளம்.

## 32 அமைப்புகளுக்கு இந்தியாவில் தடை

இந்திய அரசு 32 அமைப்புகள் மீது ஏற்கெனவே விதித்திருந்த தடையை மீளப் புதுப்பித்துள்ளது. பயங்கரவாத அமைப்புகளெனக் கூறித் தடை செய்யப்பட்டிருக்கும் அமைப்புக்களின் பட்டியலில் புலி இயக்கமும் இடம்பெற்றிருக்கிறது. 1967ஆம் ஆண்டிலிருந்து அமுலிலுள்ள சட்டவிரோத செயற்பாட்டுத் தடைச் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தமொன்றினையடுத்து இந்த வர்த்தமானி அறிவித்தலை, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சு விடுத்துள்ளது.

## பனிச்சங்கேணியில் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பனிச்சங்கேணி என்ற இடத்தில் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் பிரபா அணியைச் சேர்ந்த மூன்று புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எட்டுப் புலிகள் காயமுற்றனர். கருணாவின் சகோதரரான ரெஜி என்பவரும் அவரது இரு சகபாடிகளும் கொல்லப்பட்டனரென்று புலிகள் அறிவித்து 48 மணித்தியாலங்களுக்குள் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கருணா அணியினரே தாக்குதலை நடத்தியிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. வவுணதீவில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு நிகழ்ந்து இரு நாட்களின் பின்னர் இத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## நட்டஈடு வழங்க மறுப்பு

பாலாவிக் கடலில் எரிக்கப்பட்ட குருநகர் மீனவர்களின் இழுவைப் படகுக்கு நட்டஈடு தருவதாக முன்னர் ஒத்துக்கொண்ட புலிகள், இப்போது அங்குள்ள மீனவர் சங்கங்களிடம் இந்த நட்டஈட்டை வழங்குமாறு நிர்ப்பந்தித்துள்ளனர். இது தொடர்பாக கடந்த 21ஆம் திகதி குருநகரில் கூடி ஆராய்ந்த மீனவர் சங்கங்கள் தம்மால் நட்டஈடு செலுத்த முடியாதெனத் தீர்மானம் எடுத்துள்ளன. புலிகளே நட்டஈட்டினை வழங்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளன.

## இ.போ.ச. அதிகாரி சவால்

கோண்டாவில் இ.போ.ச. டிப்போவில் கடந்த வாரம் இ.போ.ச.வின் செயற்பாடுகள் சம்பந்தமாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் புலிப் பிரதிநிதிகளுக்கும் இ.போ.ச. அதிகாரியொருவருக்குமிடையில் கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. "நீங்கள் சொல்கிறபடி நடக்க முடியாது. இ.போ.ச. சட்டதிட்டங்களுக்கமையவே என்னால் செயற்பட முடியும். நீங்கள் சுடுவதென்றால் என்னைச் சுடுங்கள். நான் பயப்படவில்லை" என்று முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அந்தத் தமிழ் அதிகாரி கூறினார். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஐ.எஸ். ஜயரட்ன என்ற அதிகாரி அக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றபோதும் புலிப் பிரதிநிதிகள் இருப்பதை அறிந்து கூட்டத்தில் கலந்துகொள்வதை தவிர்த்துக்கொண்டார்.

# மாற்றுக் கருத்துடையவர்களைத் தீர்த்துக்கட்ட வேண்டாம்

# நிரந்தரத் தீர்வுக்கு ஓர் சோதனை!

### புலிகளிடம் தமிழ்ப் புத்திஜீவிகள் வற்புறுத்தல்

பதினெட்டு மாதங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளிலிருந்து விலகிய புலிகள், மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்து வருகின்றனரென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சர்வதேச சமூகத்திடம் குற்றச்சாட்டுத் தெரிவித்திருக்கும் இன்றைய நிலையில், தமது விடாப்பிடியான நிலைப்பாட்டினைத் தளர்த்தி சாத்தியமான போக்கொன்றினைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தமிழ்ப் புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர். கடந்த 21ஆம் திகதி சர்வதேச சமாதான தினத்தன்று ஐக்கிய நாடுகள் சபையின் 59ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மேற்கண்ட குற்றச்சாட்டினைத் தெரிவித்திருந்தார்.

புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். இடைக்கால நிர்வாக சபையை அமைத்த பின்னரே இறுதித் தீர்வு பற்றிப் பேச வேண்டுமென்ற புலிகளின் நிபந்தனையையே அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இந்த யோசனைகளின் இரண்டாவது சரத்தின்படி இடைக்கால சபையில் புலிகளே அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டிருப்பர் என்றும், பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்றுத் தலைவராகத் தெரிவு செய்யப்படுபவரே சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. இவரின் செயலாற்று அதிகாரங்களைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் ஏனைய உறுப்பினர்களுக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ, ஏன் ஜனாதிபதிக்கோ இருக்காதென்று கூறப்பட்டுள்ளது. இதேபோன்று, சபை அமைக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்குப் பின்னர் நடத்தப்படும் தேர்தலையும், புலிகள் அறுதிப் பெரும்பான்மை வகிக்கும் தன்னாட்சி அதிகார சபையால் நியமிக்கப்படும் தேர்தல் ஆணையகமே நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று வடக்கு - கிழக்கின் நிர்வாகம் தொடர்பான முழு அதிகாரமும் தன்னாட்சி அதிகார சபையிடமே இருக்குமென்றும், நிலம், சட்டம், வரி, திறை, வசூல் உள்ளிட்ட சகல அதிகாரங்களையும் அது கொண்டிருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. பிரத்தியேகமான நீதி நிர்வாக அமைப்பு வடக்கு, கிழக்குக்கு வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. நிதி சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனையும் சர்ச்சையைக் கிளப்பலாம். எனவே, இச் சிக்கலான பிரச்சினைகள் பற்றிப் பேசித் தீர்க்காமல் எடுத்த எடுப்பிலேயே 'அதிகாரத்தைத் தா'வென்று கோருவது தவறானது என்று லண்டனில் சட்டத்தரணியாகக் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி.ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் மாற்றுக் கருத்துக்கள் கொண்ட 167 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 54 பேர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களென்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மரணத்தின் முகவர்களாகப் புலிகள் விளங்கக் கூடாது. ஜனநாயகம், பல்லினத்தன்மை, மாற்றுக் கருத்துகளுக்கு அவர்கள் மதிப்பளிக்க வேண்டும். தாங்கள் கொலைகளைச் செய்யவில்லையென்று புலிகள் கூறும் சப்பைக்கட்டு நியாயத்தை சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. "புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனரென்று ஜனாதிபதி ஐ.நா.உரையில் குற்றஞ்சாட்டியுள்ளார். எனவே அவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று கனடிய மனித உரிமை அமைப்பில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி வி.தர்மலிங்கம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, கனடாவில் விடுத்திருக்கும் அறிக்கையில், "தமிழ்ப் பெண்கள் நாளாந்தம் தமிழர்களாலேயே விதவைகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் காரணங்களுக்காக சின்னஞ்சிறு குழந்தைகளின் தகப்பனோ, தாயோ சுட்டுக் கொல்லப்படுவது கொடுமையான காட்சி" என்று குறிப்பிட்டுள்ளார்.

## அடையாள அட்டை சட்டமூலத்தை தமிழ்க் கூட்டமைப்பு எதிர்ப்பதேன்?

தேர்தல்களில் ஊழல், மோசடி, கள்ள வாக்குப் போடுதல் போன்ற துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காகவே வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது. தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவதால் தமிழ் மக்களுக்கு எந்தவித ஆபத்தோ அல்லது இடைஞ்சல்களோ ஏற்படப்போவதில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இதனை எதிர்ப்பதில் ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டுமென்று யாழ்.மாவட்ட பிரஜைகள் குழுவைச் சேர்ந்த முக்கியஸ்தரான எஸ்.அருந்தவநாதன் குறிப்பிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது யாழ்.மாவட்டத் தேர்தலில் மிக மோசமான மோசடிகள் இடம்பெற்றதாகத் தேசிய, சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்திருந்தனர். தேர்தல் ஆணையாளர்கூட இக் குற்றச்சாட்டினை ஏற்றுக் கொண்டார். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளெனத் தம்பட்டமடித்துக் கொள்பவர்கள் கள்ள வாக்குகள் மூலம்தானா ஏகப்பிரதிநிதித்துவ அந்தஸ்தைப் பெற வேண்டும். ஆறு மாத காலத்துக்குள் அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கையெடுப்பதாக அரசு கூறுகிறது. உரிய காலத்துக்குள் அடையாள அட்டை பெற முடியாத தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு வேறு ஆவணங்களைப் பயன்படுத்த மாற்று ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமேயொழிய, அடையாள அட்டையே வேண்டாமென்று கூறுவது அர்த்தமற்றது, கபடத்தனமானது என்றும் அவர் கூறினார். கள்ள வாக்குகள் மூலம் பெற்ற ஏகப்பிரதிநிதித்துவ அந்தஸ்துக்கு அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் பாதிப்பாக அமையுமென்பதே அவர்களின் ஆதங்கமென்றும் அவர் சொன்னார்.

## ரஜனி திரணகம கொலையுண்டு 15 வருடங்கள் கழிந்துவிட்டன

மனித உரிமைப் போராளியான ரஜனி திரணகம கொல்லப்பட்டுப் பதினைந்து வருடங்கள் கழிந்துவிட்டன. 1989ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதியை சமாதான தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பிரகடனப்படுத்தியமை இங்கு குறிப்பிடத் தக்கது. வடக்கு, கிழக்கில் தமிழீழ அமைப்புகள், இலங்கை, இந்திய இராணுவம் ஆகியவை மேற்கொண்ட சகல மனித உரிமை மீறல்களையும் வலுவாகக் கண்டித்தவர் இவரென்று மனித உரிமைக்கான யாழ.போதனாசிரியர் சங்கம் விடுத்த நீண்ட குறிப்பில் தெரிவித்துள்ளது. ரஜனியைப் புலிகள் கொன்றபோது இந்திய இராணுவத்தின் மீதோ அல்லது மாற்றுத் தமிழ்க் குழுக்கள் மீதோ பழிவிழும் வகையில் சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொண்டது. இது குறித்து மக்கள் பேசத் தொடங்கியதும் தாம் இக் கொலையைச் செய்யவில்லையென்று இரண்டு மாதங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மறுப்பறிக்கை விடுத்தனர். தமது உன்னத இலட்சியம் குறித்து அவதூறு செய்யும் சக்திகளுக்கு மிரட்டல் விடும் தொனியில் இது அமைந்திருந்தது என்று அச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு சிறையுடைப்புச் சம்பவத்தில் தப்பிச் சென்ற நிர்மலா நித்தியானந்தனின் சொந்தச் சகோதரியான ரஜனி, திரணகம என்ற இடதுசாரிச் சிந்தனை கொண்ட பேராசிரியரைத் திருமணம் செய்திருந்தார். யாழ்.மருத்துவ பீடத்தில் பேராசிரியையாகக் கடமையாற்றிய இவர், பல்கலைக்கழகத்திலிருந்து சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் வீதியில் வைத்துச் சுடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## நோபல் பரிசு பெற்றவர் சமாதான முயற்சியில்

நோபல் சமாதானப் பரிசு பெற்றவரும், ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சோஷலிச எம்.பி.க்களின் அணிக்குத் தலைமை வகிப்பவருமான ஜோன் ஹியூம் என்பவரை இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் தகவலை முக்கிய பொறுப்பு வகிக்கும் அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார். சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட ஹியூம் ஏற்கெனவே விருப்பம் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது. நோர்வேயுடனும் இந்தியாவுடனும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருப்பவர் இவரெனக் கூறப்படுகிறது. அத்துடன் பக்கச் சார்பின்றி நடந்துகொள்ளக் கூடியவரென்றும் வர்ணிக்கப்படுகிறது. இவரது நண்பரான பெர்னான்டோ சொலானா என்பவர் சமாதான முயற்சிகளுக்குத் தேவையான நிதியை ஐரோப்பிய யூனியன் சார்பாக வழங்கக் கூடியவரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நோர்வே தூதுவரின் முகத்தில் சவக் களை!

கொழும்பு, வெள்ளவத்தையில் கடந்த 23ஆம் திகதி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. மத்திய குழு உறுப்பினரான சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம் என்ற இளைஞரின் பூதவுடல் தாங்கிய பேழையை ஈ.பி.டி.பி.யினர் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்னால் வைத்து புதுமையான போராட்டமொன்றினை நடத்தினர். பூதவுடலை ஊர்வலமாக எடுத்துச் சென்றவர்கள் நோர்வேத் தூதரக வாசலில் வைத்துவிட்டுக் கலைந்து சென்றுவிட்டனர். இரண்டரை மணி நேரமாக வாசலில் பூதவுடல் இருப்பதைக் கண்டு பதறிய தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, புலிகளின் படுகொலை நடவடிக்கைகளை நிறுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்ததையடுத்து பூதவுடல் கனத்தை மயானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## ஆஸியிலும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஆபத்து

அவுஸ்திரேலியாவில் செயற்பட்டு வரும் மாற்றுக் கருத்துக் கொண்ட ஊடகவியலாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதுகாப்பளிக்குமாறு இலங்கை ஜனநாயக அரங்கு என்ற அமைப்பு அவுஸ்திரேலிய அரசாங்கத்தைக் கோரியுள்ளது. மெல்போர்னிலிருந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும் மாதாந்த செய்திப் பத்திரிகையான "உதயம்" (யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயனல்ல) பத்திரிகைப் பிரதிகள் இலங்கைத் தமிழரொருவர் நடத்தி வரும் விற்பனை நிலையத்திலிருந்து பலாத்காரமாக அபகரிக்கப்பட்டுத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதை இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் விற்பனையாகும் இந்தச் செய்திப் பத்திரிகை, இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் ஆகியவற்றைக் கண்டித்து வந்துள்ளது. சிட்னியிலிருந்து ஒலிபரப்பாகும் "இன்பத் தமிழ் ஒலி" என்ற வானொலி "உதயம்" பத்திரிகை குறித்துக் காரசாரமான வார்த்தைகளால் விமர்சித்ததையடுத்தே இப் பத்திரிகை எரிப்புச் சம்பவம் நடைபெற்றதாகவும் மேற்படி ஜனநாயக அரங்கு சுட்டிக்காட்டியுள்ளது. இரண்டாயிரமாம் ஆண்டும் "உதயம்" பத்திரிகை எரிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய அரசாங்க வானொலியில் வாராந்த தமிழ் நிகழ்ச்சியொன்றினை நடத்திவரும் சி.நாகராஜாவென்ற ஊடகவியலாளருக்குத் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையும் இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## கனடிய பொங்கு தமிழுக்கு கடைசி நேரத்திலேயே அனுமதி

கனடா, ரொறன்ரோ, குயீன்ஸ்பார்க் மைதானத்தில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்த வேண்டாமென்று ஏற்பாட்டாளர்களுக்கு தடை வித்திருந்த ரொறன்ரோ மாநகர நிர்வாகம் கடைசி நேரத்தில் தனது முடிவை மாற்றிக் கொண்டது. லிபரல் கட்சி எம்.பி.க்கள் சிலரும் இலங்கையைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க தமிழ்ப் புத்திஜீவிகளும் கொடுத்த அழுத்தத்தையும் வன்செயல்கள் ஏற்பட இடமளிக்க மாட்டோமென்ற உறுதிமொழியையும் அடுத்து பகிரங்கமாக விழாவை நடத்த அனுமதி வழங்கப்பட்டது. இதேவேளை ரொறன்ரோ பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக கனடா செல்ல விசாவுக்கு விண்ணப்பித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நான்கு எம்.பி.க்களுக்கு கொழும்பிலுள்ள கனடிய உயர்ஸ்தானிகராலயம் விசா வழங்க மறுத்துவிட்டது.

## யுத்த நிறுத்தத்தின் பின் மன்னாருக்கு மவுசு

இலங்கை அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழ்நாட்டிலிருந்து மன்னாருக்கூடாகப் போதைவஸ்துக் கடத்தல் அதிகரித்திருப்பதாகப் போதைவஸ்துத் தடுப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. பாக்கு நீரிணையை நோக்கியபடி வடமேற்குப் பகுதியிலுள்ள மன்னார் அமைந்திருப்பதால் போதைவஸ்துக் கடத்தலுக்கு இது வசதியாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம் அல்லது தனுஷ்கோடிக்கும் மன்னாருக்குமிடையிலான தூரம் முப்பது கிலோ மீற்றர்களாகும். யுத்த நிறுத்த ஒப்பந்தம் காரணமாக மன்னார் குடாவிலும், மன்னார்க் கரையோரப் பகுதிகளிலும் இலங்கைக் கடற்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறைவடைந்திருப்பதும் போதைவஸ்துக் கடத்தலுக்கு வசதியாக இருக்கிறது என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

போதைவஸ்துக் கடத்தலில் புலிகள் ஈடுபடுகிறார்களாவெனப் பொலிஸ் போதைவஸ்துத் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளர் பூஜித ஜயசுந்தரவைக் கேட்டபோது, "இது குறித்து வலுவான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை. ஆனால் வலுவான சந்தேகங்கள் உள்ளன. புலிகள் போதைவஸ்துக் கடத்தல் மூலமே பெரும்பாலும் பணம் திரட்டுகிறார்களென நம்பப்படுகிறது" என்று கூறினார்.

# முரசம்

## நோர்வே மத்தியஸ்தமும் படுகொலைகளும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

நோர்வேயின் இத்தனை கால மத்தியஸ்தத்தின் பலன் படுகொலைகளைத் தவிர வேறு எதுவுமில்லை. பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமுமில்லை. படுகொலைகள் மட்டுமே தொடர்ச்சியாக நிகழ்ந்தபடியிருக்கின்றன. அவை வர வரத் தீவிரமடைந்திருக்கின்றன. கடந்த வாரத்தில் மட்டும் இரு படுகொலைகள் நடந்திருக்கின்றன. 23ம் திகதி கொல்லப்பட்ட வர்ணகுலசிங்கத்தின் மரணச் சடங்குகள் நிகழ்ந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை மற்றுமொரு படுகொலை யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எப். வரதரணியைச் சேர்ந்த 61 வயது வயோதிபரான வல்லி சுந்தரம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சர்வதேச நாடுகளின் பல தூதுக் குழுக்கள் வன்னி சென்று தமது அதிருப்திகளைத் தெரிவித்தபோதிலும் இத் தொடர் கொலைகளுக்கு எவ்வித முற்றுப்புள்ளியும் காணப்படவில்லை. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இது குறித்துப் பலத்த கண்டனம் தெரிவித்து வருகின்ற போதிலும் அதில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. இந் நிலையில் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வே, இப் படுகொலைகளைக் கண்டும் காணாமல் இருந்துவிட முடியாது. யுத்த நிறுத்த மீறல்கள் என்பது நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு உட்பட்ட அதிக அக்கறைக்குரிய ஒன்று. புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஒன்று. எனவே இது குறித்து நோர்வே மத்தியஸ்தர்கள் வெறுமனே வாளாதிருக்க முடியாது.

நிகழ்ந்தேறும் படுகொலைகள் குறித்து நோர்வே பதில் கூற வேண்டுமெனக் கோரி, நோர்வே தூதுரகத்துக்கு முன்னால தொடர்ந்து பல ஆர்ப்பாட்டங்கள்' நிகழ்ந்தபடியிருக்கின்றன. கொலையுண்டவர்களின் பிரேதப் பெட்டிகளை எடுத்துச் சென்று நோர்வேத் தூதரகத்தின் முன் வைத்து நீதி கோரப்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துவிட்டன. இது உலக அரங்கில் தன்னை நீதிமானாகவும் கௌரவமான மனிதாபிமானமுள்ள - சமாதான அக்கறைகொண்ட நாடாகவும் காட்டிக்கொள்ளும் நோர்வேக்கு ஒரு பாரிய இழுக்காக அமைந்துவிட்டது.

தான் பொறுப்பேற்ற சமாதான நடவடிக்கையொன்றில் தன்னையும் மீறி, தன்னால் பதில் சொல்ல முடியாத அளவு படுகொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவென்றால் தான் மத்தியஸ்துவம் வகிப்பதில் என்ன அர்த்தமுள்ளதென்ற கேள்வியை இது எழுப்பியுள்ளது.

நோர்வேயின் சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சமாதான முன்னெடுப்புகளால் உயிர்ச் சேதம் வெகுவாகக் குறைந்துள்ளதென்று கூறியுள்ளமை இங்கு வேடிக்கைக்குரியதாக உள்ளது.

யுத்தமொன்றில் எழுந்தமானமாக நிகழும் மரணங்களையும் இவ்வாறான தெரிவுசெய்யப்பட்ட படுகொலைகளையும் அளவு ரீதியாக ஒப்பிட முடியாது. இவை பண்பு ரீதியாக வேறுபட்டவை. மக்களின் பிரதிநிதிகளும், கணிசமான மக்களால் வாக்களிக்கப்பட்டவர்களும், நீண்டகால அரசியல் செயற்பாட்டாளர்களும், எழுத்தாளர்களும் திட்டமிட்ட முறையில் கொல்லப்படுவதை வெறும் எண்ணிக்கையாக மட்டும் கணக்கெடுக்க முடியாது. அதன் தாக்கத்தைப் பண்பு ரீதியாக எடைபோட வேண்டும். எண்ணிக்கை கூட அற்ப சொற்பமான தொகையல்லவே. சமாதான ஒப்பந்தத்தின் பின் சுமார் 150 படுகொலைகளுக்கு மேல் நடந்துள்ளன. எனவே, நோர்வே மத்தியஸ்தர்கள் தமது இயலாமைக்கு நியாயம் கற்பிக்காமல் இப் படுகொலைகளை உடனே நிறுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# ஜனாதிபதியின் உரையும் பேச்சுவார்த்தையின் நிலையும்

பேச்சுவார்த்தை முடங்கிப்போயிருக்கும் நிலையிலும், யுத்த நிறுத்த மீறல்கள், அரசியற் படுகொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலும், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக் காதிருக்கும் காரணமாக இலங்கைக்கான வெளிநாட்டு நிதியுதவிகள் இடைநிறுத்தப்பட்டிருக்கும் நிலையிலும், அதேவேளை இலங்கை நாணயத்துக்கு எதிரான டொலரின் விலையேற்றம் மற்றும் எதிர்பாராத அளவு உலகச் சந்தையில் எரிபொருள் விலையேற்றம் என்பவற்றால் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் நிலையிலும், இவற்றையெல்லாம் சமாளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தேடும் வாய்ப்பை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்த அரிய வாய்ப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் 59ஆவது கூட்டத் தொடராக அண்மையில் நியூயோர்க்கில் நடந்த கூட்டமாகும்.

பேச்சுவார்த்தைக்கு முன்வர உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் இந்த ஐ.நா. சபைக் கூட்டத் தொடரைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் குழு தனது ராஜதந்திர நகர்வை மேற்கொண்டது. இத்தகைய கருத்தை உலக நாடுகள் ஏற்குமானால் அது புலிகள் வகுத்துள்ள பிரதானமான திட்டத்தையே உடைப்பதாகிவிடும். இங்கே, ஜனாதிபதியின் குழுவினது உபாயம் என்னவென்றால், பேச்சுவார்த்தையை மேற்கொள்ளச் சொல்லி வலியுறுத் துவதை விடுத்து, பேச்சுவார்த்தைக்கான தடையையிட்டு உலக நாடுகள் பரிசீலிக்க முன்வர வேண்டும் என்பதே. அவ்வாறு முன்வருவார்களாக இருந்தால் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால சுயாட்சி அதிகாரசபை யோசனைகளில் பேச்சுவார்த்தைக்குத் தடையாக அமைந்திருக்கும் அம்சங்கள் என்ன என்பது குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்த முற்படும்.

புலிகளின் இடைக்கால அதிகாரசபையானது தமது சகாக்களை அழைத்துச் செல்ல முடியாது போய்விட்டதுடன் தாமும் போக முடியாது போய்விட்டது. இப்படியான இராஜதந்திரத் தோல்வி களானது பேச்சுவார்த்தை குறித்த பிரதானமான விடயமான இடைக்கால சுயாட்சி அதிகார சபை குறித்தும் தோல்விக்கு வழிவிட்டுவிடுமானால் தமது செயற்பாடு குறித்து பாரிய அதிருப்தி தோன்றிவிடும். அது தமது பிரதிநிதித்துவத்துக்கே கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சம் கூட்டமைப்பினரைப் பீடித்துள்ளது.

இவ்வரிய வாய்ப்பைச் சிறிதளவும் தவற விடக்கூடாதென்று கவனமாக ஆயத்தங்களோடுதான் ஜனாதிபதி இக் கூட்டத்துக்குச் சென்றிருந்தார். இக் கூட்டத்தில் அவரது நோக்கமாக இருந்தது, பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு தனது அரசாங்கம் தயாராகவே இருக்கிறதென்று உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பது, பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முடக்கத்துக்குத் தமது அரசாங்கமல்ல, மறுதரப்பான புலிகளே காரணமென்று எடுத்துக் காட்டுவது, இதனால் பேச்சுவார்த்தையிலேற்பட்டுள்ள முடக்கத்தை நீக்கப் புலிகள் தரப்பை தமது பிடிவாதகரமான நிலைப்பாடுகளைக் கைவிட்டு பேச்சுக்களுக்கு முன்வர வைக்க அழுத்தம் வழங்குமாறு உலக நாடுகளைக் கோருவது, புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராதிருப்பதை முன்னிட்டு, இலங்கைக்கான நிதியுதவியை முடக்கிவைக்க வேண்டாமெனவும், இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகிறது என்பதை கவனத்திலெடுத்து நிதியுதவிகளை வழங்கும்படியும் கோருவது.

ஜனாதிபதி இவ் விஜயத்தில் விடயம், உலக நாடுகளின் முக்கிய தலைவர்களைத் தனித்தனியே சந்திப்பதில்தான அதிக அக்கறை செலுத்தினார். இதற்காக, அவர் செலவீனத்தையும் பொருட்படுத்தாமல், ஆடம்பர ஹோட்டல்களிலும் தங்க நேர்ந்தது. இது குறித்து இலங்கைப் பத்திரிகைகள் சில சர்ச்சை கிளப்பியும் இருந்தன.

எவ்வாறாயினும் இந்த விஜயத்தை திட்டமிட்டபடியே பெரும்பாலும் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டார் ஜனாதிபதி. அவர் இவ் விஜயத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டதானது அவருக்கு மிகவும் சௌகரியமான நிலையை ஏற்படுத்தியிருந்தது. தனது அரசாங்கம் பெரும்பான்மையைக் கொண்டுள்ளதெனவும், அது ஸ்திரத்தன்மை பெற்றுவிட்டதெனவும், நீடித்த காலம் பதவியிலிருக்குமெனவும் உலக நாடுகளுக்கு நம்பிக்கை தெரிவிக்கக் கூடியதாக இவ்விடயம் அமைந்திருந்தது. ஒருவேளை, இ.தொ.கா. இணையமுன்னர் அவர் ஐ.நா.சபைக் கூட்டத்துக்குச் செல்ல நேரிட்டிருந்தால், கேள்விக் குறியில் நிற்கும் தனது சிறுபான்மை அரசாங்கத்தைக் காட்டி உறுதி தெரிவிக்க முடியாதவராய் இருந்திருப்பார். எவ்வாறாயினும் ஆறுமுகம் தொண்டமானின் உதவிக் கரம் அவருக்குத் தக்க தருணத்தில் கைகொடுத்திருந்தது. இதற்காக, ஆறுமுகம் தொண்டமான், அவரது மலையகத்து எதிரணியான மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனாலும், தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாலும் காரசாரமாக விமர்சிக்கப்பட்டு வருவது வேறு விடயம்.

இதேவேளை, ஐ.நா.சபையில் ஜனாதிபதி ஆற்றிய உரையையிட்டுத் தமிழ் கூட்டமைப்பினர் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்திருந்தனர். அவரது உரையில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்து வருகின்றனரென்றும், அதேவேளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியற் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தவற்றையே தமிழ்க் கூட்டமைப்பினர் கண்டித்திருந்தனர்.

இதில் தமிழ்க் கூட்டமைப்பினர் அச்சமடைந்ததற்கும் காரணம் உண்டு. வெறுமனே இவ்வுரை மற்றும் உலகத் தலைவர்களுடனான கலந்துரையாடல்கள் சம்பிரதாய பூர்வமானவையாக மட்டும் இருந்துவிடவில்லை. அவை ஒரு பிரதானமான இராஜதந்திர நகர்வை மையமாகக் கொண்டிருந்தன. அதாவது, இவை புலிகளின் பிரதானமான ஒரு இராஜதந்திரத் தடையை உடைக்கும் முயற்சியாக அமைந்திருந்தன.

புலிகள் பேச்சுவார்த்தைகளுக்குப் பாரிய நிபந்தனையொன்றை முன்வைத்துவிட்டு நிற்கிறார்கள். அதாவது இடைக்கால சுயாட்சி அதிகாரசபை என்ற அவர்கள் திட்டத்தை ஏற்றுப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் அரசாங்கமோ, அத் திட்டத்தை ஏற்கக்கூடிய நிலையில் இல்லை. அரசாங்கத்தில் ஒரு பிரதான பங்கை வகிக்கும் ஜே.வி.பி. அதனைக் கடுமையாக எதிர்க்கிறது. எனவே இடைக்கால சுயாட்சி அதிகாரசபைக் கோரிக்கையை புலிகள் பேச்சுவார்த்தைக்கான ஒரு தடையாகவே பயன்படுத்தி வருகிறார்களென்றும், அவர்கள் அதனைக் கடந்து தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்டதென்பதை புலிகளே தெரிவித்திருந்தனர். இலங்கையின் யாப்புக்குள் நின்று இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென அவர்கள் தெரிவித்திருந்தனர். அதேவேளை, இவ்வரைபில் சில அம்சங்கள், இலங்கையின் இறைமையை கேள்விக்குறியாக்குவனவாக உள்ளன வென்ற விமர்சனமும் ஒருபுறத்தில் கடுமையாக எழுந்திருந்தது. அத்துடன் இன்னும் சில அம்சங்கள் அண்டை நாடான இந்தியாவின் அக்கறைக்கும் உரியனவாக இருந்தன.

எனவே, இந்தத் திட்டத்தையிட்டு உலக நாடுகள் பரிசீலிக்கத் தலைப்பட்டால் அது புலிகளைப் பொறுத்தவரையில் சிக்கலில் வந்து முடியலாம். அந்த வரைபிலமைந்திருக்கும் பேச்சுவார்த்தைக்குத் தடையான அம்சங்களை நீக்கும்படி அல்லது மாற்றும்படி அவை அழுத்தம் கொடுக்க முற்படலாம் அல்லது இடைக்கால அதிகாரசபை யோசனையையே ஒரு நிபந்தனையாகப் பயன்படுத்த வேண்டாமெனவும் அவை கேட்கும்படி ஆகிவிடலாம்.

இப்படியான நிலைமை ஏற்பட்டால், அது புலிகளின் இராஜதந்திரத்துக்கு ஒரு பின்னடைவாகவே அமைந்துவிடும். எனவேதான் அந்த நிலைக்கு விடயம் செல்வதை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டுமென்ற அவசியம் புலிகளுக்கு இருந்தது. ஆனால் புலிகளின் அரசியற் பிரதிநிதிகளாகச் செயற்படும் தமிழ்க் கூட்டமைப்பினர், இந்த இராஜதந்திர நகர்வைக் காலதாமதமாகவே புரிந்து கொண்டனர். அதனால் அவர்களால் விடயங்கள் நடந்து முடிந்ததன் பின்னால் அறிக்கை விடவே முடிந்தது. இவ்வாறான இராஜதந்திர அசிரத்தை குறித்து கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் முன்னரும் பல தடவை விமர்சனத்துக் குள்ளாகியிருந்தனர். அண்மையில்கூட, கஜேந்திரகுமார், சம்பந்தன் ஆகியோர் அமெரிக்கா சென்றிருந்தபோது, அமெரிக்காவின் தென் கிழக்காசியாவுக்கான இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா ரொக்காவுடனான சந்திப்பில் அதிக அக்கறை காட்டாதது

> **இப்போது கூட்டமைப்பினருக்கு வேலை அதிகமாகியுள்ளது. அதாவது இதுவரை இடைக்கால சுயாட்சி அதிகார சபையை முன்னிறுத்திப் பேச்சுவார்த் தைகளை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதொன்றே அவர்களின் வேலையாக இருந்தது. ஆனால் இப்போது, ஏன் இடைக்கால சுயாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென எடுத்து விளக்க வேண்டி ஆகியுள்ளது. அதைத் தமிழ் மக்களுக்குக் கூறுவதல்ல பிரதானம். உலக நாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது.**

தோல்விகரமான விளைவுக்கு இட்டுச் சென்றது குறித்து குறிப்பாக சம்பந்தன் மீது கடும் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதும் கூட, கனடாவில் நிகழ்ந்த பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு, கஜேந்திரகுமார், யோசப் பரராஜசிங்கம் ஆகிய முன்னணி உறுப்பினர்களால்


இப்போது கூட்டமைப்பினருக்கு வேலை அதிகமாகியுள்ளது. அதாவது இதுவரை இடைக்கால சுயாட்சி அதிகார சபையை முன்னிறுத்திப் பேச்சுவார்த் தைகளை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதொன்றே அவர்களின் வேலையாக இருந்தது. ஆனால் இப்போது, ஏன் இடைக்கால சுயாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென எடுத்து விளக்க வேண்டி ஆகியுள்ளது. அதைத் தமிழ் மக்களுக்குக் கூறுவதல்ல பிரதானம். உலக நாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது. அவ்வாறு எடுத்துக் கூறும்போது அதன் சர்ச்சைக்குரிய அச்சங்கள் குறித்து மறுதரப்பினர் சுட்டிக்காட்டும் விடயங்களுக்கு ஆணித்தரமான பதிலளித்து அவற்றை உலக நாடுகள் ஏற்கும்படி செய்ய வேண்டியுள்ளது. இது மிகவும் சிரமமான வேலையென்பது கூட்டமைப்பு அரசியல்வாதிகளுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் இடைக்கால சுயாட்சி அதிகார சபை திட்டத்தின் அம்சங்கள் பற்றி எவ்வித வாதப் பிரதிவாதங்களிலும் இறங்காமல் மேலோட்டமாக, அதனை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று மட்டுமே கூறி வந்தார்கள். ஆனால், இனியும் அதை மட்டுமே கூறிக்கொண்டு இருக்க முடியாது. அதன் சகல அம்சங்களையும் நியாயம் என்று எடுத்துக்காட்டி வாதிட வேண்டும். வாளாவிருந்தால் இது அடிபட்டுப் போகும் ஆபத்துக்கான பழியையும் இவர்களே சுமக்க நேரிடும்.

இதேவேளை, ஜனாதிபதியின் ஐ.நா.சபை விஜயத்தின் போதான இராஜதந்திர நகர்வில் மற்றொரு முக்கிய விடயமும் உண்டு. அதாவது புலிகள் பேச்சுவார்த்தைக்கு வராததன் மூலம் இலங்கைக்கான வெளிநாட்டு நிதியுதவிகளை முடக்கி வைத்திருந்தார்கள். இதில் புலிகள் பயன்படுத்திய இராஜதந்திரமானது, பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்தால் பேச்சுவார்த்தை நடந்தால்தான் நிதியுதவி கிடைக்குமென்ற காரணத்தால் அரசாங்கத்தை தமது நிபந்தனையை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு முன்வரச் செய்வதே. இங்கே, பேச்சுவார்த்தைக்கு முன்வராதிருப்பது அரசாங்கமே என்று புலிகள் கூறி வருகிறார்கள். ஆனால், ஜனாதிபதியும் அரசாங்கமும் இதனை முறியடிக்கும் மாற்று நகர்வொன்றைத் தற்போது முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அதற்கு அவர்கள் பலத்த சாட்சியங்களாகத் தொடர்ச்சியாக நிகழ்ந்தேறி, தற்போது மிகத் தீவிரமடைந்திருக்கும் அரசியற் படுகொலைகளையே பயன்படுத்துகிறார்கள். புலிகள் இத்தகைய படுகொலைகள் மூலம் யுத்த நிறுத்தத்தைத் தீவிரமாக மீறிச் செல்வதனால், முடக்கி வைத்திருக்கும் சர்வதேச நிதி உதவிகளை வழங்கும்படியும், தாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லாதிருக்கும் வரை இந் நிதியுதவிகள் முடக்கப்பட் டிருக்குமென்ற கருத்திலேயே புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வராதிருக்கிறார்களென்றும், இந்த நிதி முடக்கத்தைத் தளர்த்தி அதனை வழங்க ஆரம்பித்தால் அத்தகைய தந்திரோபாயம் பலிக்காதென்பதை உணர்ந்து பேச்சுவார்த்தைக்கு வருவார்களென்றும் கூறி, இந்த இராஜதந்திர முயற்சி அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படுகிறது. ஆரம்பத்தில் அதிக அக்கறை செலுத்தாவிடினும் தற்போது தீவிரமடைந்திருக்கும் அரசியல் படுகொலை களையிட்டு மிகுந்த விசனமடைந்திருக்கும் சர்வதேச சமூகம், அரசாங்கத்தின் கோரிக்கையை செவிமடுக்க ஆரம்பித்துள்ளது. உலகின் பிரதானமான நாடுகள் பல தமது பிரதிநிதிகளை நேரடியாக அனுப்பி புலிகளிடம் தமது அக்கறையைத் திரும்பத் திரும்பத் தெரிவித்தும் கூட, அரசியற் படுகொலைகள் மென்மேலும் அதிகரித்துச் செல்கின்ற போக்கு அவர்களின் சிந்தனையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலைமையைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம், தனக்கான வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள விழைகிறது. இ.தொ.கா அரசாங்கத்துடன் இணைந்து அதனைப் பெரும்பான்மை அரசாங்கமாக உறுதிப்படுத்திவிட்டதும் இந் நிதியுதவிகளுக்கான மற்றொரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இம் முயற்சி சாத்தியப்படுமானால் அது புலிகளின் பிரதிநிதிகளது செயற்பாட்டுக்கு ஒரு பலத்த பின்னடைவாக அமைந்து விடும்.

# இ.தொ.கா. VS ம.ம.மு. மோதலில் கூத்துப் பார்க்கும் கூட்டமைப்பு





நாட்டின் ஸ்திர நிலை மிக மோசமாகப் பாதிப்படைந்து வருவதை, அடுத்தடுத்து நடந்து வரும் படுகொலைகள் தெளிவுபடுத்துகின்றன அரசியல் எதிரிகளைக் கொன்று குவிக்கும் இப் படுகொலைகளை நியாயப்படுத்தும் ஊடகங்களின் நிலைகளை எவரும் கண்டுகொண்டதாக இல்லை. உளவுத்துறை சார் நடவடிக்கையில் புலிகள் வெற்றிகொண்டு வருவதால் நாலாங் கட்ட ஈழப் போர் உடனடியாக ஆரம்பிக்கச் சாத்தியமில்லை என்றவாறாக ஊடகங்கள் எழுதுகின்றன. ஜனநாயகத்தின் முதுகெலும்பென்று கூறப்படும் ஊடகங்கள் வன்முறையையும் படுகொலைகளையும் ஊக்குவிப்பவையாக மாறிப்போயிருப்பது துரதிர்ஷ்டம்தான். இப்படி ஒரு பக்கம் படுகுழிப் பயணம் என்றால் மறுபக்கம் அரசியல் குத்துக்கரணங்கள். சிறுபான்மையான அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாது என்று புலிகளும், உங்களிடம் இருக்கும் இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை வழங்கி பெரும்பான்மையைப் பெறச் செய்து பேச்சுக்களை நடத்தலாமே என அரசியல் ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டு வந்தனர். இப்போது சிறுபான்மை அரசு என்ற மாயை கிழிக்கப்பட்டுள்ளது. இ.தொ.கா.வின் நிபந்தனையற்ற ஆதரவு இந் நிலையைத் தோற்றுவித்துள்ளது. தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் முறிந்துபோய்விடக்கூடிய ஆபத்தான கட்டத்தை அடைவதால் அதிலிருந்து திசை திருப்பி, சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே தாம் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக இ.தொ.கா. தெரிவித்துள்ளது.

இ.தொ.கா.வின் இக் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதிலிருந்து இன்றைக்கு வரைக்கும் நாட்டில் நடைபெற்று வரும் வன்முறைகள், படுகொலைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றால் பாரிய யுத்த நிறுத்த மீறல்கள் நடக்க ஆரம்பித்துள்ளன. இவை தவிர, சட்டம், ஒழுங்கு தொடர்பில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் அவ்வப்போது நடைபெற்று வரும் நிகழ்வுகள், குறிப்பாக மட்டக்களப்பில் படையினரே தம்மைத் தாக்குகின்றனர் எனவும் இதனால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் புலிகள் கூறி வருவதானது மக்கள் மத்தியில் சமாதானத்துக்குப் பதிலாக மீண்டுமொரு யுத்தமே தம் மீது திணிக்கப்படப் போகிறது என்ற பதற்றமான சூழலில், சமாதானப் பேச்சுக்களை அரசு ஆரம்பிப்பதற்கு இசைவாக தாம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக இ.தொ.கா. தெரிவித்தது.

இ.தொ.காவிலிருந்து பிரிந்து சென்று இன்று தனிக் கட்சியாக இயங்கும் மலையக மக்கள் முன்னணி, இ.தொ.கா.வின் நேரடி எதிர் அரசியலில் குதித்துள்ளது. "தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும்" என்பது போல, ம.ம.மு.வின் அரசியல் செயற்பாடுகள் உள்ளதாக, மலையகம் ஒருநாள் ஒளிரும் என்ற கனவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

மலையக மக்கள் பிரச்சினைகள், வட-கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது தீர்க்கப்பட வேண்டும் என்றும் இதற்கான முயற்சிகள் தோற்கடிக்கப்படும்போது வட-கிழக்கு மக்களுடன் இணைந்து போராடவும் தயார் எனவும் முழங்கி வரும் இவர்கள், அரசாங்கத்துடன் இணைந்து அரசியல் நடத்தாதவர்களா? இ.தொ.கா.விலிருந்து பிரிந்தவுடனேயே வட-கிழக்கு மக்களின் போராட்டத்துடன் இணைந்து போராடியிருக்கலாமே! அதுவும் செய்யாமல் யூ.என்.பி.அரசு அதிகாரத்தில் இல்லை என்பதற்காகவும், சொகுசான உலகம் சுற்றும் வாழ்க்கை இல்லை என்பதற்காகவும் வீரம் கொப்பளிக்கப் பேசுவது வேடிக்கையானது. அரசுடன் இணைந்து கொள்வதால் மட்டும் தமது கோரிக்கைகள் அத்தனையையும் நிவர்த்தித்துக் கொள்ள முடியும் என்றும் கூற முடியாது. பேரம் பேசும் சக்தியைப் பெறுவதும், கோரிக்கைகளில் வலுச் சேர்ப்பதும் பிரதானமாகலாம்.

அந்த வகையில் இ.தொ.கா. சில அமைச்சுக்களைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னைய அரசில் பிரஜா உரிமைக்காகக் குரல் கொடுத்து வெற்றி கண்டதும்.

அப்போது தமக்கிருந்த ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினரை அரசுக்கு வழங்கி அரசில் பங்குகொள்ளவில்லையா? அந்த ஆதரவுக்காக மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றிகள் என்ன?

இ.தொ.காவிலிருந்து பிரிந்தபோது நுவரெலியாவை மையமாக வைத்து மலையக மக்களுக்கு சுயாட்சி அல்லது மாவட்ட சபை அமைப்பது என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டதே, அவை இப்போது எங்கே? காலத்துக்குக் காலம் வீரதீர வெற்றுக் கோஷங்களைத் தூக்கிக் கொண்டு திரிபவர்கள் மலையக மக்களுக்காக எதையும் செய்து முடித்ததில்லை. இனி எதிர்காலத்திலும் முடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் அந்த மக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

> **சமாதானத்தின் பேரால் நடைபெற்று வரும் படுகொலைகளையும் வன்முறைகளையும் கூட கண்டிக்க முடியாத நிலையிலிருக்கும் எவரும் அவர்கள் சார்ந்த சமூகத்தின் விடிவுக்காக உறுதியோடு செயற்பட முடியாது என்பதை சமகால நிகழ்வுகள் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன. வட-கிழக்கில் தற்சமயம் நிலவுகின்ற அரசியல் வேலைத்திட்டமானது வெறுமனே இயந்திரத்தனமானதாகவும் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காததாகவுமே உள்ளது.**

சமாதானத்தின் பேரால் நடைபெற்று வரும் படுகொலைகளையும் வன்முறைகளையும் கூட கண்டிக்க முடியாத நிலையிலிருக்கும் எவரும் அவர்கள் சார்ந்த சமூகத்தின் விடிவுக்காக உறுதியோடு செயற்பட முடியாது என்பதை சமகால நிகழ்வுகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன. வட-கிழக்கில் தற்சமயம் நிலவுகின்ற அரசியல் வேலைத்திட்டமானது வெறுமனே இயந்திரத்தனமானதாகவும் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காததாகவுமே உள்ளது. இதையேதான் மலையகத்திலும் நடைமுறைப்படுத்த முனைவதும், வட-கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்படும்போது மலையக மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படுமென்பதும் நிலாச்சோறு சாப்பிடுவதற்கு ஒப்பாகும்.

இந்த இழுபறியில் இ.தொ.கா.வையும், ம.ம.மு.வையும் மோதவிட்டு தமிழ் கூட்டமைப்பினர் வேடிக்கை பார்ப்பது விந்தையானது. இருபத்திரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டும் உதவாத்தனமாக இருந்து கொண்டிருக்கும் நிலையில் மலையக அரசியலில் மூக்கை நுழைப்பது எந்த வகையில் மலையக மக்களுக்குப் பிரயோசனமளிக்கப்போகிறது.

மலையக மக்களின் பிரஜா உரிமைப் பறிப்புக்கு துணைபோன தமிழ்க் காங்கிரஸை ஒரு அங்கமாகக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு எந்த முகத்தோடு மலையக மக்களின் விவகாரங்களில் தலையிட முடியும்?

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான ரவிராஜ் இவ்விடயம் பற்றிப் பேசும்போது திம்புப் பேச்சுவார்த்தைகளின்போது மலையக மக்களின் பிரச்சினைகளும் எம்மால் முன்வைக்கப்பட்டன என்று அடிக்கடி கூறுகிறார். திம்புப் பேச்சுவார்த்தையில் பேசப்பட்டது உண்மைதான். யாரால் முன்வைக்கப்பட்டன. ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தால்தான் வாக்குரிமை தொடர்பான கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பேசப்பட்டது. திம்புப் பேச்சுக்களில் பங்குகொண்ட ஏனைய அமைப்புக்களான எல்.ரீ.ரீ.ஈ., ரெலோ, ஈரோஸ், கூட்டணி, புளொட் ஆகியோர்களால் இதுபற்றி எதுவும் பேசப்படவில்லை. இதற்கு அடுத்தபடியாக பெங்களூர் பேச்சுவார்த்தைக்கு எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது கூட, தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலே பேச்சுகளுக்கு வரமுடியுமென பிரபாகரன் பிடிவாதமாக நின்றதால் அதுவும் தடைப்பட்டது. அதாவது அச் சமயத்தில் கூட மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து எவரும் அக்கறைப்படவில்லை.

இப்போது மட்டும் எங்கிருந்து வந்ததோ இந்தத் தமிழ்ப் பற்று. மலையகத் தமிழர்கள் இப்போது மோட்சம் பெற்று விட்டார்கள் என்று கூறவில்லை. இதைவிடவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அந்த காலகட்டத்திலேயே அவர்களைப் பற்றி எவ்வித அக்கறையும் எடுக்காதவர்கள் இப்போது எதிர்ப்பு அரசியலுக்காக நடந்துகொள்வதுதான் கவலையளிக்கிறது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தனும் இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஸு ம் கலந்துகொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் மலையக விவகாரங்களைப் பற்றிப் பேசப் போய் வசமாக மாட்டிக்கொண்ட நிலைமை, நிகழ்ச்சி நடத்துபவருக்கும், கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கும், புலிகளுக்கும் தர்மசங்கடமாக அமைந்தது.

*அலசுவது*

**- மதியூகி -**

வட - கிழக்கில் நிலைமை தலைகுத்தாகச் சீரழிந்து கிடப்பதையும், இப் பகுதி மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகங்கொடுப்பதையும் மறுநாள் குறித்த விடியலில் நம்பிக்கை இழந்து ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டிருப்பதையும் குறித்து எவ்வித ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்க முடியாமல், எடுக்க திராணியில்லாமல், அவர்களின் கண்ணீரைத் துடைக்க சுயமாகத் தன் விரல்களை நீட்ட முடியாமல் இருக்கும் நீங்கள் இ.தொ.கா. அரசுக்கு ஆதரவு வழங்கியதைப் பற்றி பேசுவது, அதன் மீது சேறு பூசுவதற்காக உண்மைக்குப் புறம்பாக பேசுவதும் ஏன் என்று கருத்துப்பட கேட்டாரே! அந்தக் கேள்விக்கு இன்றைக்கு வரைக்கும் எவரும் பதில் கூறவில்லை. ஏனெனில் அக் கேள்வியில் பலத்த நியாயம் உள்ளது. ஒற்றை விரலை எதிரியின் பக்கம் நீட்டும் போது மற்ற விரல்கள் நம்மையே சுட்டி நிற்கின்றன என்பதை இனியாவது கூத்துப் பார்க்கும் கூட்டம் புரிந்து கொண்டால் சரி. ●

## அதிரடி அய்யாத்துரை



**கனடாப்** பொங்கு தமிழ் முந்தின மாதிரிக் களைகட்டாமல் துவண்டு போனதுக்கு என்ன காரணமெண்டு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் விசாரிச்சு வருகினமாம். முன்னமெல்லாம் 70, 75 ஆயிரமெண்டு வாற சனம், 10 ஆயிரத்துக்குள்ள முடங்கிப்போனது தான் கேள்வியாக் கிடக்காம். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நிலமையை அறிஞ்சு அதுக்குத் தக்கபடி அக்கறை காட்டயில்லையெண்டு தமக்கு மேல பழியச் சுமத்திப்போடப் போறாங்களெண்டு பயந்து போய் இருக்கினமாம். ஆதரவாளர்களெண்டு ஷோக் காட்டிக்கொண்டு விலாசம் காட்டித் திரியிறவை கனபேர். பொறுத்த நேரத்தில பின்னடிச்சிட்டாங்களெண்டு நிகழ்ச்சிக்காறருக்கு கடுப்பாம். அவை என்ன செய்யிறது, கனடா அரசாங்கம் இலங்கைப் படுகொலைகளில விசனமடைஞ்சிருக்குது. தூதுவர் நேர போய்ச் சொல்லியும் மதிச்சதாத் தெரியேல்லை. இந்தத் தருணத்தில கனடா ஊர்வலங்களில மும்முரங் காட்டப்போய் முகத்தை நீட்டினால், எக்கணம் ஏதும் ஏடாகூடமாய் நடக்கிற நேரத்தில பிடிச்சு அனுப்பிப் போட்டால் பிறகு நிண்டு முழுச ஏலுமே எண்டுதான் கொஞ்சம் முன்யோசனையாப் பின்வாங்கியிருக்கினம் போல. அதுவும் சரிதான். உச்சக் கொப்பில ஏற ஏறக் கை தட்டிறவை, எக்கணம் முறிஞ்சு விழுந்தால் மருந்துக்கும் உதவுவினமோ?

**அமெரிக்கா** வரை போய் வந்த கஜேந்திரகுமாருக்கும் கனடாவுக்குப் போய் வர ஏலாத நிலை. மூத்த கூட்டணி அமைப்புத் தலைவர் யோசேப் பருக்கும் கூட விசா மறுத்திட்டினமாமே? தாங்களே போக ஏலாத நிலையில பாவம், புதுமுகங்கள், கஜேந்திரன், பத்மினி எண்டு கூட்டிக்கொண்டு போக வெளிக்கிட்டு இப்ப அவையின்ர பாஸ்போட்டுகளிலயும் களங்கக் கறையப் பிரட்டிப்போட்டு நிக்கினம். மூஞ்சுறு தான்போகக் காணேல்லை, துடப்பங்கட்டையையும் தூக்கிக் கொண்டு போக வெளிக்கிட்ட கதையாகிப் போட்டுது கடைசியா. ஈழத்து வேந்தனார் இந்தியா போக வெளிக்கிட்டுத் திரும்பி அனுப்பப்பட்டதை முட்டாள்தனமெண்டு முடைஞ்சு வைச்ச ஆக்கள், இப்ப தாங்கள் தடுக்கி விழுந்ததை என்னவெண்டு சொல்லப்போகினம்? பொங்கு தமிழுக்குப் போக வெளிக்கிட்டதாலதான் விசா மறுத்திட்டாங்களெண்டு வெளியால சொன்னால், கனடா அரசாங்கம் பொங்கு தமிழுக்கு ஆதரவாயில்லையெண்டெல்லோ அர்த்தமாய்ப் போயிடும்? விசாவுக்கு அப்ளை பண்ணச் சுணங்கிப் போட்டுதெண்டு ஒரு கதை விடலாமெண்டு பாத்தாலும், உவையின்ர அக்கறை உவ்வளவுதானோ எண்டெல்லே கதைப்பாங்கள். எல்லாமே வில்லங்கமாப் போட்டுது. வட் ட்டு டு?

**பொங்கு** தமிழெண்டு கனடாவில கொண்டாடிற நேரத்தில, எங்கட சங்கரி ஐயா விட்ட அறிக்கையில கேட்டிருக்கிற கேள்விகளைப் பாத்தியளோ? "யாழ்.மாணவற்ர கல்விக்கு விழுந்த பூட்டாய், பூட்டப்பட்டிருந்த யாழ்.நூலகத்தைத் திறக்கச் சொல்லி எந்த மாணவனும் பொங்கி எழயில்லை. இந்த நிலையில புலம் பெயர்ந்த நாட்டில பொங்கித்தான் என்ன பயன்" எண்டு கேட்டிருக்கிறார். கேள்விதானே! "தமிழனைத் தமிழன் கோழைத்தனமாய்க் கொல்வதை நிறுத்த புலம் பெயர்ந்த மக்கள் பொங்கி எழ வேண்டும். சொந்த மண்ணில் உயிர்வாழும் உரிமை மறுக்கப்பட்டு, வெறும் உரிமைகளுக்காக மட்டும் பொங்கி என்ன பயன்?" எண்டும் கேக்கிறார். அதோட அவர் சுட்டிக்காட்டியிருக்கிற பொயின்ற் ஒண்டையும் பிளீஸ் நோட் இற்! விடுதலையெண்ட பேரில ஆயுத இயக்கங்களால கொல்லப்பட்ட தமிழற்ர எண்ணிக்கை இராணுவத்தால கொல்லப்பட்டதையும் விஞ்சி நிக்குதாம்! எல்லாரும் நடிக்கினமெண்டு எங்கட வானொலிகளும் பத்திரிகைகளும் மாணவர்களும் மக்களும் நடிக்க வெளிக்கிட்டிட்டா, எங்கள் ஒவ்வொருவரின்ர மரண ஓலத்திலும் இன்னொரு தமிழன் பொங்கிக்கொண்டுதான் இருப்பான் என்கிறார். வட் டு யூ ஸே? என்ன சொல்லுறியள்?

**பொடா** சட்டத்தை நீக்கி இந்தியா ரெண்டெழுத்தார் மீதான தடைச் சட்டத்தையும் நீக்க வேணுமெண்டு கேக்கினம். தவறான சம்பவமொண்டைப் பற்றித் தவறான கொள்கை வகுப்பார்கள். தவறாக எழுந்த முடிவு அந்தத் தடையெண்டு சொல்லினம். எல்லாஞ் சரிதான். ஆனால் இங்கை இன்னும், தவறாமல் கிழமைக்கு ஒருத்தரா விழுந்துகொண்டிருக்கிறது எந்தத் தவறான கொள்கை வகுப்பாளற்ர முடிவு எண்டு, இதை வாசிச்ச ஒருத்தர் கேட்டார். உண்மைதானே! அந்தப் பெரிய இந்திய அரசாங்கம் பொடா சட்டத்தையே நீக்கிவிட்டுது. இங்கை நம்மாக்கள் இன்னும், "போடுற" சட்டத்தை நீக்கேல்லையே!

**வகைதொகை** இல்லாத அளவுக்குக் கொலைகள் நடக்கத் தொடங்கிவிட்டுது. என்ன நடக்குதெண்டு எல்லாருக்கும் நல்லாத் தெரியுது. வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள் திரும்பத் திரும்பக் கத்திப் பாத்தும் செவிடன் காதில ஊதின கேஸாக் கிடக்குது. ஆனால், வலு சிம்பிளா, 'இது மாற்றுத் தரப்புக்கள் உள்முரண்பாட்டால தங்களுக்குள்ள நடத்திற விஷயம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கதானே நடக்குது; ரெண்டெழுத்தாற்ர பகுதிக்க இல்லையே' எண்டு குழந்தைப்பிள்ளைக் கதை சொல்லுகினம். ஊருக்குள்ள ஆடுகள் சாகிறது தங்களுக்குள்ள அடிபட்டுத்தான். காட்டுக்குள்ள செத்திருந்தால் மட்டுந்தான் ஓநாய்க்குச் சம்பந்தம் எண்ட கதையாக் கிடக்கு.

**எங்கட** புரட்சிகரக் கட்சி, ஈபித் தலைவர் சுரேஷ் பிரேமர் சொல்லுறதக் கேட்டு அழுகிறதா சிரிக்கிறதா தெரியேல்லையுங்கோ. கிழக்கு நிலமையாலதான் கொழும்பிலயும் கொலைகள் நடக்குதாம். கொலைகளை நிறுத்த முடியாட்டிலும் நியாயப்படுத்தாமல் இருந்தாலாவது மனசாட்சிக்கு இதமாயிருக்குமெல்லோ? 86இல அவற்ர தலையும் பறிபோக இருந்து, தலைமறைவாயிருந்தெல்லே தப்பி வந்தவர். பேப்பரில "சுரேஷ் பிடிபட்டிட்டார். மற்றவையெல்லாம் சரணடையுங்கோ" எண்டெல்லாம் தலைப்பு வந்ததெல்லே? எல்லாம் மறந்தாச்சுது. அந்த நேரத்தில் அவரைக் கொல்லவும் ஒரு நியாயம் சொல்லிக்கொண்டுதான் தேடினவை. அவரோட சேர்ந்த சகாக்கள் கனபேர் கொல்லப்படேக்கயும் அந்த நியாயந்தான் சொன்னவை. பிறகு, அவற்ர தலைவர் பத்மநாபா கொல்லப்படக்கேயும் சுரேஷார் மயிரிழையில தப்பிக்கொண்டவர். அதுகளெல்லாம் நியாயந்தானெண்டு ஓப்பினாச் சொல்லிப்போட்டு இதுகளை நியாயப்படுத்த வெளிக்கிடுகிறது நல்லது. "சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி - கிளியே" எண்டு பாரதி பாடினான். இங்கை துப்பாக்கியால சாதல் கண்டும் நியாயப்படுத்தவெல்லோ வெளிக்கிடுகினம்!

**தனியார்** தொலைக்காட்சி விவாத நடத்துநர் ஒருவர் நெடுகிலும் ஒருபக்கத்து ஆக்களையே திரும்பத் திரும்பக் கூட்டிவந்து சமா வைச்சபடி இருக்கிறது அலுப்புத் தட்டுது. ஏன் நீங்கள் மாற்றுத் தரப்பாரை விவாதத்துக்குக் கூப்பிடுறதில்லை. விவாதமெண்டால் ரெண்டு தரப்புமெல்லோ விவாதிக்க வேணும்? ஒரு தரப்பு இல்லாத நிலையில மற்றத் தரப்பு அவைக்கெதிரா எதை வேணுமெண்டாலும் அடுக்கிக்கொண்டு போகலாந்தானே? உதென்ன விவாத மேடையா, இல்லை பிரசார மேடையா எண்டு கேக்க வெளிக்கிட்டிருக்கினமாம் ஆக்கள். என்ன சொல்லப் போறார்? ●

# 20ஆம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளைத் தொகுக்க விரிவான ஏற்பாடு

## படைப்புகளை அனுப்பி உதவுமாறு கவிஞர்களிடம் கோரிக்கை

சென்ற 20ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தரமான ஈழத்துக் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிட இருப்பதாக பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ.ஸ்ரீதரசிங் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கவிதை வரலாற்றில் ஈழத்துக் கவிதைகள் 20ஆம் நூற்றாண்டிலேயே கவனிப்புக்குரியனவாகவும் முக்கியத்துவமுடையனவாகவும் அமைந்திருக்கின்றன. எனவே, 20ஆம் நூற்றாண்டின் ஈழத்துக் கவிதைகளை ஒரே பார்வையில் நோக்கக்கூடியதாகத் தொகுக்கும் முயற்சியொன்று மிகவும் அவசியமானதாகும். ஏலவே திரு.ஆ.சதாசிவம் அவர்கள் சுதந்திர காலத்திற்கு முற்பட்ட ஈழத்துக் கவிதைகளை 'ஈழத்துத் தமிழ்க் களஞ்சியம்' என்னும் தலைப்பில் தொகுத்தளித்துள்ளார். அத் தொகுப்பிற்குப் பின்பும் 'மரணத்துள் வாழ்வோம்', 'வேற்றாகி நின்றவெளி', 'ஈழத்துக் கவிதைக்கனிகள்' முதலிய தொகுப்பு நூல்கள் சில வெளிவந்துள்ளன. எனினும் இத் தொகுப்பு நூல்களிலும் அடக்கப்படாத தரமான கவிதைகள் பல காணப்படுகின்றன என்பது இன்று உணரப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே, கட்சி, குழு பேதமின்றி நடுவுநிலையோடு தரமான ஈழத்துக் கவிதைகளைத் தொகுக்க இருப்பதாகவும் அத் தொகுதிக்குப் பயன் செய்யத் தக்க தமது நூல்களையும், இதழ்களில் வெளிவந்த கவிதைகளின் புகைப்படப் பிரதிகளையும் கவிஞர்கள் அனுப்பி உதவ வேண்டுமென்றும் **பூ.ஸ்ரீதரசிங்** தெரிவித் துள்ளார். தமது கவிதை நூல்களில் மேலதிகப் பிரதிகள் இல்லாதோர் அவற்றுள் வெளிவந்த மிகத் தரமான சில படைப்புக்களை போட்டோப் பிரதி எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவலாம். அமரர்களாகிவிட்ட கவிஞர்களுடைய படைப்புக்களை அவர்களுடைய குடும்பத்தினரோ, நண்பர்களோ அனுப்பி உதவும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கவிதைகளை அனுப்புவோர் கூடவே கவிதை வெளிவந்த நூலின் பெயர், வெளியிடப்பட்ட ஆண்டு. வெளியீட்டாளர் விபரம், கவிதை வெளிவந்துள்ள பக்க விபரம் போன்றவற்றை நிச்சயமாக இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். புனைபெயர்களில் கவிதைகளைப் பிரசுரிக்க விரும்புவோர் தமது சொந்தப் பெயர் விபரத்தையும் இணைத்து அனுப்பவும். சகல கவிஞர்களும் தங்களது சுருக்கமான சுயவிபரக் கோவைகளை இணைத்து அனுப்பவும்.

கவிதைகள் யாவும் தரமான நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும். ஈழத்துக் கவிதைகள் பற்றி தமிழ்நாடு உள்ளிட்ட பிறநாடுகளில் போதிய அறிமுகம் இன்னும் ஏற்படாமையால் வெளியிடப்படவுள்ள தொகுப்பை தமிழ்நாட்டில் பிரசுரிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகுப்பு செட்டியார் தெருவில் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையின் புதிய காட்சியறையினது திறப்பு விழாவின்போது வெளியிடப்படவுள்ளது. கவிதை நூல்களையும், கவிதைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:

**Compiler - Tamil poems,**
**R.P.Sritharashing,**
**Poobalasingham Book Depot,**
**340, Sea Street, Colombo - 11.**


**லண்டன், பாரிஸ்**
**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

25.09.2004 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:
**02087678004 - 07984803488 - 07833341693**
**E-mail : homoeocare@rediffmail.com**
இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513
ஒக்டோபர் மாத இலங்கை விஜயம் 25.10.2004 முதல் 29.10.2004 வரை



**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.
☎ 067-2250349



# விளம்பரப்பகுதி

**தெய்வீக மருத்துவம்**
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219
**டாக்டர் பாலுசோதிடர்** S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Sri Lanka
Head Office
Batticaloa
Tele/Fax 065-2224825,00940777032844

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு
Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

# மலையாள மாந்திரீக சக்தி
# கை கண்ட பலன் பெற




பேராசிரியர் கருணாகரபூஷணம் உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி

**எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்**

பிரிந்தவர்கள் ஒன்றுசேர, திருமணம் கைகூட, காதலில் வெற்றிபெற, பிரயாண தடை நீங்க, வியாபாரம் விருத்தியடைய, கல்வி ஞானம் பெற, கூந்தல் வளர, இளநரைக்கு திட்டவட்ட ஔஷதம் பெற, கூந்தல் கறுக்க, இன்னும் பல தேவைகளுக்கு தெட்டத்தெளிவான ஜாதகம் எழுதிக்கொள்ள, இப்படியான பல பிரச்சினைகளுக்கு தெய்வீக அருள் ஆசியுடன் வெற்றி பெற்றோர் எத்தனை எத்தனையோ, மாந்திரீகர்கள் இருந்தாலும் வாடிக்கையாளர்கள் என்னை தேர்ந்தெடுப்பதன் காரணம் எனது வேலையின் புனிதத்தன்மையே. முடியாத வேலைகள் இங்கு பாரம் எடுப்பது கிடையாது.



ருக்மணி ராஜகிரிய!
**மதிப்பிற்குரிய P. K. சாமி ஐயா அவர்களுக்கு!**
நான் எனது மகனுக்கு 30 வயதாகியும் திருமணம் நடக்க வில்லை என மனவருத்தத்தில் இருந்தேன். என்றுமே நல்ல காரியங்களை மட்டும் செய்து வரும் உங்கள் சேவையைக் கேள்விப்பட்டு அத்தோடு நம்பிக்கையுடன் உங்கள் சந்நிதானத்தை அடைந்தேன். நீங்கள் கூறிய அறிவுரைகளையும் பரிகாரங் களையும் செய்து நம்பிக்கையுடன் காத்திருந்தேன். எனது நம்பிக்கை வீண்போகவில்லை. எனது மகனுக்கு திருமணம் நிச்சயமாகவுள்ளது. உங்களுக்கு நாங்கள் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.



இந்துமதி கேதீஸ்வரன், கொழும்பு 15!
**கனம் ஐயா அவர்களுக்கு!**
நான் உங்களிடம் 28.02.2004 அன்று முதன்முதலில் வந்தேன். எனது கணவர் 04.02.1995 அன்று கனடா சென்றடைந்தார். 11.01.1995 அன்று எங்கள் திருமண பதிவு நடைபெற்றது. கனடா சென்று 2 வருடம் என் மீதும் மகன் மீதும் நல்ல அன்புள்ளவராக இருந்தார். அதன் பின்பு என்ன காரணமோ தெரியாது திடீரென்று எங்களுடன் எந்த தொடர்பும் இல்லை. மீண்டும் 98ஆம் ஆண்டு கொஞ்சக்காலம் கதைத்தார். மீண்டும் தொடர்பு இல்லை 99ஆம் ஆண்டு அப்படியே சிறிது காலம் கதைத்தார். பின்பு தொடர்பு இல்லை. 2004ஆம் ஆண்டு 8ஆம் மாதம் கதைத்து 2000ஆம்ஆண்டு டிசம்பர் மாதத்துடன் தொடர்பு இல்லை. பின்பு 2001 6ம் மாதம் பணம் அனுப்பி கதைத்ததன் பின்பு 7ஆம் மாதம் 14 அல்லது 15ஆம் திகதியுடன் ஒரு தொடர்பும் இல்லை. மீண்டும் 2003ஆம் ஆண்டு பணம் அனுப்பி கதைத்தார். அதுவரை நானும் மகனும் பட்ட கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. இப்பொழுது தொடர்ந்து கதைக்கிறார். பணமும் அனுப்புகிறார். அதுவும் 26.05.2004 அன்று எனக்கும் அவருக்கும் சிறு பிரச்சினை காரணமாக என்னிடம் கதைக்கவில்லை. மகனுடன் கதைக்கின்றார். ஐயாவிடம் நான் வேண்டுவது என்னையும் என் மகனையும் வெகு விரைவில் Landed Paper கிடைத்து Poncer செய்து கனடா அனுப்பி வைக்க வேண்டும். குடும்பம் ஒற்றுமையாக சுபீட்சமாக வாழ வேண்டும் என்பதே. ஐயா உங்களிடம் வந்து கதைத்து ஆசீர்வாதம் பெற்று கோயிலில் அமர்ந்தவுடன் மனதின் பாரம் குறைந்து நிம்மதியாகவும், நம்பிக்கையாகவும் இருக்கின்றது.

பரில, கெகிராவ!
**டாக்டர் ஐயா அவர்களுக்கு!**
எனது கணவர் என்னைத் தவிர இன்னொரு பெண்ணுடன் (கியானா) தொடர்பு கொண்டிருந்தார். அதை நிறுத்தி என்னோடு ஒற்றுமையாக இருக்குமாறு 2002ம் ஆண்டு 500 ரூபாவுக்கு மணியோடர் மூலம் பரிகாரம் செய்தேன். அப் பரிகாரத்தில் எனது கணவர் மனம் திருந்தி என்னோடு ஒற்றுமையாக இருக்கின்றார். ஆனால் இப்பொழுது மீண்டும் அவர் பழைய தொடர்பு வைத்துள்ளாரா என்று எனக்கு சந்தேகமாக இருக்கின்றது. ஐயா அவர்கள் அப்படி ஏதும் இருந்தாள் அதை வெட்டி என் கணவனை மீண்டும் எனக்குத் மீட்டு தர வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.
நன்றி

அஜந்தா வெள்ளவத்தை!
அன்புள்ளம் கொண்ட பேராசிரியர் சாமி ஐயா அவர்களுக்கு!
ஸ்ரீ துர்க்கை அம்மனுக்கும் இப் பதிவேட்டில் நான் கூறுவதென்ன வென்றால் அன்புள்ளம் கொண்ட பெரியவரே 2000ஆம் ஆண்டில் தங்களிடம் செய்த பரிகாரம் காரணமாக எனக்கு தந்த குறைகளை ஸ்ரீ துர்க்கையிடம் கூறாமல் இருக்க முடியாது. அருள் உள்ளம் கொண்ட ஐயா நித்திரையில் பாம்பு கனவு, பேய்கள் விரட்டும் கனவு அடிக்கடி ஏற்படும். ஐயா தங்களின் பரிகாரத்தின் பின்பு இப்பொழுது கடவுள் கனவு, அம்மன் கனவு ஏற்படும். மேலதிகாரிகளின் ஆசீர்வாதமும் ஏற்பட்டுள்ளது. வீட்டில் ஒளி பிரகாசித்துள்ளது. இன்னும் எனக்குப் பல நன்மையான பலன்கள் ஏற்பட ஐயாவின் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கின்றேன். ஐயா எனது தலை நரையைப் போக்க உதவி புரிந்தமைக்கு நன்றி.

சுந்தரம் குடும்பம், மட்டுநகர்!
**அருள்மிகு அன்னை ஸ்ரீ துர்காதேவியுடன் சங்கமமாகிவிட்ட தெய்வ அம்சமான சாமி ஐயா!**
எனது ஆத்மபூர்வமான வணக்கங்கள். ஐயா நான் 29.04.2004ல் தங்களுக்கு அனுப்பிய இரண்டாவது கடிதம் கிடைத்த சில நாட்களிலேயே அதாவது 17.05.2004இல் எமது மகளுக்கு எதிர்பாராத சம்பந்தம் கிடைத்துள்ளது. பின் ஒரு கிழமையிலேயே 24.05.2004இல் ரெஜிஸ்டர் திருமணம் நடைபெற்றது. இது உங்களின் ஆத்மீக சித்தியும் தாங்கள் மேற்கொண்ட மானசீக பூஜையுமே அன்றி வேறில்லை. எமக்காக ஒரு கணம் தங்களுடன் கலந்துவிட்ட அம்பாள் மனம் கசிந்திருக்கும். எட்ட இருந்தாலும் தங்களை வேண்டுவோருக்கு அருளும் அற்புத சக்திக்கும் வல்லமைக்கும் அருள்மிகு துர்க்காதேவி தங்களுடன் சங்கமமாகிவிட்டதே காரணம். இந்த அதிசயத்தை இங்கு நேரில் கண்டு அதிசயித்துப் போற்றியவர்கள் பலர். ஐயா தாங்களே கைகண்ட தெய்வமாகிவிட்டீர்கள். தாங்கள் அபூர்வ சக்தியை சொல்லில் வடிக்க முடியவில்லை. தங்கள் வாழ்ந்தும் எம் போன்றவர்களின் துயர் தீர்க்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன். தங்கள் கடிதம் 29.05.2004இல் கிடைத்தது. தோலைபேசி மூலம் தொடர்புகொள்ள முடியவில்லை. எனக்கு காது கேளாது மந்தம். மீண்டும் எமது குடும்பத்தின் நன்றியுடன் வணக்கங்கள். தங்களை நேரில் காண முடியவில்லை தங்களின் படத்தை வணங்குகிறோம். தங்கள் அருள் பெற்ற புது மணமக்களை நீடூழி வாழ ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.

பாமா, பம்பலபிடிய!
**கருனை உருவம் கொண்ட ஐயா** அவர்களுக்கு எனது மகள் மீராவுக்கு சனிக் கோளாறுக்கும் திருமண நிவர்த்திக்காகவும் மகளின் படிப்பிற்காகவும் தங்களை நாடி விடிவு தேடி வந்தேன். ஐயா அவர்களின் கருனையாலும் பரிகார சக்தியாலும் எனது மகளின் சனியன் கோளாறு நீங்கிவிட்டது. மேலும் எனது மகளின் படிப்பில் முதல் பரீட்சை முடிந்தது. சித்தியெய்திவிட்டார். மேலும் ஐயா அவர்களின் கருணையையும் உதவியையும் நாடி நான் மீண்டும் எனது மகள் (லண்டன்) பரீட்சை எடுக்க இருப்பதால் அதற்கும் ஐயாவே பரிகாரம் செய்து என் மகள் சித்தி பெறச்செய்து தருமாறு அருள் புரிய வேண்டும் என பணிவுடன் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.
ஐயாவுக்கு எனது பல நன்றிகள்.

சுகீர்தா, கொட்டாஞ்சேனை!
**கனம் ஐயா** அவர்களுக்கு எனது காலில் புழு வெட்டு இருந்தது. மிகவும் வேதனையுடன் உங்களிடம் வந்து மருந்து செய்தேன். இதன்போது எனக்கு இருந்து வந்த புழு வெட்டு மட்டும் (வட்டமான இடம்)மறைந்துவிட்டது. இப்போது பரவலாக தலைமுடி உதிர்ந்தவண்ணமே இருக்கின்றது. இதையும் நிறுத்தித்தர பரிகாரம் வேண்டுகிறேன்.
நன்றி

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்
**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P.**
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831
நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508
எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N)

**‘சண்டே டைம்ஸ்’ பத்திரிகையின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஆசிரியர் இக்பால் அத்தாஸால் எழுதப்பட்ட, இக் கட்டுரை கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

## இன்னொருவர் பார்வையில்

# றெஜியைக் கொன்றவர் புலி இயக்கத்துக்காக இரகசியமாகச் செயற்பட்ட நபரா?

கருணா மீது பாரிய புலித் தாக்குதல் நடத்தப்படலாமென்று இந்தப் பத்தியில் கடந்த வாரம் நான் தெரிவித்த அச்சம் இப்போது உண்மையாகிவிட்டது.

புலிகள் தமக்கெதிராக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப் போராட்டமொன்றினை நடத்திவந்த முக்கிய நபரான விநாயகமூர்த்தி சிவநேசத்துரை அல்லது ரெஜி என்பவரைக் கொன்றுள்ளனர். இப்போது வெளிநாட்டிலிருக்கும் புலிகளின் எதிராளியான விநாயகமூர்த்தி முரளிதரன் அல்லது கருணாவின் சகோதரர் இவராவார். வன்னிப் புலிகளுக்கெதிரான யுத்தத்தைக் கையேற்றுக்கொண்டவர் இவர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள புலிகளின் இராணுவத் தலைமை, சோமசேகரம் சிவானந்தன் அல்லது பானு என்பவரால் கையேற்கப்பட்ட சில தினங்களுக்குள் இச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இவர் புலிகளின் கனரக ஆயுதப் பிரிவின் தலைவராவார். அத்தோடு இவர் வன்னியையே தளமாகக் கொண்டு இயங்கி வந்தவர். மட்டக்களப்பைச் சேர்ந்த ரமேஷ்க்குப் பதிலாக யாழ்ப்பாணத்தில் பிறந்த பானு புலிகளின் இராணுவ பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறு சிறு எண்ணிக்கை கொண்ட கெரில்லாக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கிச் சென்றபோது இது நடைபெற்றிருக்கிறது. கருணா அணி விசுவாசிகளை அழித்தொழிக்கப் புலி இயக்க கெரில்லாக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கும் விதத்தில், றெஜியும் அவரது குழுவினரும் பதில் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

றெஜி இறப்பதற்கு முன்னர், புதிதாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் படை, வன்னிப் புலிகளுக்கு ஆயுத ரீதியாக முகங்கொடுக்கவே உருவானது என்று கூறப்படுகிறது.

இச் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என்பது பற்றிய தகவல்கள் தெளிவாக இல்லை. மட்டக்களப்பு - பொலநறுவை எல்லையிலுள்ள மதுறுஓயா பிரிவில் புலிகள் வியாழக்கிழமை அதிகாலை பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டாரென்று ‘தமிழ்நெற்’ கூறியது. புலிகள் பற்றிய ‘தமிழ் நெற்றின்’ தகவல்கள் பொதுவாகச் சரியானவையென்பது குறிப்பிடத் தக்கது. மட்டக்களப்புக்குத் தென்மேற்காகவுள்ள உட்காடுகளில் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுவதாகப் புலிகளால் கூறப்படுகின்ற தளபதி கருணாவின் துணைப்படை அணியைச் சேர்ந்த சிலர் மீது தமது விசேட துருப்புக்கள் தாக்குதல் மேற்கொண்டது என்று புலிகளின் அதிகாரமுள்ள உறுப்பினரொருவர் கூறியதாகத் ‘தமிழ்நெற்’ குறிப்பிட்டது. இந்தத் துணைப்படையின் பிரதித் தலைவர் எனக் கூறப்படும் றெஜி, கருணாவின் மூத்த சகோதரராவார்.

ஆனால், கொழும்பிலுள்ள புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்ட அறிக்கைகள் வித்தியாசமானவை. குவிலன், எழில், புஷ்பன் ஆகிய வேறு மூவருடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இனந்தெரியாத இடமொன்றுக்கு ரெஜி இடம் மாறியுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. ரெஜி, குயிலன், எழில் ஆகியோர் இறந்துவிட்டனரென்று வானொலிச் சம்பாஷணையை இடைமறித்துக் கேட்டதன் மூலமும் புலனாய்வுத் தகவல்கள் மூலமும் அவர்களால் இதனை உறுதிசெய்ய முடிந்தது. எனினும் புஷ்பன் பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. புலிகளின் உளவாளியெனச் சந்தேகிக்கப்படும் புஷ்பன், றெஜியையும் அவரது இரு சகபாடிகளையும் சுட்டுக் கொன்றாரெனவும் தகவல்கள் உள்ளன. எவ்வாறெனினும் இவை குறித்து சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. வியாழக்கிழமை அதிகாலையில் இடம்பெற்ற சம்பவம் சரியாக எங்கு இடம்பெற்றதென்று புலனாய்வு வட்டாரங்கள் இன்னும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

பின்னர் இக் கொலைகளுக்கு உரிமை கோரிப் புலிகள் மட்டக்களப்பில் அறிக்கையொன்றினை விடுத்தனர். ஆனால் சடலங்கள் யாரிடமும் கையளிக்கப்படவில்லை. றெஜியின் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகள் புலிகளின் செய்திப் பத்திரிகையொன்றில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டன.

றெஜியும் அவரது இரு சகபாடிகளும் கொல்லப்பட்டமை பற்றிய விபரங்கள் மர்மமாக இருந்தபோதிலும், புலிகள் தமது சகல எதிரிகளுக்கும் எதிரான வன்செயல் செயற்பாடுகளை அதிகரித்துள்ளனரென்பது தெளிவானது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரான சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம் அல்லது சிங்கம் என்பவரை கொழும்பில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு துப்பாக்கிதாரிகள் சுட்டுக் கொன்றனர். மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் தலைவரான இவர், வெள்ளவத்தையிலுள்ள தனது வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரின் செயற்பாடுகளைத் தெரிந்துகொண்ட கெரில்லாக்கள் விகாரை ஒழுங்கையிலுள்ள அவரது வீட்டுக்கு வருவதாகக் கூறி அன்று காலை போன் செய்தனர். இக் கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்குச் சற்று முன்னதாக, சிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற இரண்டு இளைஞர்கள் அவர் வந்துவிட்டாராவென விசாரித்துள்ளனர். அதன் பின்னர் அவர் வீட்டுக்கு வருகிறாரென்பதை உறுதிசெய்துகொண்ட புலிகள், அவரது வீட்டுக்கு வெளியே காத்து நின்றனர்.

சிங்கமும் அவரது மனைவியும் பின் ஆசனத்தில் அமர்ந்திருக்க கறுப்பு நிற கார், ஈ.பி.டி.பி. அங்கத்தவரின் வீட்டை நெருங்கியதும் புலிகளின் பிஸ்டல் குழு அங்கத்தவரொருவர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார்.

ஈ.பி.டி.பி.யின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரான தம்பிராசா சிவகுமாரன் கொல்லப்பட்டு ஐந்து நாட்கள் கழிந்த பின்னர் சிங்கத்தின் மரணம் சம்பவித்துள்ளது. சிவகுமாரனைப் பிஸ்டல் குழு சுட்டபொழுது அவர் தமது மகளுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார்.

சிவகுமாரன் ஈ.பி.டி.பி.யின் முக்கிய உறுப்பினர். யாழ்ப்பாணத்தில் அக் கட்சியின் இணை அமைப்பாளர். அத்துடன் தனது கட்சியை மட்டக்களப்பில் கட்டியெழுப்புவதற்கு உதவியவராவார். நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஒஸ்லோவுக்குத் திரும்புவதற்கு முன்னர் இச் சம்பவம் இடம்பெற்றது. கொழும்பில் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் இணைந்து தனது பிந்திய அனுசரணை முயற்சியை மேற்கொண்ட பின்னரே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முன்னர் கொழும்பில் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து விளக்குவதற்காக அவர் புலிகளின் பிரதான பேச்சுவார்த்தையாளர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

**குயிலன், எழில், புஷ்பன் ஆகிய வேறு மூவருடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இனந்தெரியாத இடமொன்றுக்கு ரெஜி இடம் மாறியுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. ரெஜி, குவிலன், எழில் ஆகியோர் இறந்துவிட்டனரென்று வானொலிச் சம்பாஷணையை இடைமறித்துக் கேட்டதன் மூலமும் புலனாய்வுத் தகவல்கள் மூலமும் அவர்களால் இதனை உறுதிசெய்ய முடிந்தது. எனினும் புஷ்பன் பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை.**

வியாழக்கிழமைச் சம்பவம், கருணா அணியினரின் பழிவாங்கும் பதில் தாக்குதலுக்கு வழிவகுக்கலாம். சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் அறிகுறிகள் தென்படாத நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் பற்றிய அச்சங்கள் கவலையளிக்கின்றன.

---

# ‘ஒரு கட்சி சர்வாதிகாரத்துக்கு நோர்வே உதவுகிறது!’ ஒஸ்லோவில் புளொட் அறிவிப்பு

**‘ஒரு கட்சி சர்வாதிகாரத்துக்கு நோர்வே உதவுகிறது’ என்று தலைப்பீட்டு ஒஸ்லோவில் புளொட் கிளை வெளியிட்ட விடயதானத்தின் தழுவல் இது.**

இலங்கை மக்களை சர்வாதிகாரியான பிரபாகரனின் சுட்டுவிரலின் கீழ் கொண்டுவருவதற்கு ஏன் முயற்சி செய்கிறீர்களென்று அண்மையில் ஒஸ்லோவில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசிய புளொட் இயக்கத் தூதுக்குழு கேள்வி எழுப்பியது. எஸ்.ராஜன் என்பவரின் தலைமையில் புளொட் குழு சொல்ஹெய்மைச் சந்தித்தது. புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாகக் கருதி, புலிகளுக்கென சுயாட்சியொன்றினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்படுவதன் மூலம், ஜனநாயக ரீதியான சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களை, மிக மோசமான சர்வாதிகாரியொருவருக்கு சேவகம் செய்பவர்களாக்க முனைகின்றீர்களென்று புளொட் தூதுக்குழு சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டியது. இச் சந்திப்பின்போது நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் லீசா கோல்டனும் உடனிருந்தார். ஜனநாயக ரீதியாக மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவர்களைக் கொல்லும் செயல்களை நிறுத்துமாறு புலிகளை நீங்கள் வற்புறுத்த வேண்டும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் எமக்கு ஆபத்துக்களெதுவும் ஏற்படாதென்று இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுதியளித்திருந்ததால் நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். இப்போது எமது ஆதரவாளர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். இது குறித்துத் தம்மால் எதுவும் செய்ய முடியாதென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கையை விரிக்கிறது என்று ராஜன், எரிக் சொல்ஹெய்மிடம் சுட்டிக்காட்டினார். புலிகளிடம் தாம் இது குறித்துத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமாறு அவர்களை வற்புறுத்துவோமென்றும் சொல்ஹெய்ம் பதிலளித்தார்.

**ஜனநாயக ரீதியாக மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவர்களைக் கொல்லும் செயல்களை நிறுத்துமாறு புலிகளை நீங்கள் வற்புறுத்த வேண்டும்.**

இலங்கைப் பெரும்பான்மை இன மக்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ‘ஸ்புர்’ என்ற அவுஸ்திரேலிய அமைப்புடனோ அல்லது ‘இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உலகக் கூட்டணி’ என்ற அமைப்புடனோ நோர்வேயிலுள்ள புளொட் இயக்கத்தவருக்குத் தொடர்புகள் உண்டா? என்று சொல்ஹெய்ம் விசேடமாகக் கேள்வி எழுப்பினார். இக் கேள்விக்குப் பின்னால் சொல்ஹெய்ம் கொண்டிருக்கும் பாரிய சந்தேகமொன்று புதைந்து கிடக்கிறது. இந்த இரு அமைப்புகளும் இணைந்து ஒன்றரை மாதத்துக்கு முன்னர் ஒஸ்லோவில் நடத்திய கருத்தரங்கொன்றில், புலி இயக்க உறுப்பினர்களுக்கு ஒஸ்லோவிலுள்ள ‘ரெனே’ இராணுவ முகாமில் பயிற்சிகள் அளிக்கப்படுவதாகக் காட்டும் வீடியோ நாடா ஒளிபரப்பப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இந்த இரு அமைப்புகளிலுமே சிங்களப் பேரினவாதிகளே பெரும்பாலும் அங்கம் வகிப்பதாகக் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த அமைப்புகளைச் சேர்ந்த எச்.எல்.டி. மஹிந்தபாலா உட்பட நால்வர் ஒஸ்லோவில் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்து புலிகளுக்கு ‘ரெனே’ இராணுவ முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத் தக்கது. எனவே புலிகள் மீது புளொட் குழுவினர் குற்றஞ்சாட்டியபோது, எரிக் சொல்ஹெய்ம் தனது சந்தேகத்தைக் கேள்வியாக எழுப்பினார். இதில் சுவாரஸ்யமான விடயமென்னவென்றால், இந்த எச்.எல்.டி.மஹிந்தபாலா திருமணம் புரிந்தது திருமதி முருகேசம்பிள்ளை என்ற யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணை. மஹிந்தபாலாவுக்கு இது முதல் திருமணமென்றும், தமிழ்ப் பெண்ணைப் பொறுத்தவரை அவருக்கு அது இரண்டாம் தாரமென்றும் அவரோடு ‘சண்டே ஒப்சர்வர்’ பத்திரிகையில் பணிபுரிந்த தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர். மஹிந்தபாலாவின் எழுத்துக்களில் பிரதிபலிப்பது சிங்களத் தேசியவாதமல்ல, பச்சை வகுப்புவாதம் என்பது அந்தத் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் அபிப்பிராயம். கௌபோய் பாணித் தொப்பியணிந்து நடமாடிய மஹிந்தபாலா, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மிகவும் நெருக்கமானவர். பிரேமதாஸா காலத்தில் ‘சண்டே ஒப்சர்வர்’ பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர். நோர்வேயில் கருத்தரங்கு நடத்திய சிங்கள அமைப்புகளோடு ஒஸ்லோவிலுள்ள புளொட் இயக்கத்துக்குத் தொடர்புண்டா என்று சொல்ஹெய்ம் எழுப்பிய கேள்விக்கு ராஜன் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்: “எமது கட்சி ஜனநாயக ரீதியான அரசியல் கட்சியாகும். எமக்கு எல்லோருடனும் தொடர்புகள் உண்டு. புலி இயக்கம் முதல் ஜே.வி.பி. வரை எமது இயக்கத்துக்குத் தொடர்புகள் உண்டு” என்று பதிலளித்தார்.

‘ரெனா’ இராணுவ முகாமில் புலிகளுக்குப் பயிற்சியளிக்கவில்லையெனத் தெரிவித்த சொல்ஹெய்ம், தேவையென்றால் ‘ரெனா’ முகாமைப் பார்க்க வருமாறு ஜே.வி.பி.க்கு அழைப்பு விடுக்கவும் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிரபாகரனும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலமோ அல்லது சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரபாகரனுக்கும் நோபல் சமாதானப் பரிசு வழங்குவதன் மூலமோ இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்துக்கும் முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் ராபினுக்கும் நோபல் சமாதானப் பரிசு வழங்கினீர்கள். இப்போது ஒருவர் இறந்துவிட்டார். மற்றவர் வாழ்ந்தாலும் ஏற்கெனவே இறந்தவர் போலாகிவிட்டார். பாலஸ்தீனத்தில் சமாதானம் நிலவுகிறதா? இதேதான் இன்று இலங்கையிலும் இடம்பெறுகிறது. ஒரு கட்சியை மட்டும் அங்கீகரித்து அதனுடன் பேசுவதால் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது என்றும் புளொட் தூதுக் குழு சொல்ஹெய்முக்கு எடுத்துக் கூறியது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

இப்போது சொல்லுங்கள். எவர் வாழ்க்கை எங்கே ஆரம்பித்து, எங்கே எவ்வாறு முடியும் என்று முன்கூட்டியே சொல்லக் கூடியவன் இறைவனைத் தவிர எவனாவது இந்த உலகத்தில் இருக்கிறானா?

முதல் பாடல் எழுதியவுடன், காலம் என்னைத் திரும்ப ஸ்ரீரங்கத்திற்கே தள்ளியது.



அது மட்டுமா?

பாட்டு எழுதும் வேலையெல்லாம் சரிப்பட்டு வராது; இனி பம்பாய் சென்று வேலை தேட வேண்டியதுதான் என்று என் தாயாரோடு நான் பம்பாய்க்குப் பயணமானேன்.

காரணம், திடீரென்று என் தந்தை காலமானார்கள்.

ஒரு வருமானமும் இல்லாமல், ஸ்ரீரங்கத்தில் என் தாயை விட்டுவிட்டு, நான் சென்னைக்குச் சென்று பாட்டு எழுதும் வேலையில் ஈடுபடுவது எப்படிச் சாத்தியமாகும்?

ஆகவே, நானும் என் தாயும் என் அண்ணனின் நிழலில் வாழ பம்பாய்க்குப் பயணமானோம்.

பம்பாயில் எப்படியும் ஒரு குமாஸ்தா வேலையைத் தேடிப் பிடித்துவிட வேண்டும் என்கிற வெறி எனக்குள் தலை தூக்கியது. சினிமாவிற்குப் பாட்டு. எழுதுவதெல்லாம் சரிபட்டு வராது என்று என் மனம் முடிவெடுத்தது.

ஆனால், இறைவன் திருவுள்ளம் வேறாக இருந்ததால் தான், நான் மீண்டும் சினிமாவிற்கே திரும்பினேன். இதில், என் செயல் என்று பெருமைப்பட என்ன இருக்கிறது?

### அந்த நாள் ஞாபகம்

புனித வாக்கியத்தின் முற்றுப்புள்ளிதான் மரணம். இந்த முற்றுப்புள்ளி எந்த வாக்கியத்தை முடிக்க, எப்போது எங்கே எவரால் வைக்கப்படுகிறது என்றெல்லாம் கண்டறிய வேண்டும் என விஞ்ஞானம் இன்றளவும் கச்சை கட்டிக்கொண்டு அலைகிறது. இந்த அலைச்சலை ஒரு தேடல் என்ற அளவில் நாம் அங்கீகரிக்கலாமே தவிர, அதனால் ஆகப் போவதொன்றில்லை. விஞ்ஞானம் எங்கே வழிதெரியாமல் விழி பிதுங்கி நிற்கிறதோ, அங்கே தான் மெய்ஞ்ஞானம் ஆரம்பமாகிறது என்று ஒரு மெலை நாட்டுச் சிந்தனையாளன் வெகு அழகாகச் சொன்னான்.

இதையே நம்மாட்கள், கிருபானந்த வாரியார் சொன்னால் ஒப்பமாட்டார்கள்; கிறிஸ்டா.'.பர்லீ சொன்னால், கழுத்து வலிக்கத் தலையாட்டுவார்கள்.

'மருந்தை நாங்கள் தருகிறோம்; ஆனால் நோயைக் குணப்படுத்துவது இறைவனே' என்று மருத்துவர்கள் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

ஓரிருவர் தன் கை வண்ணம் என்று உரக்கச் சொல்லிக் கொள்ளலாம். அது உண்மையாகாது.

பூச்செடிகளுக்கு நாங்கள் தானே விதை போட்டோம் என்று சில பகுத்தறிவாளர்கள் விதண்டா வாதம் பேசலாம். புல்லுக்கு எவன் விதை போட்டான்?

இதை நான் கேட்கவில்லை நாமக்கல் கவிஞர் கேட்கிறார்:

*தண்ணீர் விழுந்ததும்*
*தரைமேலே - புல்*
*தானாய் முளைப்பது*
*எவராலே?*

'ரஷியாவைப் பார்' என்று கூவிக்கூவி நம்மூர் கம்யூனிஸ்டுகள் களைத்துப் போய்விட்டார்கள். இது போலத்தான் விஞ்ஞானத்தைச் சுட்டிக் காட்டி, மெய்ஞ்ஞானத்தை அபத்தமென்று அர்ச்சிப்போரின் கூற்றும்.


நிலவில் கால் வைத்த 'நீல் ஆம்ஸ்ட்ராங்' நிலத்திற்கு வந்ததும் 'கடவுளே' என்று நன்றி சொன்னான். அவனுக்கு விஞ்ஞானத்தின் எல்லை தெரிந்திருக்கிறது.

இதையெல்லாம் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால் மரணம் பற்றி இந்து மதம் "அது எந்த நேரமும் நேரலாம்; எனவே இருக்கின்ற போதே இப்பவே இறைவனை நினை" என்று கூறியிருப்பதை சில இந்துக்களே எள்ளி நகையாடுகிறார்கள் என்பதால்தான்.

(தொடரும்.......)



உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....




## சில அநுபவங்கள்

ஆனால், வெளிநாடுகளில் நாச வேலைகளில் ஈடுவடுவது நம்முடைய உளவாளிகளின் திட்டமாக இருக்கவில்லை. இந்தியா பற்றிய நல்லெண்ணத்தை அந்த நாடுகளில் உருவாக்குவதும், அந்த நாடுகள் இந்தியாவுக்கு எதிரான காரியங்களில் ஈடுபட்டால் அந்த விஷயங்களை அந்த நாட்டு மக்களுக்கு உணர்த்துவதுமே இவர்களின் முக்கிய பணியாக இருந்தது. நம்முடைய தூதரகங்களில் செயல்பட்ட உளவாளிகள் அடக்கமாகப் பணிபுரிந்தார்கள். வெளிநாடுகளில் தக்க மனிதர்களோடு இரகசியமாகத் தொடர்புகொண்டு அந்த நாடுகள் இந்தியாவின் எதிரிகளுக்குச் செய்கின்ற உதவிகள் பற்றிய தகவல்களை தந்திரமாகச் சேகரித்தார்கள். அங்குள்ள இந்திய ஆதரவுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அவர்கள் மூலம் இந்த உண்மைகளை அம்பலப்படுத்த ஏற்பாடுகளைச் செய்தார்கள். இதன் விளைவாக சர்வதேச அபிப்பிராயத்திற்குப் பயந்து சில வல்லரசுகள் இந்தியாவுக்கு எதிரான காரியங்களில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டன.

### சீனாவின் துரோகம்:

ஜவஹர்லால் நேரு வரலாற்று மஹா புருஷர் மனிதாபிமானத் தலைவர். அண்டை நாடுகளோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவும், உலக சமாதானத்தை நிலை நாட்டவும் அயராது பாடுபட்டவர். வல்லரசுகள் உருவாக்கிய கோஷ்டிகளோடு உலக நாடுகள் சேர்ந்து கொண்டால் அது உலக அமைதிக்குப் பெரும் அபாயத்தைத் தோற்றுவிக்கும் என்று உலக நாடுகளை எச்சரித்தவர். அதற்காகவே யூகோஸ்லேவியாவின் தலைவர் மார்ஷல் டிட்டோவுடனும் எகிப்து கோஷ்டி சாரா கொள்கையை உருவாக்கியவர் சீனப் பிரதமர் சூ.என்.லாயோடு பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்டு பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கியவர். பஞ்சசீலம் என்று சொல்லப்படும் ஐந்து கொள்கைகளில் ஒன்று, எந்த இரண்டு நாடுகளும் தங்களுக்கு உள்ளே உள்ள தகராறுகளைச் சமரசப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தான் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிரபோர் நடவடிக்கைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடாது என்பதாகும். இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்ட நாடுகளில் சீனாவும் ஒன்று. அதில் கையெழுத்து இட்டவர் சீனப் பிரதமர் சூ.என்.லாய்.

இருந்தும் சீனா இந்தியாவோடு தனக்கிருந்த எல்லைத் தகராறைச் சமரசப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முன்வராமல் நமது வட-கிழக்கு எல்லையில் திடீரென்று தாக்குதல் தொடுத்தது. சீனாவின் இந்தத் துரோகச் செயலால் நேரு பெரிய அதிர்ச்சிக்குள்ளானார்.

சீனத் தலைவர்களின் நல்லெண்ணத்தில் அழுத்தமான நம்பிக்கை வைத்து, சீனாவின் படையெடுப்பு அபாயத்தைப் பற்றி நம்முடைய உளவுத் துறையினர் கொடுத்த தகவல்களை நேரு அலட்சியப்படுத்தியதால், எதிர்பாராத சீனத் தாக்குதலை சமாளிக்க வேண்டிய நெருக்கடி இந்தியாவுக்கு ஏற்பட்டது.

(தொடரும்.......)

(நன்றி நர்மதா)

*'காதல் வந்தால் சொல்லியனுப்பு உயிரோடிருந்தால் வருகிறேன்'* என்பது வைரமுத்துவின் பாடல் வரிகள். காதல் வந்தால் பெண்களுக்கு மிதமிஞ்சிய அழகு கூடுவதாக இப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.


குறிப்பாகவே பெண்களை அழகுபடுத்துவதில் அவர்களது எண்ணங்கள் பெரும் பங்களிப்பை வழங்குவதாகவும், நல்ல எண்ணங்களால் பெண்களின் அழகும், இளமையும் பேணப்படுவதாகவும் புதிய

# காதல் உணர்வுகளில் காத்திருக்கும் சாங்கதிகள்

ஆய்வுகள் கூறுகின்றன.

இந்த ஆய்வு நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

எவ்வாறான எண்ணங்கள் ஒரு பெண்ணின் அழகையும் இளமையையும் பாதுகாக்கின்றன? என்ற கேள்விக்கு மேற்படி ஆய்வினை மேற்கொண்டுள்ள ட்யூக் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு, பெண்களுக்கு ஏற்படும் பாலியல் சார்ந்த உணர்வுகளும், பக்திபூர்வமான உணர்வுகளும் தான் காரணம் என பதிலளித்துள்ளது. இரவு நேரம் மிகவும் துன்பகரமான எண்ணங்களை





கொண்டுள்ள பெண்களது அழகும் இளமையும் கூடிய விரைவில் அவர்களை விட்டு அகன்று போய் விடுவதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதே நேரம் தொடர்ந்து மன ரீதியில் பாதிக்கப்பட்டவர்களில் உடனடி கோப உணர்வுகளை வெளிப்படுத்துகின்றவர்களதும், பாலியல் ரீதிலான உணவுர்களை வெளிப்படுத்துகின்றவர்களதும் அழகும் இளமையும் அதி கூடிய விரைவில் காணாமல் போய்விடுவதாகத் தெரியவருகின்றது.

இதில் பாலியல் உணர்வுகள் எனும்போது வெறுமனே ஏற்படக்கூடியவை அல்ல. ஒன்றில் கணவன்



- மனைவி உறவின் போது ஏற்படுகின்ற பாசம் மிக்க பாலியல் உணர்வுகளே என்றும் பக்தி சார்ந்த உணர்வுகள் எனும்போது அது தொடர்பில் கொள்கின்ற தூய்மையான ஈடுபாடேயன்றி பல்வேறுபட்ட மத எண்ணக்கருக்களின் பால் அடிமையாகி விடுவதல்ல என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மனரீதியிலான சுகாதார நிலைமையை விவாகங்களின் மூலம் நல்ல நிலையில் தக்க வைத்துக் கொள்ள இயலும். இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் மேற்கொண்டு வருபவர்கள் உயர்ந்த மனரீதியிலான சுகாதார நிலையைக் கொண்டவர்கள் என்றும் திருமண வாழ்க்கையில் தோல்வி கண்டவர்கள் அதிருப்திகரமான உணர்வுகளால் வாழ்க்கையை மேற்கொண்டு வருவதாவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மனதில் இருந்துவரக்கூடிய மகிழ்ச்சிகரமற்றத் தன்மையானது நிச்சயமாக சுகாதார தொடர்பில் தீமையான விளைவுகளைக் கொண்டு தருவதாகவும், ஆரோக்கியமான தன்மையைக் கொண்டு தருவதில் திருமணம், அதனுடன் தொடர்பான சில விடயங்களும் பெரும் பங்களிப்பை ஆற்றி வருவதாகவும் லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மிஷெலா பென்சவெல் எனும் மனநோய் நிபுணர் உட்பட்ட ஆய்வுக் குழு மேற்கொண்டுள்ள புதிய ஆய்வுகளின்படி தெரிய வருகிறது.

இந்த ஆய்வின் போது மிக நீண்டகாலமாக இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வருகின்ற ஜோடிகளது எண்ணங்கள் அலசி ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருமணத்தின் மூலம் உயரிய ஆரோக்கியத்தன்மை பெறுவது யார்? என்று ஆராய்ந்து பார்த்தபோது, திருமணமான பெண்களைவிட, ஆண்களே அதிகபட்ச மனத் திருப்தியையும், ஆரோக்கியத்தையும் அடைகின்றனர் என மேற்படி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதைத்தவிர தொடர்ந்தும் திருமண வாழ்க்கையிலோ அன்றி காதல் தொடர்புகளிலோ தோல்விகாணும் பெண்கள் அதிருப்தியான மனநிலையைக் கொள்வதால் இவர்களது ஆரோக்கிய நிலைமை பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இதே நேரம் காதலில் தோல்வி கண்ட அல்லது திருமண வாழ்வில் தோல்வி கண்ட ஆணுடன் முதல்முறையாக திருமண வாழ்க்கையில் ஈடுபடும் பெண்ணும் கூட குறைந்தபட்சமான திருப்தியையே அடைகின்றாள்.

முதல் முறையாக திருமண வாழ்க்கைக்கு உட்படும் ஆண்கள் மிக வேகமாக தங்களது மனத் திருப்தியை உயர்ந்த அளவுக்குக் கொண்டு செல்வதாகவும் அதன் மூலம் அவர்களது ஆரோக்கியத்தன்மை நல்ல முறையில் இருந்து வருவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

காதல் தோல்விகள் அல்லது இல்லற வாழ்க்கைத் தோல்விகள் பலவற்றைச் சந்தித்துள்ள ஓர் ஆண், மனம் முன்வந்து செய்கின்ற திருமணத்தின் போது உயரிய மனத்திருப்தியை அடைகின்றான். அத்துடன் தனது மனதுக்குப் பிடித்த பெண்ணுடன் விவாகஞ் செய்து கொள்ளாமலும்கூட வாழ்கின்ற ஆண் மனத்திருப்தியையும் நல்ல தேக ஆரோக்கியத்தையும் பெற்றுக் கொள்வதாகவும் லண்டன் பல்கலைக்கழக ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தாலியில் .உள்ள பீஷா பல்கலைக்கழகத்தின் ஆய்வுகளின்படி காதல் உணர்வுகள் மட்டுமல்லாது காதலால் போதை ஏறிய ஆண் - பெண் இருபாலாருக்கும் டெஸ்டஸ்டெரோஜன் மட்டம் வித்தியாசப் படுவதாகக் கூறப்படுகின்றது. இந்த ஆய்வினை அப்பல்கலைக்கழக ஆய்வாளரான டொனரெலா மரசீட் மேற்கொண்டுள்ளார்.

டெஸ்டஸ்டெரோஜன் என்பது ஆண்பால் ஹோர்மனாகும். அதன் மூலம் ஆண்களது ஆண்தன்மை தீர்மானிக்கப்படுகிறது. பெண்களிடத்தே ஈஸ்டரோஜன் மற்றும் பிராஜெஸ்டரோன் போன்ற ஹோர்மோன்கள் காணப்படுகின்றன. ஆனாலும் பெண்களிடத்திலும் டெஸ்டஸ்டெரோஜன் ஹோர்மன்கள் ஓரளவு காணப் படுகின்றன.

காதலால் போதையேறும் பெண்களது டெஸ்டஸ்டெரோஜன் மட்டத்துக்கு வருவதன் மூலம் அவர்களது பாலியல் செயற்பாடுகளை உயர்மட்டத்துக்குக் கொண்டுவரலாம் எனத் தெரியவருகின்றது.

ஹோர்மோன்கள் சமமான நிலையை அடையும் போது அவரவர் ஒருவருக்கொருவர் காட்டும் பிரதி வெளிப்பாடுகளும் சமமான நிலையைக் கொள்கின்றன. அதனால் இவ்வாறான காதல் செயற்பாடுகள் மிகவும் இன்பகரமானவை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.


இன்னொரு கருத்தின்படி இவ்வாறான வேறுபாடு காரணமாக பெண்களது பாலியல் உணர்வுகள் நீண்ட நேரம் நிலைத்திருப்பதாகக் கூறுப்படுகின்றது.

பாலியல் உணர்வுநிலை அல்லது காதல் போதை முடிவுற்றதன் பின்னர் டெஸ்டஸ்டெரோஜன் மட்டம் மீண்டும் இயல்பு நிலையை அடைகின்றது. இந்த இயல்பு நிலையின் மூலம் அனைத்துமே இயல்பு நிலையை அடைந்து விடுகின்றன என்று டொனரெலா மரசீட் தனது ஆய்வுகளை வெளிப்படுத்துகின்றார்.

-பாருக்

# இதய அஞ்சலிகள்

மலர்வு
21
05
1965



அழிப்பு
23
09
2004

வெள்ளவத்தையில் 23.09.2004ஆம் திகதி விகாரை லேனில் சுட்டுக் கொல்லப்பட்டீரே! நட்பு பேசி வீட்டுக்கு வந்த இரு புலிகளால் மனைவியின் கண்முன்னாலேயே சுட்டுச் சரிக்கப்பட்டீரே தோழா! கணவனின் உயிரைக் காப்பற்றும் முயற்சியில் கொலையாளிகளை தடுத்ததால் உங்கள் மனைவிக்கும் கையில் காயம். அக் காயம் கூட காலப்போக்கில் ஆறிவிடும். ஆனால் நீங்கள் எங்களை தவிக்கவிட்டுப் பிரிந்ததை எக்காலத்திலும் எம்மால் மறக்க முடியாதே....

உங்கள் பிரிவால் உங்கள் துணைவியாரும் மூன்று பிள்ளைகளும் அநாதரவாக்கப்பட்டுள்ளார்களே! இக் கொடுமைகள்தான் எம் தமிழினத்தின் தலைவிதியா? எங்களுக்கெல்லாம் வழிகாட்டிய நீ பாசிச புலிகளிடம் பலியாகியது. துரதிர்ஷ்டம்தான். படுகொலைகளால் எங்களை பொறுமையிழக்கச் செய்து குற்றத்திற்குள் தள்ளிவிட நினைக்கும் பயங்கரவாதப் புலிகளின் பகல் கனவு பலிக்காது. எத்தனை இடர் வரினும் தமிழ் பேசும் மக்களின் கௌரவமான நிரந்தர தீர்வுக்கான எங்கள் மக்கள் சேவை தொடரும். மாற்றுக் கருத்துக்களுக்காக வாழ்ந்தவரே! புலிகள் புரியும் படுகொலையிலிருந்து ஒருநாள் மனிதம் விழித்தெழும்! இது உறுதி!

-தோழர்கள், மனைவி, பிள்ளைகள்

## சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம் (தோழர் சிங்கம்)

யாழ். மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினரும்



தோழர் சிங்கத்தின் மகன் அவருக்கான இறுதிக் கிரிகைகளைச் செய்வதையும் தோழர் சிங்கத்தின் புகழுடலையும் படத்தில் காணலாம்.



## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# சந்திரபாபு ஒரு சரித்திர புருஷன்

நகைச்சுவை நடிகராக, சொந்தக் குரல் பாடகராக மட்டுமே அறியப்பட்டிருக்கும் ஜே.பி.சந்திரபாபு தமிழ்த் திரையுலகிற்கு நல்ல படம் ஒன்றை இயக்கி அளித்தவர் என்பது அதிகம் அறியப்படாத ஒன்று.

தூத்துக்குடியைச் சேர்ந்தவர் ஜோசப் ஃபெரடரிக்ஸ். பின்னாளில் இவர் சுதந்திரப் போராட்ட வீரராகவும் மாறினார். இவர், 1929ஆம் ஆண்டு ஒரு ஆண்குழந்தைக்குத் தந்தையானார்.

குழந்தை பிறந்த சில நாட்களிலேயே, கடும் காய்ச்சல் அதைத் தொற்றிக்கொண்டது. பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று மருத்துவர்கள் கைவிட்ட நிலை.

தந்தையும் தாயும் மண்டியிட்டனர். ஆண்டவர் இயேசுவே....! இக் குழந்தை நீர் அன்புடன் எங்களுக்கு அளித்த பிச்சை. குழந்தைக்கு உயிர்ப் பிச்சை தாரும். அதற்கு பிச்சை என்றே பெயர் வைக்கிறோம்'' என்று பெற்றோர்கள் வேண்டிக்கொண்டனர்.

கண்ணீர் கலந்த அந்த வேண்டுகோள் கர்த்தருக்குக் கேட்டுவிட்டது போலிருக்கிறது. குழந்தை பிழைத்து எழுந்தது. அதற்கு ஜோசப் பிச்சை என்று பெயரிட்டனர். பிரபல நகைச்சுவை நடிகராக விளங்கிய சந்திரபாபுவின் பெயருக்கு முன்னால் போடப்பட்ட ஜே.பி. என்பது ஜோசப் பிச்சை என்பதன் சுருக்கம்தான்.

இவர் வாழ்வில் நடந்த மறக்க முடியாத இந்த நிகழ்வின் தாக்கம்தானோ என்னவோ, பின்னாளில் இவர் இயக்கிய, 'தட்டுங்கள் திறக்கப்படும்' ஏறக்குறைய இப்படி ஒரு நிகழ்ச்சியை இறுதிக் காட்சியில் கொண்டிருந்தது.

### சினிமாவில் நடிக்க, நிஜமான தற்கொலை முயற்சி !

பள்ளி இறுதியாண்டு வரை படித்த ஜோசப் பிச்சை சந்திரபாபு, சினிமாவில் நடித்துப் புகழ் பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் சென்னை வந்து சேர்ந்தார். ஏறி இறங்காத பட நிறுவனங்கள் இல்லை. ஜெமினி ஸ்ரூடியோதான் அவரது கடைசி நம்பிக்கை. அங்கும் தோல்வி. மீண்டும் மீண்டும் ஜெமினி ஸ்ரூடியோவிற்குப் படையெடுப்பது என்று முடிவே செய்துவிட்டார் போலிருக்கிறது.

ஒருநாள் ஸ்ரூடியோ உள்ளே சந்திரபாபு சுருண்டு மயங்கி விழுந்தார். வாயில் இலேசான நுரை தள்ளியது. ஒரே பரபரப்பு. ஆம்புலன்ஸ் வந்தது. ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஜெமினி ஸ்ரூடியோ காஷ்டிங் அசிஸ்டெண்ட் ஆர்.கணேஷ் (பின்னாளில் காதல் மன்னன் என்று பெயரும் புகழும் பெற்ற நடிகர் ஜெமினி கணேசன்), காமிராமேன் தம்பு, ஜெமினி சீஃப் எக்ஸியூட்டிவ் சர்மா ஆகியோர் முன்னிலையில் சப். இன்ஸ்பெக்டர் ரங்காச்சாரி புலன் விசாரணை செய்தார்.

"உன் பெயர் என்ன?''

"சந்திரபாபு.''

"தற்கொலை செய்து கொள்ள விஷம் குடித்தாயா?''

"ஆமாம்.''

"ஏன்?''

"சினிமாவில் நடிக்க வந்தேன். சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே தற்கொலை முடிவுக்கு வந்தேன்.''

"நீதிமன்றத்தின் கூண்டில் நின்றிருந்த சந்திரபாபுவிடம் நீதிபதி கேட்டார்:''

"ஏன் இப்படிச் செய்தாய்?''

"எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போச்சு. விஷம் குடித்தேன்.''

"இனிமே இந்த மாதிரிச் செய்வாயா?''

"சொல்ல முடியாது சார்.''

"ஏன் அப்படிச் சொல்றே?''

அடுத்த நிமிடம் தனது பாக்கெட்டிலிருந்த தீப்பெட்டியை எடுத்து உரசி தனது உள்ளங்கையில் எரியவிட்டார்.

பதைபதைத்த நீதிபதி, "என்ன செய்கிறாய்.....?'' என்று பதற்றத்துடன் கேட்டார்.

"நான் செய்றதை உங்களாலே பார்க்க முடியுது. ஆனா....அந்த சூட்டை உங்களால உணர முடியாது. அதேமாதிரிதான், என் உணர்ச்சிகளை உங்களால ஃபீல் பண்ண முடியாது.''

சந்திரபாபுவின் இந்த வாதம் அந்த மன்றத்தினர் அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.




முதல் முறை, இளம் வயது என்பதால் மன்னிப்புப் பெற்று வெளியே வந்தார் சந்திரபாபு.

### பட வாய்ப்பு !

1947ஆம் வருடம் தீபாவளியன்று திரைக்கு வந்த படம் 'தன அமராவதி'. அம்பிகா பிலிம்ஸ் தயாரிப்பில் மணிக்கொடி எழுத்தாளர் பி.எஸ்.ராமையா கதை, வசனம் எழுதி இயக்கிய படம். இதில், எஸ்.எம்.குமரேசன், பி.எஸ்.சரோஜா, புளிமூட்டை ராமசாமி ஆகியோருடன் சந்திரபாபு நடித்திருந்தார். இந்தப் படம்தான் தனது உயிரை விட்டாவது பெற நினைத்த அவரது முதல் பட வாய்ப்பு.

அதன் பிறகு, பி.ஆர்.பந்துலுவின் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" முழுநீள நகைச்சுவைப் படமான இதில் சந்திரபாபுவிற்கு சொந்தக் குரலில் பாடி நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

"குட்! கிளாப்!ஹாப்பி!ஜாலி லைஃப்!
தாலி கட்டினா ஜாலி லைஃப்!
ஜாலி லைஃப்!ஜாலி லைஃப்!
தம்பதியான ஜாலி லைஃப்!'' என்ற அவரது பாடல் பிரபலமானது

அதன் பிறகு பல வெற்றிப் படங்களில் பிரபல நகைச்சுவை நடிகராக நடித்துப் பெரும் புகழ் பெற்றார்.

கைக்குழந்தையாக இருந்தபோது வந்த விஷக் காய்ச்சல், கர்த்தரின் அருளால் பிழைத்தது ஆகியவற்றை வளரும்போது தாய் மூலம் கேட்டு அது அவரது மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால், பிரபல நகைச்சுவை நடிகரான இவர், தான் இயக்கும் முதல் படத்தை ஏன் சோகப் படமாக உருவாக்க வேண்டும்?

தானே இயக்கி, கதாநாயகனாகவும் நடித்துத் தயாரித்த அந்தப் படத்தின் கதை இதுதான்.

அடைக்கலம் - சந்திரபாபுவிற்கு இப் படத்தில் பெயர். அன்பை வெளிப்படுத்தும் தன் மனம் முழுவதும் மூலதனமாக்கிக்கொண்ட அடைக்கலத்திற்கு வாய் பேச வராது.

ஆதரிப்பாரற்ற அனாதைகளாக வந்து சேர்ந்த மீனாட்சிக்கும் அவளது குழந்தை லட்சுமிக்கும் அடைக்கலம், அடைக்கலம் தருகிறான். குழந்தை லட்சுமி மீது அடைக்கலத்திற்கு இனம்புரியாத பாசம். அவனது முதலாளி சங்கரன் மனைவிதான் மீனாட்சி என்பதும் மகள்தான் லட்சுமி என்பதும் பிறகுதான் தெரியவருகிறது.

மீனாட்சியை நிராதரவாக விட்டுவிட்டு, கீதா என்கிற பணக்காரப் பெண்ணுடன் பொய்யான வாழ்க்கை வாழ்ந்து வருகிறான் சங்கர்.

தன்னிடம் இருந்த இலட்சக்கணக்கான ரூபாய்களை சங்கரிடம் கொடுத்து முடித்துவிட்ட கீதா, சங்கரின் தொல்லை பொறுக்க முடியாமல் பெற்றோருடன் வாழ நினைக்கிறாள்.

இதற்கிடையில் கீதா கொலைசெய்யப்படுகிறாள். மீனாட்சி தன் கணவனோடு இணைவதற்காக, கீதாவை அடைக்கலம்தான் கொன்றான் என்று பொலிஸ் கைது செய்கிறது.

மீனாட்சியும் லட்சுமியும் மீண்டும் அனாதைகளாகின்றனர். சிறையில் குழந்தை லட்சுமியின் நினைப்பும், அவள் தன் மீது காட்டும் பாசமும் அவளது பேச்சுக்களும் அடைக்கலத்தின் மனதை வாட்டுகிறது.

வழக்கு முடிவில் நிரபராதி என விடுவிக்கப்படுகிறான்.

குழந்தை லட்சுமியைத் தேடி ஓடி வருகிறான். அங்கே தனது முதலாளி சங்கர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறான். அதைப் பார்த்த அடைக்கலம் துடித்துப் போகிறான்.

நன்றி: D.S

மிகுதி அடுத்த வாரம் தொடரும்.....




சக்தி சக்தி என்றால் துன்பம்
தானே தீரும் கண்டீரே!
சக்தி சக்தி என்றால் இன்பம் –
தானே சேரும் கண்டீரே!

**சுப்பிரமணிய பாரதியார்–**



# தர்மபுத்தி பாபபுத்தியின் கதை



ஒரு கிராமத்தில் தர்மபுத்தி மற்றும் பாபபுத்தி என்று இரண்டு நண்பர்கள் இருந்தனர். பாபபுத்தி ஏழையாவான். ஒருநாள் பாபபுத்தி, தர்மபுத்தியுடன் சேர்ந்து வியாபாரம் செய்து நிறையப் பணம் சம்பாதித்து தர்மபுத்தியை ஏமாற்றி அவனது பங்கையும் சேர்ந்த்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினான்.

அதனால் அவன் தர்மபுத்தியிடம் சென்று "நண்பா! நாமிருவரும், அருகிலுள்ள நகரத்திற்குச் சென்று வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கலாம்" என்று கூறினான்.

"அப்படியே செய்யலாம்" என்று தர்மபுத்தி அதற்குச் சம்மதித்தான்.

அவ்வாறே அவர்கள் அருகிலுள்ள நகரத்துக்குச் சென்று அங்கு தர்மபுத்தியின் புத்திசாலித்தனத்தால் வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினர்.

"நண்பா! இனி நாம் நமது சொந்த ஊருக்குப் போய் அங்கே வசதியாக வாழலாம்" என்று ஒருநாள் பாபபுத்தி கூறினான்.

"சரி! நாம் ஊருக்குத் திரும்பிப் போகலாம்" என்று தர்மபுத்தியும் ஒப்புக்கொண்டான்.

அவர்கள் தங்கள் உடைமைகளையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டனர். தங்கள் கிராமத்திற்கு அருகே இருந்த ஒரு காட்டில் அவர்கள் வந்து கொண்டிருந்தபொழுது பாபபுத்தி திடீரென்று நின்றான்.

"நண்பா! நாம் இவ்வளவு பணத்தையும் எடுத்துக் கொண்டு நமது வீட்டில் கொண்டு வைப்பது அவ்வளவு நல்லதல்ல. அப்படிச் செய்தால் நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைத் திருட்டுக் கொடுக்க நேரிடலாம்!" என்று பாபபுத்தி, தர்மபுத்தியிடம் கூறினான்.

"நீ சொல்வது உண்மைதான், அதற்கு நாம் என்ன செய்வது?" என்று தர்மபுத்தி கேட்டான்.

"நாமிருவரும் இப்போது நமக்குத் தேவைப்படும் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு மீதியை இதோ, இந்த மரத்தின் கீழ் புதைத்து வைத்துவிடுவோம" என்று பாபபுத்தி பதிலளித்தான்.

அவ்வாறே அவர்கள் அந்த மரத்தடியில் ஒரு குழியைத் தோண்டி, சிறிது பணத்தை எடுத்துக்கொண்டு, மீதிப் பணத்தை அக் குழியில் போட்டு மூடிவிட்டுத் தங்கள் ஊர் வந்து சேர்ந்தனர்.

பாபபுத்தியின் மனம் குழியில் போட்டுப் புதைத்த பணத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அன்றிரவு வெகுநேரம் கழித்து, அந்த மரத்தடிக்குச் சென்று புதைத்து வைத்த பணத்தை எடுத்துக்கொண்டான். மேலும், தான் பணம் எடுத்ததை யாரும் பார்க்கவில்லையென்று அவன் நம்பிக்கை கொண்டான்.

பாபபுத்தி, சில நாட்கள் கழித்து தர்மபுத்தியைக் காணச் சென்றான்.

"நண்பா! நான் எடுத்து வந்த பணம் அனைத்தும் செலவழிந்துவிட்டது. எனக்கு இப்போது அவசியமாகப் பணம் தேவைப்படுகிறது. நாம் புதைத்து வைத்த

**பாப்பா முரசு சிறுகதை**

பணத்தைப் போய் எடுத்துக்கொள்வோம்" என்று பாபபுத்தி கூறினான்.

"அவ்வளவு பணத்தையும், இவ்வளவு சீக்கிரம் செலவழித்து விட்டாயா? சரி, வா!•நாம் மீதி பணத்தைப் புதைத்து வைத்திருக்கும் இடத்திற்குச் செல்வோம்" என்று தர்மபுத்தி சொன்னான்.

அதுபோல் அவர்களிருவரும் அந்த மரத்தடிக்குப் போய்த் தோண்டிப் பார்த்தனர். அந்தோ! அந்தக் குழியில் பணமில்லை.

"இதோ பார்! நீ உன்னை என் நண்பன் என்று கூறிக்கொண்டு, என்னை ஏமாற்றி, நாம் இங்கே புதைத்து வைத்த பணம் முழுவதையும் திருடிவிட்டாய்!" என்று கூச்சலிட்ட பாபபுத்தி வா!" "இப்போதே நீதிபதியிடம் செல்வோம்!" என்று கூறினான்.

"நான் உன்னை ஏமாற்றவில்லை!" என்று தர்மபுத்தி மறுத்தபோதிலும் பாபபுத்தி அதைக் கேளாமல், அவனை நீதிபதியிடம் அழைத்துச் சென்றான். நீதிபதி அவர்கள் கூறிய கதை முழுவதையும் கேட்டார்.

நீதிபதியிடம் பாபபுத்தி, "ஐயா, தர்மபுத்திதான் பணத்தைத் திருடினான். அதற்கு காட்டில் ஒரு சாட்சி இருக்கிறது. அது யார் குற்றவாளி என்று சொல்லும்!" என்று கூறினான்.

"சரி, நாளை நாம் காட்டிற்குச் சென்று நீ சொல்லும் சாட்சியைக் கேட்போம்" என்று நீதிபதி பதிலளித்தார்.

பிறகு தர்மபுத்தியும், பாபபுத்தியும் தத்தம் வீடு சென்றனர்.

வீட்டிற்குச் சென்ற பாபபுத்தி தனது தந்தையிடம், "அப்பா, எனக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது. நீங்கள் இவ்வாறு செய்ய வேண்டும்....." என்று அவரிடம் இரகசியமாகக் கூறினான்.

மறுநாள் நீதிபதியுடன் தர்மபுத்தியும், பாபபுத்தியும் பணம் புதைத்து வைக்கப்பட்ட இடத்திற்குச் சென்றனர்.

"ஓ, மரத்திலுள்ள தேவதையே! நீயே சாட்சி! இங்கே புதைத்து வைக்கப்பட்டிருந்த பணத்தைத் திருடியது யார்?" என்று பாபபுத்தி உரக்கக் கூவினான்.

தர்மபுத்திதான் பணத்தை எடுத்தான்! அவனே திருடன்" என்று சத்தமாக ஒரு குரல் பதிலளித்தது.

நீதிபதி தன்னுடன் வந்த நபரிடம் என்ன நடந்தது என்பதை உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது எதேச்சையாக தர்மபுத்தி காய்ந்த சுள்ளிகளையும், சருகுகளையும் பொறுக்கி மரத்தைச் சுற்றிப் போட்டு அதற்கு நெருப்பு பற்ற வைத்தான். அதனால் மரம் முழுவதும் நெருப்பு விரைந்து பற்றியது.

"காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று மரத்திலுள்ள ஒரு பெரிய பொந்திலிருந்து ஒரு குரல் கேட்டது. அது பாபபுத்தியின் வயதான தந்தையின் குரலாகும். அவர் காப்பாற்றப்பட்டவுடன் எல்லோரிடமும் "பாபபுத்திதான் இங்கே ஒளிந்து கொள்ளச் சொல்லிவிட்டு, தர்மபுத்திதான் திருடன் என்று கூறும்படி அவன்தான் என்னைச் சொல்லச் சொன்னான்"! என்றார்.

"அப்படியா! உண்மையான திருடன் யார் என்பது தெரிந்துவிட்டது! அவன் ஓர் அப்பாவிக்குத் தீங்கு செய்ய முயன்றதற்காகத் தண்டிக்கப்படவேண்டும். அதனால் பாபபுத்தியை இந்த மரத்திலேயே தூக்கிலிடுங்கள்!" என்று நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

பார்த்தீர்களா? தர்மபுத்தியை ஏமாற்ற வேண்டுமென்று பாபபுத்தி நினைத்தான். ஆனால், அது தனக்கே வினையாக முடியும் என்று அவன் எண்ணவில்லை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.10.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **564**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 562

பரிசுக்குரியவர்:
**ஆர். திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை.**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| நந்தகுமார் தர்ஷினி, 271, காந்திநகர், திருகோணமலை. | அஜந்தன், தரம் 1, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை. |
| ச. ஜேக்கப் ஜெனஸ், தரம் 9 A, மட்/ புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | எம். எச் அமானி, தரம் 2, கஹட்டபிடியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| ஜெ. ஜெயராசா, தரம் 3, அளவெட்டி தெற்கு, றோ.க.த.க. பாடசாலை, அளவெட்டி. | த. அன்பு மைந்தன், 8B, பெரேராலேன், கொழும்பு -06 |
| ஆர். பேர்டி, 143/15, ஜிந்துப்பிட்டி தெரு, கொழும்பு-13. | ரா.திவ்யா, தரம் 5B, ப/தமிழ் மகளிர் மகாவித்தியாலயம், பதுளை. |
| செல்வம் தெய்வீகன், 64, பிரதான வீதி, புளியங்குளம், திருகோணமலை. | முஸ்தாக் அ.'.மட், தரம் 4, க/தெல்தெனிய முஸ்லிம் வித்தியாலயம், பலகொள்ள. |

# பொன்னைவிட உயர்ந்தது!




பொன்னை விட உயர்ந்தது
என்ன? என்ற கேள்வியை
சின்ன வயதில் காந்தியும்
தேர்வுத் தாளில் கண்டனர்.

பொன்னை விட உயர்ந்தது
உண்மை, உண்மை, உண்மைதான்
என்ற பதிலை காந்தியும்
எழுதி னாரே மகிழ்வுடன்.

சின்ன வயதில் உண்மையின்
சிறப்பை உணர்ந்த காந்திதான்
பின்னர் உலகிவ் மிகமிகப்
பெரிய மனிதர் ஆயினர்.

# அதிசய உலகம்

## மீன் சிகிச்சை



தோல் வியாதிகளால் மனிதன் படும் அவஸ்தையைக் கண்டு பொறுக்க முடியாமல், மீன்களே சிகிச்சை அளிக்கத் தொடங்கிவிட்டன. ஆம்! அவுஸ்திரேலியாவின் ஒரு பகுதியான காங்கல் (Kangal) என்னுமிடத்தில் உள்ள நீர்த்தேக்கங்களில் வாழும் ஆயிரக்கணக்கான கறுப்பு நிற மீன்கள்தான் மனிதனுக்கு சிகிச்சை அளிக்கின்றன.

தோல் நோயுள்ளவர்கள் இக்குளத்தில் நீண்ட நேரம் இருக்க வேண்டும். இக்குளத்தில் உள்ள நீர் உப்பாகவும், தீத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. தோல் நோய் உள்ளவர்கள் இக்குளத்து நீரில் மூழ்கியதும், இங்குள்ள கறுப்பு மீன்கள், தங்களின் கூரிய பற்களால் நோய் புண்களைக் கடித்து, கிழித்து தோலுக்கு மேல் உள்ள வீக்கத்தையும் கொப்புளங்களையும் தின்று விடுகின்றன.

இப்படித் தின்பதுதான் இந்த மீன்களில் ஸ்பெஷல் சிகிச்சையாகும். அத்தகைய மீன் சிகிச்சையைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். இந்த மீன் சிகிச்சை மூலம் சொறி, தடிப்பு, அரிப்பு ஆகியவை இருந்த சுவடே தெரியாமல் அழிந்து விடுகிறதாம்.

இந்த மீன்களின் சிகிச்சையை அறிந்த பலநம் கூட்டம் கூட்டமாக காங்கலை முற்றுகை இடுகின்றனராம்.

இந்த மீன் சிகிச்சையைப் பற்றி பிரெஞ்ச் நாட்டுத் தொல் மருத்துவர் டாக்டர் ஐகோடீ ஜின்ஸ்கி கூறுகையில் எத்தகைய வைரஸ் தாக்குதலால் ஏற்படும் நோயையும் இதன் மூலம் குணப்படுத்தி விட முடியும். ஆனால் இத்தகைய ஆச்சயமான சிகிச்சையைப் பற்றி இவ்வளவு காலம் தெரியாமல் போய்விட்டதே" என்கிறார்.

மனிதர்களுக்கு உதவி செய்யும் இந்த மீன்களின் தலைவிதி என்ன தெரியுமா? மனிதனின் நோய்த் தசைகள் அல்லாத பிற உணவுகளை இவை உட்கொண்டால் கண்கள் குருடாகி சில தினங்களில் இறந்து விடுமாம்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. தாவரங்களுக்கு இரு பெயர் சூட்டும் முறையை வகுத்தவர் யார்?
**கரோல்ஸ் லின்னேயஸ்.**

2. நுண்ணோக்கியின் துணையால் மயிர்த்துளைக் குழாய்களை முதலில் கண்டவர் யார்?
**மால்பிசு.**

3. புரோட்டா பிளசத்தை முதலில் கண்டவர் யார்?
**ஷல்ஸ்.**

4.கரு வளர்ச்சி பற்றிய உண்மையை முதலில் தெளிவுபடுத்தியவர் யார்?
**வொன்பேயர்.**

5. தாவரங்களுக்கு உயிருண்டு என்பதை முதன்முதல் கூறியவர் யார்?
**ஜகுதீஸ் சந்திரபோஸ்.**

6. பரம்பரைஇயல் பற்றி முதன் முதலில் ஆராய்ந்தவர் யார்?
**வீஸ்மேன்.**

7. பக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள் உண்டென்பதை முதலில் கண்டறிந்தவர் யார்?
**அன்ரனி வான்லெவன் ஹீக்.**


8. வைத்தியவியலின் தந்தை யார்?
**ஹிப்போக்கிரட்டல்**

9.தாவரவியலின் தந்தை யார்?
**தியோ.'.ப்ரட்டன்.**

10. இருதயமாற்று சிகிச்சையில் வெற்றி கண்ட தென்னாபிரிக்கர் யார்?
**போராசிரியர் கிறிஸ்டியன் பேர்னாட்**

# தகவல் பெட்டி

## முடிசாமி



இந்த மனிதர் ஒரு இந்திய சாமியார். இவரது முடியின் நீளம் 2.26 மீற்றர்கள். எல்லாச் சாமியார்களும் தாடி வளர்ப்பார்கள். இவர் வித்தியாசமான சாமியார் அல்லவா)

பட உதவி :- ஸப்ரீனா ஹமீஸ்



# இரண்டு கால்களில் நடமாடும் உலகின் ஒரே விசித்திர விலங்கு

சில நேரங்களில் நாம் எவ்வளவுதான் மூளையைக் கசக்கி யோசித்தாலும் விடை காண முடியாத வினாக்களைக் கேள்விப்பட்டிருப்போம். அதாவது இது எப்படி நடக்கும்; இவ்வாறு நடக்கக்கூடிய சாத்தியம் உள்ளதா என்று நாமே யோசிக்க முடியாத கதைகள். நாம் இப்போது உங்களுக்கு கூறப்போவதும் அவ்வாறான அதிசயக் கதை ஒன்றே. சில நேரங்களில் இப் புகைப்படத்தை நீங்கள் காணாவிடின் நாம் கூறப்போகும் கதையையும் நீங்கள் நம்மால் இருக்க இடமுண்டு.

இக் கதையின் கதாநாயகன் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் அமெரிக்காவின் ஓக்லோமா பிராந்தியத்தில் வசிக்கும் ஒரு நாயார். ஆனால் இவர் நாம் நினைப்பது போல் சாதாரணமானவரல்ல. இரண்டு கால்கள் மாத்திரம் உள்ள 'பேத்' என்ற இந்த நாயின் சிறப்பம்சம் என்னவென்றால் இது மனிதரைப் போல் இரண்டு கால்களில் நடக்கக்கூடிய சாத்தியத்தைப் பெற்றிருப்பதே.

"எங்களுக்கு பேத் ஐ வளர்க்கக் கிடைக்கும்போது அதற்கு வயது 3 வாரங்கள். அதன் முன்னங்கால்கள் நன்கு வளர்ச்சிடையந்திருக்கவில்லை. இதனால் அது தானாகவே தனது சக்தி மிக்க பின்னங்கால்களைக் கொண்டு நேராக நடக்கத் தொடங்கியது. உண்மையில் இது மிகவும் அதிசயமானது. பேத் நிறைய உணவு உண்ணும். நன்றாக விளையாடும். நாங்கள் அனைவரும் அவனை நேசிக்கிறோம். பேத்தின் தற்போதைய வயது 7 மாதங்கள்" இவ்வாறு கூறுவது பேத் ஐ தத்தெடுத்து வளர்த்து வரும் ஸ்டிங்பேலோ குடும்பத்தின் தலைவியான லோரா. தங்கள் குடும்பத்திற்குப் பரிசாகக் கிடைத்த முன்னங்கால்கள் நல்ல முறையில் வளர்ச்சியடையாத இந் நாய்க் குட்டியின் மேல் அனுதாபங்கொண்டு அதற்கு கருணை காட்டிய ஸ்டிங்பேலோ குடும்பத்தவர்கள், முதன்முதலாக இந் நாய்க் குட்டிக்கு பனிக்கட்டி மேல் எழுந்து நிற்பதற்குப் பயிற்சியளித்தனர். காலப்போக்கில் அதன் கால்கள் நன்கு பலமடைந்ததோடு எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் தனது இரண்டு கால்களினால் நடக்கவும் ஆரம்பித்தது.

"பேத் எங்களுக்குப் பரிசாகக் கிடைத்ததிலிருந்து நாம் அதனை மீளக் கொடுக்க யோசிக்கவே இல்லை. நாம் போகும் இடங்களுக்கு எல்லாம் இனி அதுவும் பின் தொடரும்" என்று, எதிர்வீட்டு நாயைத் துரத்தும் பேத்தைப் பார்த்து புன்னகைத்தபடி லோரா கூறினார். தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களின்படி உலகில் இவ்வாறு இரண்டு கால்களில் நடக்கும் ஒரே நாய் பேத் மட்டுமே.




பேத் இன் இக் குறைபாட்டைக் கண்ட லோரா குடும்பத்தினர் அதனை தாங்கள் வளர்ப்பதற்கு தீர்மானித்ததிலிருந்தே அவர்கள் பூர்வ ஜென்ம புண்ணியத்தைத் தேடிக்கொண்டனர். உண்மையில் இவ்வாறான அங்கவீனமான மிருகத்தை வளர்ப்பதற்கு முன்வருவார் எத்தனை பேர்?

பிறவியிலேயே ஊனமுற்றிருந்த பேத்தின் கால்கள் அது வளர்ச்சியடையும்போது மேலும் சூம்பத் தொடங்கியது. இறுதியில் இதற்கு வைத்திய சிகிச்சை மேற்கொண்டு அதன் முன்னங்கால்களை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இல்லையென்றால் பேத் இன் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும்.

அறுவைச் சிகிச்சையின் பின் அதன் காயம் ஆறாமல் நீர் வடிந்ததால் தொடர்ந்தும் மருத்துவ உதவியை நாடவேண்டி ஏற்பட்டது. வைத்தியர் இதற்கு சிகிச்சை அளித்துள்ளார். மேலும் அதன் கால்கள் இருந்த இடங்களில் பெனல் துணியினால் கட்டி காய வைத்துள்ளனர். பேத் இதற்கு அவ்வளவு விருப்பம் தெரிவிக்காதபோதிலும் நோய் குணமாவதற்கு இவ்வாறான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இன்னும் சில நாட்களில் அது பரிபூரண குணமடையும் என்று ஸ்டிங்பேலோ குடும்பத்தின் தலைவனான ஜூட் தெரிவித்தார்.

ஒக்லோமா பிராந்தியத்தின் மிகப் பிரபல்யமான பாத்திரமாக மாறியுள்ள பேத், அண்மையில் நியூயோர்க் நகரத்தில் இருந்து ஒளிபரப்பாகும் 'டுடே ஸோ' என்ற நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்தபோதிலும், அந் நகரில் ஏற்பட்ட திடீர் மின்சாரத் தடை காரணமாக இந் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவில்லை. கலிபோர்னியாவில் நடைபெறவுள்ள மிருக நடைப் போட்டியிலும் கலந்துகொள்வதற்காக பேத் இப்போது ஆயத்தமாகியுள்ளது.

# இது என்ன?



மனிதர்கள் மாத்திரமா பத்திரிகை படிப்பார்கள். இந்த பம்பாய் குரங்கும் பத்திரிகை படிக்கின்றது. மனிதர்கள் மிருகங்களாகி உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நடத்திவரும் வெறியாட்டங்கள் அதிகரித்துவிட்டன. அந்த அநியாயத்தை வியந்து பார்க்கிறதோ இந்தக் குரங்கு?



## சினி விசிட்

## இதுதாங்க மேட்டரு!




அஜித் நடிக்க சரண் இயக்கும் 'அட்டகாசம்' படத்தின் போட்டோசெஷன் நடந்த போது திடீர் விசிட் அடித்தார், கமல். வரவேற்றார் அஜித். விடைபெறும் முன்பு அஜித்திடம் 15 நிமிடம் தனியாகப் பேசிவிட்டுப் புறப்பட்டார் கமல்.

என்ன பேசினார்களாம் தெரியுமா? யார் உடம்பில் எத்தனை தடவை அடிபட்டிருக்கிறது? எத்தனை இடங்களில் பிளேட் வைக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றித்தான் 15 நிமிடமாகப் பேசினார்களாம். இரண்டு பேருமே அதிக விழுப்புண்களுடன் சினிமா வெற்றியை தொட்டவர்கள் என்பதுதான் இதில் ஹைலைட்.

## தேடி வந்த விருது...

'இயற்கை' படத்தை தேசிய விருதுக்கென அதன் தயாரிப்பாளரோ இயக்குநரோ அனுப்பவில்லை யாம். பிறகு எப்படி விருது?

படத்தின் ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம், அவரது சொந்தச் செலவில் அனுப்பி வைத்தாராம். படத்துக்குத் தேசிய விருது கிடைத்த பிறகே இந்த விஷயம் தெரிய வந்திருக்கிறது.

இதை நம்மிடம் சொல்லும்போது 'இயற்கை' இயக்குநர் ஜனநாதன் முகத்தில் அத்தனை பிரகாசம்.

## ட்ராப் ஆன 'சென்னையில் ஒரு மழைக்காலம்'

சென்னைக்கும் மழைக்கும் ஒத்தே வராது போலிருக்கிறது.

கௌதம் இயக்கத்தில் சூர்யா நடித்து வந்த 'சென்னையில் ஒரு மழைக்காலம்' ப்ராஜெக்டே கைவிடப்பட்டுவிட்டதாம்.

படப்பிடிப்பைத் தொடங்காமல் கௌதம் இழுத்தடித்ததால் அதிலிருந்து சூர்யா விலகிவிட்டதாகச் சொல்கிறார்கள். இதையடுத்து பாலா தயாரிப்பில் ராம் சத்யா இயக்கப் போகும் படத்தில் நடிக்கப் போகிறார் சூர்யா.

'காக்க...காக்க' இமாலய வெற்றிக்குப்பின் மீண்டும் இணைந்தனர் சூர்யாவும் டைரக்டர் கௌதமும். இதற்காக அவர் கேட்ட கால்ஷீட்டை மொத்தமாக அள்ளித் தந்தார் சூர்யா. 'சென்னையில் ஒரு மழைக்காலம்' என்ற பெயரில் படத்தை ஆரம்பித்த கௌதம், அதைப் பாதியில் விட்டுவிட்டு தெலுங்கில் 'காக்க...காக்க' எடுக்கப் போய்விட்டார்.

மழைக்காலத்துக்கு தந்த கால்ஷீட்டை அப்படியே மாற்றி, கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்க, பாலா இயக்க இருந்த படத்துக்குத் தந்தார் சூர்யா. ஆனால் மழைக்காலத்தை முடித்துவிட்டுத்தான் சூர்யா வருவார் என்று எண்ணியிருந்த தாணுவும், பாலாவும் அதற்குள் தங்களது பிற படங்களை ஆரம்பித்துவிட்டனர்.

(தாணுத் தொட்டி ஜெயா படத்தில் பணத்தைக் கொட்டிக்கொண்டிருக்கிறார். அஜித்தை வைத்து ஏ.எம்.ரத்னம் தயாரிக்கப் போகும் படத்தை இயக்குவதில் பாலா பிஸி).

இதனால் படப்பிடிப்பைத் தொடங்க கொஞ்சம் டைம் எடுக்கும் என்று தாணுவும் பாலாவும் சொல்லிவிட சூர்யா மீண்டும் அப்ஸெட். சூர்யாவின் மனம் தொடர்ந்து கஷ்டப்படுவதை உணர்ந்த ஜோதிகா, படத்தை தானே தயாரிக்க முன் வந்தார். இதை அறிந்த தாணு, பாலாவை அழைத்து நீங்களே படத்தைத் தயாரியுங்கள் என்றாராம்.

பாலா தயங்க, "பணத்துக்கு நான் இருக்கேன். பார்த்துக்குவோம், சூர்யாவுக்காக தைரியமா இறங்குங்க" என்று ஊக்கம் தந்தாராம் தாணு. இதையடுத்து தயாரிப்பாளர் அவதாரம் எடுத்துள்ளார் பாலா.

படத்துக்கு 'மாயாவி' என்று பெயர் சூட்டியுள்ள பாலா, இதை இயக்கும் பொறுப்பை தனது அஸிஸ்டெண்ட் ராம் சத்யாவிடம் ஒப்படைத்துவிட்டார்.

அர்ஜுனுடன் 'மணிகண்டா' படத்தை முடித்துவிட்டு ஜோதிகாவே இதில் ஹீரோயினாக நடிக்கப் போகிறாராம்.

பி ஸ்டுடியோ என்ற பெயரில் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கியுள்ள பாலா, வருடத்துக்கு 2 படங்களைத் தயாரிக்கப் போகிறராம்.

பாலாவுக்கும் தாணுவுக்கும் பல வருடப் பழக்கம் உண்டு. பாலுமகேந்திராவை வைத்து 'மறுபடியும்' என்ற படத்தைத் தயாரித்தபோது அவரிடம் ஜூனியராக இருந்த பாலாவின் சுறுசுறுப்பு, திறமையை அடையாளம் கண்டுகொண்டவர் தாணு. பாலாவுக்கு முதன்முதலாக சினிமாவில் சம்பளம் கொடுத்தவரே தாணுதான். சிரமத்தில் இருந்த பாலாவுக்கு, 'மறுபடியும்' படத்துக்காக ரூ.65,000 ஊதியம் தந்தாராம் தாணு. அதே போல பாலாவுக்கு ஆரம்பத்தில் இருந்தே ஆறுதலாக இருந்த இன்னொருவர் சூர்யாவின் தந்தை சிவகுமார்.

'யவனிகா' என்னும் மலையாளப் படத்தின் கதையை வாங்கித் தமிழில் சத்யராஜ் நடிக்க, படத்தை இயக்கவிருக்கிறார் மணிவண்ணன். இப் படத்தில் தன் மகன் ரகுவண்ணனைப் பிரதான வேடத்தில் நடிக்க வைக்கத் திட்டமிட்டுள்ளார் மணிவண்ணன்.






## மும்தாஜூடன் போட்டியில் நமீதா!

"இன்றைய இளைஞர்கள் விரும்புவது கவர்ச்சியைத்தான். கிளாமர் என்பது இன்று கட்டாயம் ஆகிவிட்டது. எல்லா நடிகைகளுமே கிளாமராகத்தான் நடிக்கிறார்கள் நான் மட்டும் அதிகக் கவர்ச்சி காட்டுகிறேன் என்று கூறுவது தவறு. கவர்ச்சிக்கு ஒரு அளவுகோல் உண்டு. அதைத் தாண்ட மாட்டேன்" என்று மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார் நமீதா.

'மகா · நடிகன்' படத்தில் சத்யராஜ் நடிகனாகவே நடிக்கிறார். மேலும் நமீதாவும் மும்தாஜும் நடிகைகளாகவே நடிக்கிறார்களாம். "கவர்ச்சிக்குத்தான் நான் இருக்கிறேனே...எதுக்கு மும்தாஜ்" என்று முதலில் கோபித்த நமீதா, பின்னர் "நானா அவரா என்று பார்த்துவிடுகிறேன்" என்று களத்தில் இறங்கிக் கலக்கிக் கொண்டிருக்கிறாராம்.

படத்தில் சத்யராஜின் இரசிகர் மன்றத் தலைவராக பாரதிராஜாவின் மகன் மனோஜ் நடிக்கிறார். அவரது ஜோடியாக 'ஆட்டோகிராப்' மல்லிகா நடிக்கிறார்.

# இப்போதைக்கு கல்யாணம் இல்லை ஸ்நேகா



**ஸ்**நேகாவுக்குத் திருமணம், மாப்பிள்ளை பார்க்கிறார்கள் என்று கோடம்பாக்கத்தில் கிசுகிசு பரப்பப்பட்டதால், நொந்து போன ஸ்நேகா தனது துபாய் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு சென்னை திரும்பியுள்ளார்.

"இப்போதைக்கு எனக்கு கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. படம், படம், படம் மட்டுமே எனது இப்போதைய கவனம்.

நான் நடித்த 'போஸ்' படம் முடிந்துவிட்டது. அதில் படு சுட்டிப் பெண்ணாக, வாயாடியாக நடித்துள்ளேன். இப்போது என் கைவசம் இரண்டு அருமையான தமிழ்ப் படங்கள் உள்ளன. 'அது' என்று ஒரு படம். 'ஆயுதம்' என்று பிரசாந்துடன் (இதில் மாமி ரோல) இன்னொரு படம். இரு படங்களும் நல்ல கதைகளைக் கொண்டவை.

இது தவிர தெலுங்கிலும் ஒரு படம் செய்து வருகிறேன். வரிசையாக எனது படங்கள் வரப் போகின்றன. எனது இப்போதைய கவனமெல்லாம் படங்களின் மீதுதான். 'ஆட்டோகிராப்', 'பார்த்திபன் கனவு' ஆகிய படங்களுக்குப் பிறகு நான் கேரக்டர்களை செலக்ட் செய்வதில் மிகவும் கவனமாக உள்ளேன்.

கவர்ச்சி காட்டுவதிலோ, ஆபாசமாக நடிப்பதிலோ எனக்கு உடன்பாடு இல்லை. கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும் கவர்ச்சியாக நடிக்க மாட்டேன். குடும்பப் பாங்கான ரோல்களுக்கு மட்டுமே கால்ஷீட் கொடுப்பேன். அதற்காக எப்போதும் புடைவையுடன்தான் நடிப்பேன் என்று கூறவில்லை.

அதே போல, உதட்டுடன் உதடு வைத்து முத்தம் கொடுக்கும் காட்சிகளிலும் நடிக்க மாட்டேன். கதைக்குத் தேவை என்று சாக்குப் போக்கு சொல்லி இது போன்ற காட்சிகளில் நடிக்க நான் தயாராக இல்லை. எனது இப்போதைய கவனம் எல்லாம் படம், படம், படம்தான், கல்யாணத்தில் அல்ல" என்றார்.

"உங்களுக்கு கல்யாணம் என்று கோடம்பாக்கத்தில் வதந்தி பரப்பியது யார் என்று நினைக்கிறீர்கள்" என்று கேட்டபோது, பதில் சொல்ல ஸ்நேகா மறுத்துவிட்டார்.

சில ஓல்டு நடிகர்களுடன் ஸ்நேகா ஜோடி சேர மறுத்ததால், அவர்கள்தான் சமயம் பார்த்து இந்த வதந்தியைக் கிளப்பியதாக கோடம்பாக்கத்தில் பேச்சு நிலவுகிறது.



சினேகா

# ஏப்ரல்.14இல் அரசியல் பிரவேசம் : விஜயகாந்த்

**வ**ரும் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி அரசியலில் ஈடுபடுவது பற்றி அறிவிப்பேன் என்றும் அடுத்த தேர்தலில் தன் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுவார்கள் என்றும் நடிகர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது; (படம் ரிலீஸ்க்கு முன் ஏதாவது பரபரப்பு அறிவிப்பு வெளியிடும் நடிகர்களில் முக்கியமானவரான விஜயகாந்தின் சொந்தத் தயாரிப்பான 'நெறஞ்ச மனசு' படம் விரைவில் வெளியாக உள்ளது. இதை மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பேட்டியைப் படிக்கவும்)

"எனது அரசியல் பிரவேசம் பற்றி வரும் ஏப்ரல் மாதம் 14ம் திகதி அறிவிப்பேன். தேர்தல் நேரத்தில் தீவிர அரசியல் பற்றிய அறிவிப்பு வெளியிடுவேன். அதுவரை ஊறுகாயை தொடுவது போல் என் படங்களில் அரசியல் வசனங்கள் நிச்சயம் இடம்பெறும்.

கடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் எனது இரசிகர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றது போல், அடுத்த பொதுத் தேர்தலிலும் போட்டியிடுவார்கள்.

'கஜேந்திரா' எனது 145ஆவது படம். தெலுங்கில் 'சிம்மாத்ரி' என்ற பெயரில் சூப்பர் ஹிட்டான படத்தை தமிழில் தயாரிக்கும் உரிமையை நான் வாங்கி வைத்திருந்தேன். அந்த நேரத்தில் தயாரிப்பாளர் வி.ஏ.துரை என்னிடம் வந்து, அந்தப் படத்தை தானே தயாரிப்பதாக சொன்னார்.

தயாரிப்பில் இருந்தபோது சில பிரச்சினைகள் உண்டாயின. என் மைத்துனர் சுதீஷ் உள்பட பல தயாரிப்பாளர்கள் உட்கார்ந்து பேசி, பிரச்சினைகளைத் தீர்த்து, படம் வெளிவர உதவினார்கள்.

'கஜேந்திரா' என்பது விநாயகரின் பெயர். அதனால் விநாயகர் சதுர்த்தி அன்று படத்தை ரிலீஸ் செய்ய வேண்டும் என்பதில், விநியோகஸ்தர்கள் உறுதியாக இருந்தார்கள். நான் நடித்த படங்களில் அதிக பிரிண்ட் போடப்பட்ட படம் இதுதான். இந்தப் படத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து நான் இப்போது விளக்கம் அளிக்க விரும்பவில்லை. தேவைப்பட்டால் நிச்சயம் விளக்கம் அளிப்பேன்.

படத்தில் எந்த வசனமும் நீக்கப்படவில்லை. இரட்டை அர்த்தம், இரத்த சேதாரம் காரணமாக சென்சாரில் 6 இடங்களில் கட் கொடுத்தார்கள். 'கேப்டன் பிரபாகரன்', 'வல்லரசு' மாதிரி 'கஜேந்திரா'வும் வெற்றி பெறும் என்று கூறினார் விஜயகாந்த்.

**ஜோ**திகா இரசிகர்களுக்கு இனிப்பான செய்தி... மீண்டும் புது வேகத்தோடு களமிறங்குகிறார் ஜோதிகா! இதுவரை தடையாக இருந்த தயாரிப்பாளர் சங்கத் தடையை நீக்குவதற்கு முதல் ஸ்டெப் எடுக்க நினைத்த ஜோதிகா, 'மணிகண்டா' படத்திற்காக இரண்டு ஷெட்யூலாக கால்ஷீட் கொடுத்து தனது போர்ஷனை முடித்துக் கொடுக்க, தயாரிப்பாளரும் தனது புகாரை வாபஸ் வாங்கிக்கொள்ள, தடையை நீக்கிவிட்டது தயாரிப்பாளர் சங்கம்! விரைவில் புதுப் படங்களில் ஜோதிகாவின் பெயரைக் காணலாம்.

'வாழ்நாள் முழுவதும் நடித்துக் கொண்டிருக்க வேண்டும். என் வாழ்க்கை சினிமாவில்தான் முடிய வேண்டும்' என்ற கொள்கையில் உறுதியாக இருக்கும் கமல், சினிமாவுக்காக எவ்வளவோ விஷயங்கள் செய்திருக்கிறார். லேட்டஸ்டாக அவர் செய்யவிருப்பது, ஹெலிகாப்டர் ஒன்றை வாங்கவிருப்பதுதான்!. காரணம்... ஒரு மணி நேரத்துக்கு ஹெலிகாப்டர் ஒன்றை வாடகைக்கு எடுத்தால் இருபத்தைந்தாயிரம் கொடுக்கும் திரையுலகினரின் கஷ்டத்தை நினைத்துத்தான் இப்படியொரு முடிவு. இதன் மூலம் தனது படங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு மீதி நேரங்களில் குறைந்த செலவில் வாடகைக்கு விடவும் முடிவு செய்திருக்கிறார் கமல்!.



சூர்யா



விக்ரம் + ஸ்ரீகாந்த்

**பா**லா தயாரிப்பில் சூர்யா நடிக்கப்போகும் படத்திற்கு ஒளிப்பதிவாளராக ரத்னவேலு ஒப்பந்தம் செய்யப்படடுள்ளார். இதிலென்ன விசேஷம் என்கிறீர்களா... இருக்கே... 'சேது', 'நந்தா'விற்கு பிறகு மனக் கசப்பால் பிரிந்த பாலா-ரத்னவேலுவுக்கிடையே சமரசம் பேசி சேர்த்து வைத்திருக்கிறார் சூர்யா! 'பேரழகன்' படத்தில் ரத்னவேலுவின் ஒளிப்பதிவு பிடித்துப்போனதால்தான் சூர்யா இந்த வேலையைச் செய்திருக்கிறார்! இதற்குப் பிரதியுபகாரமாக சூர்யாவின் விருப்பப்படி ஜோதிகாவை நாயகியாக்கியுள்ளார் பாலா.

சமீபத்தில் மியூசிக் அகாடமியில் நடந்த கௌதமியின் மகள் சுப்புலட்சுமியின் பாலே நடன அரங்கேற்றத்தை, முன் வரிசையில் அமர்ந்து இரசித்துப் பார்த்தார் கமல்!

**'ம**துர' படத்தைத் தொடர்ந்து 'தம்' ரக்ஷிதாவிற்கு தமிழில் தனுஷுடன் ஒரு படத்தில் கெஸ்ட் ரோலில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.




## அமில அவஸ்தை....!



சிபா
சிந்தப்பட்ட
கண்ணீருக்குச்
சொந்தக்காரி நீ!

இனம்புரியாவலி
அமிலத்தை
விடவும்
அவளே
அவஸ்தையாய்!

எத்தனை
இரவுகள்
வந்துவிட்டடும்
சூரியனால்
சுடப்பட்ட
இரவுகள் - மிக
கொடுமையானதடி!

யாரால்
கிடைத்த
தண்டனையோ
சின்ன நிலவொன்று
சித்திரவதை
செய்து
கொண்டிருந்தது!

திருமண
தினத்தையாவது
சொல்லியனுப்பு
உன் வீதியில்
விழிவைக்காமலே
இருந்து விடுகிறேன்!

–நஸீம் ரூமி, புத்தளம்.

## மற்றைய ஜீவனுக்காய்..

கண்களே!
கண்ணீர் பெருக்குங்கள்
ஒரு துளிக் கண்ணீர் உள்ளவரை.
ஏனெனில் நீங்கள்
அவரைப் பார்க்க முடியாது.
செவிகளே! நீங்கள்
செயலற்றுப் போங்கள்.
நாதம் என ஒலிக்கும்
என் நாதனின் குரலை
இனி உங்களால்
கேட்கமுடியாததால்.
நாவே! நீ
சக்தி உள்ளவரை
அழு.
அவர் நாமம் நீ
உச்சரிக்க
முடியாததால்.
விரல்களே! நீங்கள்
விலகி விடுங்கள்.
கடிதம் எழுதும்
கடமை இனி
உமக்கில்லாததால்.
நெஞ்சே! ஏன்
துடிக்கிறாய்
இதயமே ஏன்
தவிக்கிறாய்
மாற்றாள்
மணாளனாய் அவர்
மாறிவிட்டதனாலா?
மறந்துவிடு
மற்றைய
ஜீவனுக்காய்.

–பானு, அட்டாளைச்சேனை.

## கசக்கும் நினைவுகள்




என்னிதய வீணையில்
அவளின்
நினைவுக் கீதத்தை....
உயிர்ப்பித்து விட்டவள்
வெளிநாட்டு
வீதிகளில் உலவுகின்றாள்...!

வருடச் சக்கரங்கள்
பல சுழன்ற போதிலும்....
அவளின் கடித வாகனம்
இன்னும் எனை நோக்கி
வரவே இல்லை...!

ஏக்க ஆற்றில்
நான் நீச்சலடித்து
கொண்டிருக்க.....
மடலொன்று
என் தரிசனம்
தேடி வந்தது....!

"அன்பரே....
என் நினைவுக் கவிதைகளை
கிழித்து வீசி விடுங்கள்"
என்றும்....
"நான் வேறொரு
இதயச் சிறையில்
கைதியாகி விட்டேன்"
என்றும்.....
எழுத்துக்களைக்
கோத்திருந்தாள்...!



வெளிநாட்டுக் காந்தங்கள்
பெண் இரும்புகளைக்
கவர்ந்திழுக்கும் வழக்கம்
எனக்குத் தெரியும்....
ஆகையால் நாளெல்லாம்
அவள் நினைவுகளைக்
கசக்கிக் கொண்டே
இருக்கிறேன்....!

–எம்.ரி.எம்.யூனுஸ்,
காத்தான்குடி – 01.

## இருமனங்கள் இணைந்தால்....

வாழ்க்கை என்பது தோணியடா!
அதை,
வலித்துச் செல்வது இரு வரடா!
ஆழக்கடலைக் கடந்து செல்ல
ஆண், பெண் ஒற்றுமை தேவையடா!

காலைப் புயலை எதிர்கொண்டு சில
கடமையை அதிலே ஏற்றிக்கொண்டு,
தாழக்கடலில் வலித்துச் செல்லத்
தத்துவம் பலபல உள்ளதடா!
இருமனம் இணைந்தால் கரை சேரும்
அந்த,
இருவரும் சரிந்தால் திசைகூட மாறும்.
பெருங்கடல் வெளியில் அலை
மோதும், அங்கு
பெயரும் காற்றின்
வழிபோகும்.

–கார்த்தீபன், வவுனியா.

## இருட்டறை

உன் இதயம் எனும்
இருட்டு
அறைக்குள் நுழைந்த
நான்
அன்று தான் இறுதியாக
வெளிச்சத்தில் இருந்த
நாள்.
மறுபடியும்
வெளிச்சத்திற்கு
வரலாம் என்று
நினைத்தால்
மதுவுக்கு ஆளாகி
விடுவேனோ
என்ற பயம்
இறுதியில் என் வாழ்வு
இருட்டறை ஆகிவிடுமோ
உன்னால்?

–நடராஜ் சசிக்குமார்,
பூண்டுலோயா.

## நீ இல்லாததால்.......

எங்கோ மின்னல்
தடுக்கப்பட்டுக் கிடக்கிறது;
ஒளிமட்டும் தெரிகிறது.
நானோ ஏமாற்றத்துடன்
தொடர்ந்து தவிக்கிறேன்;
பூமி நடுங்குகிறது
கண்களில் பருவகாலங்கள்...
எனக்கு நானே
பேசிக் கொள்கிறேன்;
நீ இல்லாததால்
ஆயினும்!
உனை அடைவதே
என் பித்துப்பிடித்த
மனத்தின் உணர்ச்சிப் புயல்.

–பானு, வாழைச்சேனை.

## சமாதான இவ்வுலகில்

முடிவில்லா வெடியோசை
முற்றுப்பெற வேண்டும் என்றால்
மும்மதமும் ஒன்றுபட்டால்
முளைத்துவிடும் சமாதானம்.

நாம் பிறந்த தேசத்தில்
நான் என்றும் நீ என்றும்
நாம் போடும் சண்டைகள்
நாளையொரு காலத்தில்
நம் சந்ததி காண நேர்ந்தால்
நாட்டில் யார் மிஞ்சுவார்
நாட்டை யார் சொந்தம்
கொண்டாடுவார்?

சாதி, மத பேதமின்றி வாழ்வோம்
நாட்டில்
சகலரையும் ஒரு கண்ணாய்ப்
பேணுவோம்
சமத்துவத்தை மும்மதமும்
நாட்டுவோம்
சமாதான இவ்வுலகில்.....!

–பீ.சதீஸ்வரன், தாண்டியடி.

## மழை

இடியன்னை
அடித்ததால்
இடியென
அழுகிறாயோ?
சிரித்தது
மின்னல்.
அதைக் கேட்டு
மேலும்
கண்ணீர்
வடித்தது
மேகம்.

## சிகரெட்

நீயோ
தீயால் என்னை
அழிக்கிறாய்!
நானோ
புகையால்
உன்னை
அணைக்கிறேன்.
சிரித்தது
சிகரெட்.

## தாலாட்டு

உலகிலுள்ள
எல்லா
ஓசையையும்
கூட்டி
சேய்க்காக
தாய்
பாடிய
இனிய இசை
தாலாட்டு.

## மெழுகுவர்த்தி

இருளை
அழிப்பதில்
இங்கு நான் தான்
சக்கரவர்த்தி!
தீயோ என்னை
அழிக்கிறது
அழுதது
மெழுகுவர்த்தி!


–அருள்.சக்தியன், தாண்டியடி.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*கவிதையின் நிலமும் காற்றும் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கின்றன. பொதுவான அடையாளங்களுக்குள்ளும் வகைப்படுத்தல்களுக்குள்ளும் இருந்துகொண்டே, அதன் முன்னகர்வினைப் பறைசாற்றும் குரல்கள் தமிழ்க் கவிதைக்குள் தொடர்ந்து படர்ந்துகொண்டிருக்கின்றன.*
*மிக எளிமையான ஒரு சம்பவத்தைக் காட்சிப்படுத்துவதிலும், அதனூடாக வாழ்க்கையின் ஒரு கதியைக் கண்டுகொள்ள வைப்பதிலும் கவிதைகள் புதிய புதிய சாத்தியங்களை வெளிப்படுத்தி வருகின்றன. அத்தகைய பார்வைகள் சில இவ்வாறாக் கவிதைகளாக மலர்கின்றன.*



## மைதானங்கள்

காசு சுண்டலில்
தீர்மானமாகிறது
போட்டியின் தொடக்கம்.
அலையும் பந்து
ஒன்றே ஆதலின்
உதைக்கப்படுவதும்
உதை படுவதும்
அதன் மேலானது.

அடிக்கப்படும் பந்து
தடுக்கப்பட வேண்டும்
அல்லது
திருப்பப்பட வேண்டும்
பிடிக்கப்பட வேண்டும்
அல்லது
நகர்த்த வேண்டும்.
இவை
விளையாட்டின் விதிகள்.
அதிக நேரம்
பந்து வசமாதல்
நுட்பத்தின் சாதுர்யம்.

விளையாட்டோடு வாழ்தலும்
வேடிக்கையாகச் சாதலும்
கனவில் இருக்கு.
பந்துகளற்ற மைதான வெளியும்
பந்துகளெகிறும் மைதான வெளியும்
கண்முன் இருக்கு.

–தீர்க்கவாசகன்.

## மையம்

ஒரே ஒரு வாய்ப்புத்தான்
மிச்சமிருக்கிறது
விழுந்த மரத்தை எடுத்து
நடுவதற்கு.
குழந்தையைக் கொஞ்சுவதற்கு
துயருற்றுப் போன மனைவியைப்
பிரிய
வியாபாரத்துடன் தந்திரம் பண்ண
வாழ்வற்ற இளம்பெண்ணிடம் பரிவு
காட்ட
பசியால் நோயுற்றுவிட
நம்பிக்கையின் முகத்தில் காறியுமிழ
காட்டுக் கிழங்குகள் சுட்டுத் தின்ன
குறைந்த பட்சம் தற்கொலை
செய்துகொள்ளவாவது
உதாரணத்திற்குப் பிறந்தவர்களால்
நிறையும் பூமியில் ஒரே ஒரு
வாய்ப்புத்தான் மிச்சமிருக்கிறது.
உழுது பயிர் செய்ய அல்லது
ஏமாற்றிப் பிழைக்க
உற்பத்திப் பொருளீட்ட
அல்லது ஆட்களை வைத்துக்
கொலை செய்ய.
செருப்புத் தைப்பவனிடம் கேட்டேன்:
இடதுபுறம் திரும்பி நேராகப் போகச்
சொன்னான்.
திரும்ப வலதுபுறம் காணாது
திகைத்தேன்.
இப்போது நான் எங்கு நிற்கிறேன்
மையத்திலா

–யவனிகா ஸ்ரீராம்.

## வெறும் காற்று

சின்னதாய் இருந்த
பலூனை
வயிற்றிலிருந்து மூச்செடுத்து
ஊதி ஊதி பெரிதாக்கி
உப்புவதைப் பார்த்து
பெருமிதத்து நின்றேன்
சட்டென்று வெடித்து
சிதறும் வரை.

வெறும் காற்றாலான
எதுவும்
அதிகமாய் உப்பினால்
வெடிக்கத்தானே
வேண்டும்?

–வெ.இறையன்பு.

## குருவிகள்

தூசு கிளம்ப
பிள்ளைகள் விளையாடி
ஓய்ந்த மைதானமொன்றில்
தறிகெட்டு
குதித்தாடுகின்றன
இரட்டைவால் குருவிகள்.


–அ.வெண்ணிலா.

## விளையாட்டுப் பிள்ளைகள்


இரண்டு குழந்தைகள் விளையாடிக்
கொண்டிருந்தன அந்தப் பூங்காவில்.
ஒன்று-
ஊஞ்சலில் நின்றும் உட்கார்ந்தும்
ஒற்றைக் காலைத் தூக்கியும்
வேகமாக வீசி ஆடியும்
ஓவென்று கத்திக் கொண்டும் இருந்தது.
மற்றொன்று-
காலி ஊஞ்சலை வேகமாக
ஆட்டிக் கொண்டும்
ஓவென்று கத்திக் கொண்டும் இருந்தது.
எது நல்ல விளையாட்டு என்று
யார் கூற முடியும்?

–முகுந்த் நாகராஜன்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : ஜி.ராஜந்திரன்
வயது : 20
முகவரி :
கொழும்புகம, இல.03,
நிவித்திகல, இரத்தினபுரி.
பொழுதுபோக்கு:
வழமையானவை.



பெயர் : எஸ். ரி. நியாஸ்
வயது : 17
முகவரி : 83,
மாஞ்சோலை வீதி,
கிண்ணியா–03.
பொழுதுபோக்கு :
பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர் : பரமபதிராஜா.
வயது : 28
முகவரி : துளிர் வீடியோ
சென்ரர், கிராமக்கோடு,
பருத்தித்துறை
பொழுதுபோக்கு : பேனா நட்பு,
பத்திரிகை.



பெயர் : R.F.Mohamed Rifan.
வயது : 20
முகவரி : P.O. Box-
60671, Al-Khor, Doha,
Qatar.
பொழுதுபோக்கு : வழமையானவை.




# இளநீர் பற்றிய இனிய தகவல்கள்!


கொளுத்தும் வெய்யிலில் சிறிது நேரம் சென்று திரும்பிய உடனேயே நா வறண்டு ஏதாவது குளிர்ச்சியாகச் சாப்பிட வேண்டும் என்ற வேட்கையை ஏற்படுத்தும். அப்போது நம் கண் முன்னே பல பொருட்கள் விரியும்! ஐஸ்கிறீம், கோக், பெப்ஸி, ஃபன்ரா, பற்பல வண்ண வண்ண பானங்கள்! கண்ணைக் கவரும் வண்ணங்கள். இவற்றுள் சில தாகத்தைத் தணிப்பவை. ஆனால் அவை உடல் நலத்திற்கு உகந்தவையா? என்று கேட்டால்.... ஆம் என்று கூற முடியவில்லை.

ஏனெனில் நமது குழந்தைகள் ஐஸ் தண்ணீரையும் கோக், பெப்ஸி போன்ற பானங்களையும் சாப்பிடும் போது, ஒரிஜினல் பழங்களின் சுவை அவற்றுள் இருந்தபோதிலும் ஒரிஜினில் பழங்களுக்கும் பானங்களுக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. மாறாக பானங்களில் இருப்பவை குறிப்பிட்ட பழங்களின் சுவையை அளிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களே அங்கே போத்தல்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இவற்றிலிருந்து மாறுபட்ட வேறு விதமான பானம் ஒன்றை இயற்கையே நமக்கு வழங்கியிருக்கிறது. அதுதான் இளநீர்! மோர் போன்ற பானங்களும் உட்லுக்கு நன்மையே செய்தபோதிலும், இளநீர் இனிமையும், தூய்மையும், சுவையும் நிறைந்த இயற்கை பானமாகத் திகழ்கிறது. சரி இளநீரின் தனிச் சிறப்பு என்ன என்று பார்ப்பதற்கு முன், நமது உடலில் தண்ணீர் குறைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தெரிந்துகொள்வோம். நமது உடலில் பொட்டாசியம் மற்றும் சோடியம் (உப்பு) ஆகிய இரு சத்துக்களும் ஒன்றை ஒன்று விஞ்சாமல் சம அளவில் இருக்கும்படி அமைந்துள்ளன. நம்முடைய ஒவ்வொரு 'செல்'லிலும் கூடுதலாக சேரக்கூடிய உப்பை (சோடியம்) வெளியேற்றுவதற்கான அமைப்பு உள்ளது. அதனால்தான் நம் உடல் 'சிக்' என்று காட்சியளிக்கிறது.

நரம்பு மற்றும் தசைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு உப்புதான் முக்கிய காரணமாக உள்ளது. உப்புக்குத் தண்ணீரை ஈர்த்துக்கொள்ளும் சக்தி உண்டு. இதனால் நம் உடலில் உப்பு (சோடியம்) அதிகரிக்கும்போது, அது உடலில் இருக்கும் திரவங்களை எல்லாம் ஈர்த்துக்கொள்கிறது. இதனால் உடலில் உள்ள நீர்ச்சத்துக் குறைந்து பல்வேறு பாதிப்புகளை உருவாக்குகிறது.

உலக அளவில் நடத்தப்பட்ட ஒரு கணிப்பின்படி நாம் தினந்தோறும் 1,100 மில்லி கிறாம் முதல் 3,300 மில்லி கிறாம் வரை உப்பை நம் உடலில் சேர்த்துக்கொள்கிறோம். ஆனால், ஒரு நாளைக்கு 220 மில்லி கிறாம் உப்பு மட்டுமே நமக்குத் தேவை. நோயுற்றவர்கள் சிலருக்கு மட்டுமே 1,800 மில்லி கிறாம் தேவைப்படுகிறது. எனவே உங்கள் உடலில் உப்பு (சோடியம்) கூடுதலாக உள்ளதா? என்பதை உங்கள் டாக்டரிடம் பரிசோதித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்! உப்புக் குறைந்தாலும் பாதிப்பு ஏற்படும்;



ஏனெனில் அதன் மூலம் தண்ணீர் அளவும் குறையும்.

பொட்டாசியம் - சோடியம் சம அளவில் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இதில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்! இளநீர், வாழைப்பழம் போன்றவற்றில் பொட்டாசியம் நிறைய உள்ளது. அவற்றைச் சாப்பிடுவதன் மூலம் பொட்டாசியம்-சோடியம் அளவை சமநிலைப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக இளநீரில் குளுக்கோஸ் நிறைய உள்ளது. ஒருவருக்கு பேதி போன்ற காரணங்களால் தண்ணீர்ச் சத்து முற்றிலும் குறைந்து போகும் வேளையில் டாக்டர்கள் உடனடியாக உடலில் 'சேலைன்' எனப்படும் 'குளுக்கோஸ்' ஏற்ற வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் 'குளுகோஸ்' அதாவது 'சேலைன்' கிடைக்காமல் போனால் நல்ல இளநீரைக் கொடுத்து சீர்செய்துவிடலாம்.

எனவே, இளநீர் வெறும் பானமாக மட்டுமன்றி, உடல் நலம் காக்கும் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

இரத்த அழுத்தம் குறைவாக இருப்பவர்களுக்கும் இளநீர் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. சுமார் 10 நாட்கள் தொடர்ந்து இளநீர் சாப்பிட்டு வந்தால் குறைந்த இரத்த அழுத்தம் குணமாகும்.

இளநீரில் குளுக்கோஸ், ஆக்ஸாலிக் அசிட், மினரல்கள், ஹார்போஹைட்ரேட், பொட்டாசியம் இப்படி நிறையச் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

மேற்கண்ட சத்துக்கள் எலும்பின் வளர்ச்சிக்கு உதவும். திசுக்களின் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கும். சிறுநீரகத்தில் தோன்றும் நோய்களையும் இளநீர் நெருங்கவிடாது. அதுமட்டுமல்ல, வயிற்றில் ஏற்படும் எரிச்சல், வாயுத் தொல்லை, அல்சரிலிருந்து காப்பாற்றும்.

பெண்களுக்கு உற்சாகம் தரக்கூடிய வேலையையும் இளநீர் தரும். உடல் தோலில் ஏற்படக்கூடிய சுருக்கத்தையும் குறைக்கும். இதனால் முகத்தில் சுருக்கம் ஏற்படாமலிருக்க இளநீர் அருந்துவது நல்லது. தோலில் உள்ள ஈரப்பசையைத் தொடர்ந்து ஒரே மாதிரியாகவும் வைத்திருக்கும்.

சின்னக் குழந்தைகள் தினமும் இளநீர் குடித்தால் வேகமான உடல் வளர்ச்சி ஏற்படும்; எலும்பும் வலுவுள்ளதாக இருக்கும். மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால் இளநீர், இரத்தம் கெட்டியாகி இருந்தால் அதனை நீர்க்கச் செய்து உடலுக்குத் தேவையான அளவு இரத்த ஓட்ட வேகத்தைப் பார்த்துக்கொள்ளும்; அதனால் ஸ்ட்ரோக் ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

இவ்வாறு உடலுக்கு நலத்தையும், குளிர்ச்சியையும் எப்போதும் தரக்கூடிய இளநீர் இருக்கும்போது, குடல் புண்ணிலிருந்து புற்றுநோய் வரையில் உருவாக்கக்கூடிய இரசாயன பொடிகள் கலந்துள்ள மென்பானங்களை நாம் ஏன் பயன்படுத்த வேண்டும்.

நாம் மட்டுமல்ல, நம் குழந்தைகளும் அவற்றை நாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இளமையிலேயே நாம் குழந்தைகளுக்கும் அவர்களுடைய உடல் அதனை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்கிறதா என்பதை டாக்டர் மூலம் தெரிந்து கொண்ட பிறகு, இளநீர் அருந்தும் பழக்கத்தை உருவாக்குவது மிக நன்மை தருவதாகும்.

எனவே, இந்தக் கோடை காலத்தில் மென்பானங்களை முற்றிலும் தவிர்த்து இளநீர் அருந்தி உடல் நலம் காத்திட உறுதி ஏற்போம்!

# நலமாக வாழ்வோம்

## பாதஹஸ்தாசனம்

நின்று முன்னால் குனிந்து பாதங்களை உள்ளங்கை தொடும் நிலை ஆசனம்.

**பலன்கள்**

1. உடல் எடை, தொந்தி குறை கிறது.

2. ஆண்மையின்மை, மலட்டுத் தனம் ஆகியவற்றைப் போக்குகிறது.

3. மூளை சீரான இரத்த ஓட்டத்தை பெறுகிறது.

4. இருதயம், நுரையீரல் ஆகியவை வலிமை பெறுகின்றன.

5. அபான வாயு கீழ் நோக்கி வேலை செய்ய வைக்கிறது. அதனால் மூலக்கடுப்பு நீங்கும்.

6. கால்களில் தோன்றும் ஏற்ற இறக்கங்களைச் சரி செய்கிறது.

7. நீரிழிவு, வயிற்றுவலி, நரம்பு பலவீனம், இரத்த சோகை ஆகியவற்றைப் போக்குகிறது.

8. ஆஸ்துமா நோயைக் கட்டுப்படுத்துகிறது.

9. மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம், ஞாபக சக்தி, புத்துணர்ச்சி, உடல் உயரம் ஆகியவை ஏற்படுகின்றன.

10. கண்பார்வை தெளிவடைகிறது.

11. பெண்களுக்கு மாத விடாய்க் கோளாறுகளைச் சரி செய்கிறது.

12. பெண்கள் தொடர்ந்து செய்து வந்தால் திருமணம் ஆன பிறகு சுகப்பிரசவம் ஆகவும். பின் நன்கு தாய்ப்பால் சுரக்கவும் உதவுகிறது.

13. தலைமுடி நன்கு வளரும். முடி கொட்டுவது நிற்கும்.

**செய்முறை :**

1. விரிப்பின் மீது கால்களைச் சேர்த்து வைத்து நிற்கவும்.

2. கைகளைப் பக்கவாட்டில் கொண்டுவந்து தலைக்கு மேல்



காதுகளை ஒட்டியவாறு கைகளை மடிக்காமல் நிறுத்தவும்.

3. மெதுவாக முன்னால் குனிந்து கால் விரல்களைத் தொட முயற்சிக்கவும். முடிந்தால் படத்திலுள்ளபடி கால் பாதங்களை பற்றி முன்னால் வளைந்து நெற்றி பொட்டு கால் முட்டிகளைத் தொடும்படி முயற்சிக்கவும்.

4. சாதாரண மூச்சில் 20 எண்ணிக்கை இருக்கவும். கால் முட்டிகளை வளைக்கக் கூடாது.

5. கைகளை தளர்த்தி மெதுவாக எழுந்து நிமிர்ந்து நிற்கவும். உடன் கைகளை உயர்த்தி நிற்கவும்.

6. கைகளை மெதுவாகப் பக்கவாட்டில் கொண்டுவந்து சிறிது ஓய்வு எடுக்கவும்.

7. மறுபடியும் முன்பு கூறியபடி செய்யவும். மூன்று முறை செய்து சவானத்திற்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

**குறிப்பு**

கல்லீரல், மண்ணீரல் வீக்கம் உடையவர்கள். குடல் வால்வு நோய் உள்ளவர்கள் அடிமுதுகு வலி மற்றும் முதுகுத் தண்டு கோளாறு உள்ளவர்கள் அதிக இரத்த அழுத்தம் உடையவர்கள் இவ்வாசனத்தை செய்ய கூடாது.

யோகா தொடரும்.....

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -ஷோபா-

## பாஸ்ரா கட்லட்

**தேவையான பொருட்கள்:-**

- உருளைக்கிழங்கு - 200 கிறாம்
- ரின் மீன் (சிறியது) - 1 ரின் (155 கிறாம்)
- சீஸ் 2 துண்டு (25 கிறாம்)
- பச்சைப் பட்டாணிக் கடலை - 50 கிறாம்
- கஜு - 50 கிறாம்
- மிளகாய்த் தூள் - 1 தே.க (நிரப்பி)
- உப்பு - அளவிற்கு
- மிளகு தூள் - அளவிற்கு
- தேசிப்புளி - அளவிற்கு
- சின்னவெங்காயம் - 2 மே.க.
- ரோஸ்ற் மேக்கர் - சிறிது
- தேங்காயெண்ணெய் - 1/2 போத்தல்
- கோன் பிளா - 4 மே.க.
- முட்டை வெண்கரு - 1
- பேக்கிங் பவுடர் - 1 தே.க.
- மாஜரின் - 1 தே.க.

**செய்முறை**

பச்சைப் பட்டாணிக் கடலையை 3 மணி நேரம் ஊறவைத்து அவித்தெடுக்குக.

உருளைக்கிழங்கை அவித்து தோலுரித்து மசித்து வைக்குக.

சீசை ஸ்கிறேப்பரில் துருவி, கஜுவை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைக்குக.

தாய்ச்சியை அடுப்பில் வைத்துச் சூடானதும் சீசையிட்டு உருக வைத்து, சீஸ் உருகியதும் வெங்காயத்தையிட்டு வதங்கவிட்டு வெங்காயம் முக்கால் பதமாக வதங்கியவுடன் கஜுவையிட்டு சிறிது நேரம் பொரியவிட்ட பின்பு அதனுள் மிளகாய்த் தூள், உருளைக்கிழங்கு, ரின் மீன், கடலை என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக்கொண்ட பின்பு உப்புத் தூள், மிளகு தூள் என்பவற்றை அளவிற்குச் சேர்த்து இறக்கிக்கொள்க.

பின்பு கலவையுள் தேசிப்புளி, ரேஸ்ற்மேக்கர் என்பன இட்டு நன்றாகச் சேர்த்து அளவான உருண்டைகளாக உருட்டிக்கொள்க.

### தோய்ப்பன் கரைசல் தயாரிக்கும் முறை

பாத்திரத்தில் மாஜரீனையிட்டு நன்கு அடித்துக்கொண்ட பின்பு அதனுள் கோன்பிளா, பேக்கிங் பவுடர் என்பன கலந்து முட்டை வெண்கரு விட்டு நன்கு பிசிறிக் கொண்ட பின்பு உப்புத் தூள் அளவிற்குச் சேர்த்து தண்ணீர் விட்டு கூழ்ப் பதத்திற்குக் கரைத்துக் கொள்க.

பின்பு உருண்டையாகப் பிடித்த கறிக் கலவையை கரைசலில் தோய்த்தெடுத்துக் கொதிக்கும் எண்ணெயிலிட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்துக்கொள்க.

கால் யாருடைய கால் களைப் போலவோ தனியாகவே இயங்கின.

மாறி மாறி அவை மண்ணில் படுவதைக் கண்ணால் கூடப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு துரிதம். இன்ஜின் பிஸ்டன் தண்டுகளைப் போல் ஒரே இயக்கங்கள்தான்!

மரமும் மண்ணும் பின்னே விரைந்து ஓடின. கற்களும் புதர்களும் விருட்டென்று அவன் முன்னால் ஓடிவந்து பின்னால் ஓடின.

ஓடினான். உலகம் அவன் பின்னால் முடிந்துகொண்டு வருவது போல் ஒரு பாதுகாப்பைத் தேடி அவசரமாக ஓடினான்.

அவர்களுக்கும் அவனுக்கும் இடைவெளி கூடியது. கூடிக்கொண்டே போயிற்று. பிறகு அவர்கள் இக்குணிகள் ஆகிக்கொண்டிருந்தார்கள். மேலை வானத்தின் அடியில் மண் ஒட்டும் இடத்தில் அவர்கள் வெறும் புள்ளிகளாகி கடைசியில் மறைந்த பிறகு, அவன் இன்னும் ஓடிக் கொண்டிருந்தான்.

சிறிதுகூட சந்தர்ப்பத்திற்கு இடம் கொடுக்க விரும்பவில்லை. ஒரு நெருக்கடி நிலையைக் காட்டியதால் தேகம் இப்படித் தன்னை மறந்து ஓடுகிறது. அதைத் தளர்த்த அவன் விரும்பவில்லை.

மாலையில் வேண்டுமென்றே திசையைத் திருப்பி ஒரு மணி நேரம் பிரயாணித்தபின்,

கடைசியில், மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க,

நரம்புகள் விண் விண் என்று வீணை வாசிக்க,

தலையில் பெரிய சூடு ஒன்று பூதாகரமாய் இறங்க,

ஒரு தோப்புக்கு அருகில் இற்றுப் போய் விழுந்தான் அவன்!

பிறகு அங்கேயே ஒரு மணி நேரம் கிடந்து ஆறினான்.

மாலை புலபுலவென செந்தூரம் கொட்டி, மேற்கே இறங்கிக்கொண்டிருந்தது.

சிறியதாய் ஓர் இருட்டு கிழக்கேயிருந்து அக்டோபஸ் போல் கிளைகளை நீட்டி வந்துகொண்டிருந்தது.



வேண்டாம்! வேண்டாம்! ஜன்மத்துக்கும் இது வேண்டாம் என்று நினைத்தான்.

போதும்! இப்படி விரட்டப்பட்டு அணு அணுவாய்ச் சாவதைவிட,

கண்ணீர் கண்களை மறைத்தது.

மனித உடம்புதானே! சதையும் எலும்பும்தானே! எத்தனை நாள் தாங்கும்?

அவன் அதுவரை சேர்த்து வைத்திருந்த நம்பிக்கைகள் எல்லாம் மெள்ள வழிந்து கிளைக் கால்களாகித் தரையில் ஓடிக்கொண்டிருந்தன.

எங்கே போக? இனி எங்கே போக? எங்கேயும் நிம்மதி இல்லை. ஓய்வில்லை! யாராவது கண்டுபிடிக்கிறார்கள்! யாராவது விரட்டுகிறார்கள்! நாய் படாதபாடு படுகிறோம்.

கண்ணீர் தளும்பி வந்தது!

ஒரே ஒரு இடம், கமலம்! ஆமாம்! அவள் அணைப்பில் சுருண்டு, கண்ணீரைச் சிந்தினால் மனம் சிறிதளவாவது நிம்மதி ஆகும். அவள் இருக்கும் இடம் ஒன்றுதான் அடைக்கலமாகத் தோன்றியது. நேராக அங்கே போய்விட வேண்டியதுதான்! ஆமாம்! கமலம்....கமலம்....!

இரவு ஏழு மணிக்கு ஒரு ஊர். கடைகளும் மனிதர்களுமாய் தென்பட்டன.

வெறும் பன்னும் டீயும் சாப்பிட்டான். நிறையச் சாப்பிட வேண்டும். பஸ் ஏறப் பணம் இருக்காது.

பஸ் ஏறி பட்டி என்ற அந்த ஊரை அடைந்தபோது காலை ஒன்பது மணி!

சமந்தகாமினி - மனைவியின்




சிநேகிதி- அவள் வீட்டிற்கு ஒரே ஒரு முறை போயிருக்கிறான்!

இப்போது நேரே அங்கே போனான்.

இந்தச் சூழ்ச்சியைப் புறக்கணிக்கவே இத்தனை நாளும் போனதில்லை.

ஊரில் பெரிய மைதானத்தின் அருகில் வீடு இருந்தது.

சூரியன் ஓங்கி வீச, வியர்வையோடும், சோர்வோடும் அந்த வீட்டு வாசல் முன்னால் நின்றான்.

தட்டினான்.

திறந்தாள்.

பாதியாகி இருந்தாள். நகைகளைக் காணவில்லை.

சந்தோஷமே இல்லை! அன்னியனைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

உள்ளே போனான்.

"யாருமில்லையா?"

"புருஷனும் மனைவியும் சேலம் போய்ட்டாங்க...." சமந்தகாமினியைக் குறித்துத்தான் அவள் பேசினாள்.

"அப்போ நீதானா (இங்கே இருப்பது?)"

"ஆமா."

"ஏன் கமலம்! கஷ்டப்பட்டு நாயா அலைஞ்சு வந்திருக்கேன். சரியாப் பேசக் கூடாதா?"

"ஏன் பேசணும்?"

எரிந்தாள். கோபம் அலை வீசியது.

எதிர்பார்க்கவில்லை. செவிட்டில் அடித்தது போல இருந்தது.

"ஏன் கமலம்! உனக்கு என்னாச்சு?"

"என்ன ஆகணும்? நீங்க ஒரு புருஷனா? ஒரு பொண்ணுக்கு அப்பனா?"

திடீரென்று அழுதாள். கண்ணீரும் சளியுமாகத் தேம்பினாள்.

"கமலம்!"

மெதுவாகப் போனான். அவள் தோளைப் பற்றினான்.

"என்னைத் தொடாதீங்க!" அவள் எரிந்து விழுந்தாள். "உங்களுக்கு உரிமை கிடையாது." "அதிகாரம் கிடையாது."

"என்ன கமலம் இது? என்ன நேர்ந்தது? நான் என்ன செய்துட்டேன்?"

"என்ன செய்யணும்? என்ன பாக்கியிருக்கு? குடிச்சுட்டு வந்தா வரம்பு கிடையாதா? இப்படியா?...."

"நான் குடிச்சிட்டு வரலை, கமலம்."

"இன்னிக்குச் சரியாகத்தான் வந்திருப்பீங்க! அன்னிக்கு என்ன செஞ்சீங்க? நினைவிலயா இருந்தீங்க? மாடு மாதிரி வந்து விழுந்தீங்க! என்மேலே விழுந்தா தப்பில்லை. நான் பெண்டாட்டி. அந்தப் பச்சைப் பிள்ளை மேலே விழுவீங்களா? நீங்க ஒரு அப்பனா?பெத்த பெண்ணுக்கும், கொண்ட பெண்டாட்டிக்கும் வித்தியாசம் தெரியாதா?"

கண்களைக் கொட்டினான். பிரமித்துப் பார்த்தான். மூளையில் எதுவோ வேலை செய்தது.

"என்னவாம் புரியும்படியா சொல்லு! எனக்குச் சத்தியமா நீ சொல்றது எதுவும் தெரியலே..."

"எப்படித் தெரியும்! நீங்கதான் குடியிலே இருந்தீங்களே!"

"குடிலயா! கமலம்! ஆண்டவன் சாச்சியா சொல்றேன். நான் குடிச்சதே இல்லை! யார் வந்தாங்க? என்ன நடந்திச்சு?"

"நீங்கதான் வந்தீங்க! ஊரு உலகத்தை மறந்து வந்தீங்க! அது கூடப் பரவாயில்லை. மானம் மரியாதையையே மறந்து வந்தீங்க! நான் உங்க பெண்டாட்டி!

"என்னை நீங்க பெண்டாண்டதைக் கூடத் தப்பிதமாச் சொல்லலே! உங்க பொண்ணு... நீங்க பெத்த பொண்ணு! அழுதழுது கெஞ்சினேனே! கேட்டீங்களா? ஒரு வார்த்தை பேசினீங்களா? தூ! நீங்க மனித ஜென்மமா?"

அழுது கீழே சரிந்தாள்.

உடைந்தது போல் நின்றான். ஏதோ உதிர்த்து, பல்லைக் கடித்தான். டேய்! சூரியகுமார்! உன் வேலையாடா இது? உருவம் ஒண்ணாயிருக்கிறோம்னு இப்படி கீழ்த்தரமா நடந்துகிட்டயா? வஞ்சகா!"

அவளைப் போய் எடுத்தான். அவள் அவனை விலக்கினாள்.

"கமலம்! நீ சொல்றது நானில்லே!"

"நீங்க சொல்றதைக் கேட்க மாட்டேன். போங்க வெளியே."

"என்ன சொல்றே?"

"போங்க வெளியே! எனக்கு இப்படிப்பட்ட புருஷன் வேண்டாம்."

"கமலம்! அது நானில்லை. என்னைப்போல ஒருத்தன் இருக்கான்."

கிராதகன். அவனாலேதான் என் வாழ்க்கையெல்லாம்....

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

"ஏன் இப்படி இட்டுக்கட்டறீங்க! நீங்க வரவர கெட்டுப் போயாச்சு! குட்டிச்சுவராயிட்டீங்க. உங்களோடு வாழ்ந்ததெல்லாம் போதும். போங்க வெளியே போங்க!"

"கமலம்!"

"போங்க! நிச்சயமா போங்க!"

கூடத்துக்குள் ஒரு சன்னல் லேசாகத் திறந்தது. உள்ளே ஒரு நிழல்.

அவன் திரும்பினான் - விஜயா!

(துரோகம் துரத்தும்......)

# சிகப்பு விளக்குச் சிறுமிகள்!



அங்கே நிறைய இளம் பெண்கள், சிறுமிகள் நடந்து போய்க்கொண்டிருப்பதை எதேச்சையாக கவனித்து, நாமும் புகைப்படக்காரருடன் சட்டென்று நடையைக் கட்டினோம். இதில் நெஞ்சை வாட்டும் விஷயம். பலபதின்மூன்று, பதினான்கு வயது இளம் சிறுமிகளும் அங்கே நின்று கொண்டிருந்ததுதான். பார்வையில் மிரட்சி, உடலில் பலவீனம். ஸ்கூல் யூனி·பார்மிலிருந்த ஒரு குட்டிப்பெண், என்ன சார் தயங்கறீங்க? என்று நாக்கை கடித்தபடி தெலுங்கில் கேட்டபோது, நமக்கு அடிவயிறு கலங்கியது.

ஐயோ..என்னம்மா? என்று நாம் பதறியபோது, படிக்க கஷ்டம், குவாட்டர்லி ·பீஸ் கட்டணும் என்றாள் சலனமில்லாமல். இவர்கள் எல்லாம் நல்ல குடும்பத்துக் குழந்தைகள். அவர்களைப் புகைப்படம் எடுக்க நம் மனது இடம் கொடுக்கவில்லை. இன்னும் வேதனை, சற்று தொலைவில் கைக்குழந்தையுடன் நிற்கும் பெண்மணியை பீடி கவ்விக்கொண்டிருக்கும் ஒருவன் பேரம் பேசி அழைக்க, அந்தப் பெண் கீழே உட்கார்ந்திருக்கும் கணவன் மடியில் குழந்தையைக் கடத்திவிட்டு பீடிக்காரனோடு புதருக்குள் மறைந்தபோது நம் மனம் பதறியது.

மெதுவாக அங்கிருந்து கிளம்பிய போது ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஏகாம்பர குப்பம் ரெயில்வே ஸ்டேஷன். இங்கும் விபசாரம் நடக்கிறதா என்று அறிய ஒரு ரிக்ஷாகாரரிடம் நெருங்கிய போது, என்ன அப்படி கேட்டுட்ட என்று நக்கலாகச் சிரித்தவர், வண்டியில் ஏறச் சொன்னார். சற்று ஒதுக்குப்புறமான ஓர்



தெருவுக்கு ரிக்ஷாவை மிதித்துவிட்டு இறங்க, சத்தம் கேட்டவுடனே சரசரவென்று சுடிதார், மிடி, மோக்ஸியில் அழகழகான பெண்கள். பலர் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் கல்லூரிப் பெண்கள் என்றார் ரிக்ஷாக்காரர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசுகிறார்கள்.

புதரில் இருக்கற பொண்ணுங்க எல்லாம் 70 ரூபாய் 80 ரூபாய் கேஸுங்க.... இதெல்லாம் மினிமம் ஆயிரம் ரூபாய். லாட்ஜ் புக் பண்ணித் தர்றோம். அதுக்கு வாடகை கொடுத்திடு. எல்லாம் ஹை கிளாஸ் என்றார் அங்கிருந்த பட்டை மீசை தரகர்.

அந்த அப்பாவிப் பெண்களின் வெகுளிப் பார்வையை எதிர்கொள்ள நமக்கு சக்தி இல்லாமல் சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு நகர்ந்தோம்.


சரி, இந்த அநியாயமெல்லாம் நகரி பொலீஸுக்குத் தெரியாதா?

தெரியும். ரெய்டு வாரத்துக்கு இரண்டு தடவை நடக்குது. ஒண்ணும் பண்ணிட முடியாது. அவங்க ஆட்களே முதல்ல தரகர்களுக்கு தகவல் தந்துடுவாங்க. இதெல்லாம் பதினைந்து வருஷ கூத்துங்க. அப்படியே உள்ளே போனாலும் ஒரு வாரத்துல பெயிலில் எடுக்க, சிராளா, விஜயவாடாவிலிருந்து ஆளுங்க போயிடுவாங்க என்று சாதாரணமாக புன்னகைத்தார் நகரி பேருந்து அருகே பீடா விற்கும் குண்டு இளைஞர்.

நகரியிலிருந்து சென்னைக்கு ரயிலில் ஏறி ரொம்ப நேரத்திற்குப் பிறகும் அந்த அப்பாவி யுனி·பார்ம் சிறுமிகளின் கலங்கும் கண்கள் நம் மனதைப் பிசைந்தன.

நன்றி குமுதம்

# இறுதி முத்தம்




இப்போது இருக்கும் படைகளை வைத்து ஈராக்கியர்களை சமாளிக்க முடியாது என்பதை அமெரிக்கா உணர்ந்து விட்டது. எனவே அந்நாட்டில் இருந்து மேலும் பல வீரர்கள் ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். கலிபோர்னியாவில் இருந்து போர்முனைக்கு புறப்பட்டுச் செல்லும் தன் காதலனை வழியனுப்பி வைக்கிறாள் காதலி.

**இங்கு** நினைவுபடுத்துவது நான் மேலே குறிப்பிட்ட செல்லி பெரி என்ற எமது சிரேஷ்ட மாணவத் தோழியின் ஆப்த நண்பியும் பல்கலைக்கழகத்தில் அவருடைய ஒரே அறைத் தோழியுமான லஉறா குரோஸ்ச் எனபவராகும். இவரும் ஒரு இளந்துடிப்பான பெண்ணாகவும், தனக்கே உரிய இயற்கை சீர்ப்பரிமாணத்துடன் கூடிய ஒரு உணர்ச்சிபூர்வமான ஆற்றலைக் கொண்ட ஒரு கலைஞராக, அதாவது ஒரு சித்திரக் கலைஞராக

மேலும் உண்மையிலேயே எமது வகுப்புத் தோழிகள் எல்லோரும், ஏதோ ஒருவகையில், தமது திறமையையும், ஆளுமை வளர்ச்சியையும், இந்த Wellesley பல்கலைக்கழகத்தினூடாக, பெற்றுக்கொண்ட அதேவேளை, இதில் படித்து பட்டம்பெற்று வெளியேறிய அதிகமானோர், சமூகத்தில் பொதுவாக எமது நாட்டிலும் எல்லாப்படித்தரங்களிலும் பிரகாசித்து தமது திறமையையும் தகுதியையும் தற்பொழுது வெளிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

# 29 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்


பிரகாசித்தார். எமது அந்தப் பல்கலைக்கழகத்தில் பிரகாசித்தவர்களில் இத்துறையில் இவரும் ஒருவர் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. அவர் வரைந்து வைத்திருந்த ஒரு மனிதனாகக் காட்சியளிக்கும் "முட்டாள்தனமாக அதேநேரம் அச்சத்தை உண்டுபண்ணும் ஓவியத்தை" அவர் தனது அறையினுள் வரைந்து மாட்டி வைத்திருந்தார். உண்மையில் நான்



அதை மிகவுமே விரும்பி ரசித்து மகிழ்வேன். அந்த ஓவியத்தை அவருடைய நினைவாக நான் வைத்திருக்க வேண்டுமென்று நினைத்து அவரிடம் ஒருவாறு கேட்டு வாங்கிக் கொண்டேன். அந்த ஓவியத்தை பத்திரமாக இன்றுவரைக்கும் நான் பாதுகாத்து வருகிறேன். அந்த ஓவியத்தை தற்பொழுதும் கூட எங்களது நியூயோர்கிலுள்ள "சாப்பக்குவ வீட்டில் தொங்க விட்டுள்ளேன். அந்த ஓவியத்தை நான் பார்க்கும் போதெல்லாம் எனது அந்தக்கால பல்கலைக்கழக வாழ்வின் பல்வேறு நிகழ்வுகள் என்றென்றும் எனது நினைவுக்கு வந்துகொண்டே இருக்கும். உண்மையில் இவ்வாறான பல்கலைக்கழகச் சின்னங்கள் பள்ளி மற்றும் ஒன்றாகக் கற்ற பல்கலைக்கழக, சிரேஷ்ட மாணவத் தோழிகளின் கடந்தகால நினைவுகளை மீட்டும்பொழுது மிக மிக சந்தோசமடைந்து கொள்வேன். என்னைப்போன்றே இவ்வாறான பள்ளி, மற்றும் பல்கலைக்கழக அனுபவங்கள் பல பெண்களுக்கும் இருக்குமென நினைக்கிறேன். அந்த அனுபவங்கள் ஒவ்வொருவரினது வாழ்நாளில் வித்தியாசமான கோணங்களில் இருக்கும் என்பதும் எனது தனிப்பட்ட கருத்தாகும்.

அவ்வாறு பொதுவாக எனது வகுப்பிலும் சரி, ஏனைய வகுப்பில் கல்விகற்றவர்களும் சரி, வெளியில் சென்று ஏதோ ஒருவகையில் எதையும் தலைமை தாங்கி நடாத்தக்கூடியவர்களாகவும் பொதுவாக தலைமைத்துவப் பண்புகளில் மிக உயர்ந்த நிலையில் பிரகாசிக்கக்கூடியவர்களாகவும், தமது பிடித்தமான துறைகளிலும் மற்றும் விரிவுரையாளர்களாகவும் பல கொம்பனிகளினதும் தலைவர்களாகவும். அத்துடன் பல்வேறு துறைகளில் சிறப்பான பதவிகளிலும் இருக்கிறார்கள். உண்மையில் எமது தாய்நாடான அமெரிக்காவுக்கும், எமது Wellesley பல்கலைக்கழகத்துக்கும் தொடர்ந்தும் பெருமை சேர்த்துக்கொண்டிருப்பவர்களான இவர்களை, நாம் வாழ்த்தி பாராட்டாமல் இருக்கமுடியாது.

அவர்கள் போன்றே நானும் உயர் பட்டப்படிப்புடன் Wellesley யிலிருந்து வெளியேறியதனால்தான் என்னையும், ஒருவாறு உறுதியான "அமெரிக்காவின் முதற்பெண்மணி" என்ற பட்டம் பெறுவதற்கு உயர்த்திக்கொள்ள முடிந்தது. வழிவகுத்தது. இந்த தரத்துக்கு என்னை உயர்த்தியதில் எமது Wellesley பல்கலைக்கழகமும் முதலிடம் வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.



மேலும் எமது Wellesley பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் சிலவேளை எமது பல்கலைக்கழகத்தால் ஒவ்வொரு விடுமுறை காலப்பகுதியையும் பயன்படுத்தி நாம் "சுற்றுலாபோவதை" வழக்கமாக்கிக் கொண்டிருந்தோம்.


(இன்னும் வரும்...)

## பிரித்தானியாவில் ஏற்பட்ட மிகக்கடுமையான பட்டினி



**பி**ரித்தானியாவில் 1909ம் ஆண்டு ஏற்பட்ட மிகக் கடுமையான பட்டினி, மற்றும் வறுமையினால் பலர் பாதிக்கப்பட்டனர். அந்தப் பட்டினியினால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி பிரித்தானிய ஏழைகள் அவர்களின் விடுதியில் இருப்பதை இப்படத்தில் காண்கிறீர்கள். அவர்கள் வேலைசெய்கின்ற தொழிற்சாலை மண்டபமொன்றில் உணவுக்காக காத்துக்கிடப்பதை பாருங்கள். உண்மையில் வறுமை. பட்டினி. பசிக்கொடுமை என்பன. உலகில் யாரையுமே விட்டு வைக்கவில்லை: பசிவந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்கள். அப்போதைய பிரித்தானிய அரசாங்கம். இந்த ஏழை எளியவர்களை ஒருவிடுதியில் தங்கவைத்து பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற் கொண்டதையே இப்படத்தில் காண்கிறோம்.

## பிரித்தானியாவில் வேலையற்றோர்களின் பெரும் ஆர்ப்பாட்டம்




இன்று வரை முழு உலகிலும் தொடரும் பெரும் பிரச்சினையாக இருப்பது படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டமாகும். இந்தப் பிரச்சினை எல்லா நாடுகளிலும் இருக்கின்ற ஒருபொதுவான பிரச்சினையர்கும். இவ்வாறு அன்றும்கூட பிரித்தானியாவில் படித்த வேலையற்ற பட்டதாரிகளின் தொகை அதிகரித்து வேலையற்றவர்கள் அதிகமாகிவிட்டார்கள். அந்த வேளையில் வேலையற்றவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை பிரித்தானியாவின் தலைநகரில் நடாத்தினார்கள். அந்த ஆர்ப்பாட்டக்காரர்களையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். இந்த ஆர்ப்பாட்டப்பேரணி 21ம் திகதி ஒக்டோபர் மாதம் 1908ம் ஆண்டு நடைபெற்றது. இந்த வேலையற்றவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக அப்போதைய பிரித்தானிய பிரதமமந்திரி "ஹேர்பட் அஸ்கூய்த்" உடனடியாக சில விடயங்களை நாட்டுமக்களுக்கு அறிவித்தார்: அதாவது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்று பிரதான பகுதிகளுக்குள் தொழில் வழங்கினர். அப்பகுதிகளாவன: தபால் தந்தி மற்றும் தபால் சேவைகள் பிரிவு. துறைமுகத்தில் கப்பற்தளத்தில் வேலையாட்களை நியமித்தார், அரசாங்கத்தின் விஷேட இராணுவப்பிரிவில் ஆட்களை நியமித்தார். இவ்வாறு அப்போதைய பிரித்தானிய பிரதம மந்திரி வேலையில்லாத்திண்டாட்டத்தை மெல்ல மெல்ல தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**

**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செயயப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**

# பூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜூலை தாக்குதல்களுக்கான திட்டம்

1983ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான நாள். இலங்கை ஜனாதிபதியொருவருக்கு அமெரிக்க வெள்ளை மாளிகையில் இராஜமரியாதை அளிக்கப்பட்ட தினம். சரியாக ஒரு மாதம் கழித்து அதாவது ஜூலை 18ஆம் திகதி 'டெய்லி டெலிகிராப்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஜெயவர்த்தன அளித்த பேட்டி பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஜூலைத் தாக்குதல்கள் ஆரம்பமாவதற்கு ஐந்து நாட்கள் முன்னதாகப் பேட்டி வழங்கப்பட்டது. அதில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார் :

"நான் இப்போது யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் இல்லை. இப்போது நாம் அவர்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்க முடியாது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ நான் சிந்திக்க முடியாது." இதுதான் தமிழர்கள் பற்றி ஜெயவர்த்தன கொண்டிருந்த மனோபாவம்.

அப்போது கிட்டத்தட்ட முப்பதுக்கு மேற்பட்ட தமிழீழ ஆயுதப் போராட்டக் குழுக்கள் வடக்கு, கிழக்கில் இயங்கிக் கொண்டிருந்தன. இவற்றில் நாகபடை போன்ற ஒன்றிரண்டு குழுக்களைத் தவிர ஏனைய குழுக்கள் யாழ்ப்பாணத்தையே

## ௪0 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

தளமாகக் கொண்டு இயங்கிக்கொண்டிருந்தன. இந்தத் தமிழீழக் குழுக்களுக்குத் தலைமை தாங்கியோரில் 99 சதவீதமானோர் யாழ்ப்பாணத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள். அப்போதெல்லாம் கிழக்கில் போராட்டக் குழுக்கள் வலுவாக வேரூன்றியிருக்கவில்லையென்று கூறலாம். எனவேதான், ஜெயவர்த்தன யாழ்ப்பாண மக்களை மையப்படுத்தித் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார். முப்பத்தியாறு தமிழீழக் குழுக்கள் செயற்பட்டதாக சிங்க இரட்ணதுங்கா என்ற பத்திரிகையாளர், தான் எழுதிய 'பயங்கரவாத அரசியல் 'இலங்கை அநுபவம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். முப்பத்தியேழு ஆயுதக் குழுக்கள் இயங்கினவென்று ரோஹன் குணரட்ன என்பவர், 'இலங்கையில் இந்தியாவின் தலையீடு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1977ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம், 1982 டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியது. மிக மோசமான ஊழல் மிகுந்த தேர்தலென அப்போது எதிர்க்கட்சியினர் வன்மையாக அதனை விமர்சித்தனர். தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சிகள் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்த காலம். போதாக்குறைக்கு 1980களின் ஆரம்பத்திலிருந்தே இந்திய மத்திய அரசும் தமிழக

> **ஜூலை 18ஆம் திகதி 'டெய்லி டெலிகிராப் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஜெயவர்த்தன அளித்த பேட்டி பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஜூலைத் தாக்குதல்கள் ஆரம்பமாவதற்கு ஐந்து நாட்கள் முன்னதாகப் பேட்டி வழங்கப்பட்டது. அதில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார் : "நான் இப்போது யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் இல்லை. இப்போது நாம் அவர்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ நான் சிந்திக்கமுடியாது." இதுதான் தமிழர்கள் பற்றி ஜெயவர்த்தன கொண்டிருந்த மனோபாவம்.**

மாநில அரசும் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை செலுத்தத் தொடங்கியிருந்தன. தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்கு ஜெயவர்த்தன அமெரிக்க உதவியை எதிர்பார்த்திருந்தார். ஆனால், அமெரிக்கா கையை விரித்துவிட்டது. இதனால் ஐ.தே.க. தலைமை பெரும் ஏமாற்றமடைந்திருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழ் மக்கள் மீதான அழித்தொழிப்பு நடவடிக்கையை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையே திட்டமிட்டு மேற்கொண்டதெனப் பரவலாகக் குற்றச்சாட்டுகள் இன்றும் முன்வைக்கப்படுகின்றன. சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் மீது தாக்குதல்களுக்குத் திட்டமிடப்பட்டது. இதன் மூலம் தமிழீழ ஆயுதக் குழுக்களை அடக்கலாமென ஐ.தே.க. தலைமை நினைத்திருந்தது. கொழும்பு, கண்டி, நுவரெலியா, திருகோணமலை, குருநாகல்

*(அரசியல் தொடர்)*

ஆகிய முக்கிய பகுதிகளை மையமாகக் கொண்டு தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டன. இந்த நாட்டின் மிக மோசமான இனவெறியரென வர்ணிக்கப்பட்டவர் சிறில் மத்தியூ. ஜாதிக சேவக சங்கமயவின் தலைவராகவும் இவரே இருந்தார். இவர் அப்போது ஐ.தே.க. அரசில் அமைச்சராகவும் இருந்தார். யாழ்ப்பாண நூலக எரிப்புக்குப் பிரதான காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவர் காமினி திசாநாயக்கா. அமைச்சர் காமினி திசாநாயக்காவும் ஜூலை இன சங்காரத்தின் சூத்திரதாரியெனக் குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது. அமைச்சர்கள் குழுவொன்றோடு சேர்ந்து கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்குதல் திட்டங்களை வகுத்தனரென்பது குற்றச்சாட்டு. இத் திட்டங்களை வகுத்த அமைச்சர்களில் மூவர் பின்னர் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் இறந்துவிட்டனர். ஒருவர் இயற்கை மரணமெய்தினார்.

1982ஆம் ஆண்டு டிசம்பர் தேர்தல் முடிந்த கையோடு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் வித்தியாசமான பிரசாரமொன்றினை முடுக்கிவிட்டனர். ஆட்சியைக் கவிழ்க்கத் தீவிரவாத சக்திகள் முயற்சித்து வருவதாகப் பிரசாரங்கள் செய்யப்பட்டன. ஜெயவர்த்தனவும் இவ்வாறு பிரசாரம் செய்தார். இந்திய நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் இலங்கையிலுள்ள தீவிரவாத சக்திகளுக்கும் தொடர்பிருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. இடதுசாரிகளின் மீதே நக்சலைட்டுகளுடன் தொடர்புடையவர்களென்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதில் ஐ.தே.க. தலைமை இரட்டைத் தந்திரோபாயத்தைப் பிரயோகித்தது. ஒன்று, சிங்களப் பகுதிகளிலுள்ள அப்பாவித் தமிழர்களைத் தாக்குவது. மற்றது, தாக்கிவிட்டுப் பழியை இடதுசாரிகள் மீது போடுவது. இதனை நிரூபிக்கும் வகையில் அப்போதைய அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் ஆற்றிய உரை அமைந்திருந்தது. 1983 ஜூலை இன சங்காரத்துக்கு முன்னர் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே முதலில் கலவரத்தைத் தூண்டுவதும், பின்னர் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கலவரத்தைத் தூண்டுவதும் பின்னர் சிங்களவர்களுக்கிடையே கலவரத்தைத் தூண்டிவிடுவதும் தீவிரவாதிகளின் திட்டமாகும்" என்றார் அவர். தமிழர்கள் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரம் கழித்து ஜூலை 31ஆம் திகதி அவர் தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றினார். அப்போதும் இதே கருத்துக்களையே மீண்டும் சொன்னார். அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸின் இந்தக் கருத்து ஜூலை இன சங்காரத்தின் சூத்திரதாரிகள் யாரென்பதை நன்கு புலப்படுத்துகிறதென்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

இத் தாக்குதல் திட்டத்துக்கு ஜெயவர்த்தனவின் அங்கீகாரம் பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை, வெலிக்கடைச் சிறையிலிருந்த தமிழ்க் கைதிகளைத் தாக்குவதற்கான திட்டமும் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டது. ஐ.தே.க. தலைமையோடு தொடர்புடைய இராணுவ, சிறை அதிகாரிகளே இத் திட்டத்தைத் தீட்டியதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் பிரதான களஞ்சியப் பொறுப்பாளராக இருந்த றோஜேர்ஸ் ஜயசேகர என்பவரிடம் இப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சர் சிறில் மத்தியூவின் நெருங்கிய நண்பரான இவருக்கு, பின்னர் பல பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. ஜூன் மாதம் 3ஆம், 6ஆம், 14ஆம் திகதிகளில் பனாகொடைச் சிறைச்சாலையிலிருந்து கட்டம் கட்டமாகத் தமிழ்க் கைதிகள் வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டனர். இவ்வாறு 58 தமிழ்க் கைதிகள் மாற்றப்பட்டனர். இவர்களில் டாக்டர் ராஜசுந்தரமும் ஒருவர். ஏற்கெனவே வெலிக்கடைச் சிறையில் சுமார் 75க்கு மேற்பட்ட தமிழ்க்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கான திட்டங்களைத் தீட்டியவர்கள் அதனை ஆரம்பிப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கமான ஜாதிக சேவக சங்கமயவைச் சேர்ந்த குண்டர்கள் இதற்கெனத் தயார்படுத்தப்பட்டனர். அமைச்சர் சிறில் மத்தியூவின் நெருங்கிய ஆதரவாளனும் காடையனுமான கிறிஸ்தோப்பர் ஜயதிலகா என்பவனிடமே இதற்கான பொறுப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

கோணவல சுனில் என்பவன் பெயர்பெற்ற பாதாள உலகக் கோஷ்டித் தலைவன். பதினான்கு வயதுச் சிறுமியைக் கற்பழித்த குற்றச்சாட்டின் பேரில் இவன் சிறைவாசம் அநுபவித்து வந்தான். 1982ஆம் ஆண்டு டிசம்பர் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜெயவர்த்தனவால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டான். இவனும் இவனது கோஷ்டியைச் சேர்ந்த காடையர்களும் தாக்குதல்களுக்கெனத் தயார்படுத்தப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கமான ஜாதிக சேவக சங்கமயவின் காடையர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டனர். கொலன்னாவவிலுள்ள களனி டயர் தொழிற்சாலையைச் சேர்ந்த பலர் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தென் பகுதியில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தாக்குதல்களை நடத்துவதே திட்டம். இதற்குத் தேவையான வரைபடங்கள், தமிழ் மக்கள் வசிக்கும் இடங்கள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கும் வாக்காளர் இடாப்புகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டன. குறித்த சில தினங்களுக்குள் தமிழர்களின் மீது திடீரெனத் தாக்குதல்களை நடத்தி உடைமைகளை அழித்தொழிப்பதே பிரதான நோக்கமாகும். தமிழர்களைக் கொல்லவோ தமிழ்ப் பெண்களைக் கற்பழிக்கவோ கூடாதெனக் குண்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், தமிழர்கள் எதிர்த் தாக்குதல் நடத்தினால் அவர்களைக் கொன்று விடுவதன் மூலம் ஏனையவர்களைப் பயமுறுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. காடையர் கோஷ்டிகள் தத்தமது பகுதிகளில் தாக்குதல் நடத்தக் கூடாதென்பதும் திட்டத்தின் ஓர் அம்சம்.

சிங்களவர்கள், தமிழர்களைத் தாக்கினார்களென்ற அபிப்பிராயம் மக்களிடையே ஏற்படாதவாறு விடயங்கள் கையாளப்பட வேண்டும்; இரகசியக் குழுவொன்றே திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியதாக வெளியுலகு நம்ப வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாக இருந்தது. தாக்குதல் குறிப்பிட்ட தினத்தில் ஆரம்பித்து குறிப்பிட்ட தினத்துக்குள் முடிவடைந்துவிட வேண்டுமென்பதும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் ஒன்று. **(தொடர்ந்து வரும்....)**




*வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!*

ஒவ்வொரு வாரமும் கண்டித்துக் கண்டித்து தலையில் அடித்துக்கொள்வதுபோல இவ்வாரமும் எங்கள் கண்டனங்களை மட்டுமே வெளிப்படுத்த முடியும். இவ்வாரம் புலிகளுக்கு எதிரான அரசியல் கருத்துக் கொண்டோரில் ஒருவர் சுடப்பட்டும் மற்றொருவர் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். படுகொலைகளை அனுமதிக்கும் சமாதானமானது இலங்கையின் இறைமையை மட்டுமல்ல, சட்ட ஒழுங்குககளையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

***சின் :-*** *ஐ.நா.மாநாட்டுக்குச் சென்றிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவை பல நாட்டுத் தலைவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனரே?*

**மன் :-** விரும்பியோ விரும்பாமலோ ஊடகங்கள் அந்தக் காட்சிகளை ஒளிபரப்பி வருகின்றன. ஜனாதிபதியின்ர தந்தையாருக்குப் பிறகு சிறப்பாக உரையாற்றிருப்பவர் ஜனாதிபதி குமாரதுங்கதான் எண்டஅளவுக்கு, உலகு எதிர்நோக்கும் பல விடயங்களை உள்ளடக்கிப் பேசி இந்தக் கௌரவத்தைப் பெற்றிருக்கிறார். ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனானுடனான சந்திப்பின்போது அவர் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில உதவத் தயார் எண்டு தெரிவிச்சிருக்கிறது வரவேற்கக்கூடியது. யார் உதவி செய்தும் என்ன பயன்? படுகொலைப் பிரியர்கள் சமாதானத்தை விரும்பயில்லையே.

***சின் :-*** *இந்தச் சந்திப்புகளில ஒரு அங்கமாக அமெரிக்க - இந்தியத் தலைவர்களும் தங்கட கவனம் இலங்கை விவகாரங்கள் குறித்துத் திரும்பியிருக்கிறதையும் வெளிப்படுத்தியிருக்கினம். தம்பிமாருக்குள்ள அதிருப்தியடைஞ்சு பிரிஞ்சு போன தம்பி கருணாவின்ர சகோதரர் கொல்லப்பட்டுவிட்டார் எண்டு தம்பிமாரே தெரிவிச்சிருக்கினமே.*

**மன் :-** அப்பிடித்தான் செய்திகள் உலாவுது. எனக்கெண்டால் சின்னச் சந்தேகம். ரெஜி கொல்லப்பட்டுவிட்டார் எண்டு அறிவிச்ச தம்பிமார் குறித்த தினத்தில மூன்று பிரதங்களை எரிச்சுப் போட்டிருந்தவை எண்டுதான் மக்கள் சொல்லிச்சினம். ரெஜி எண்டால் ஏன் முகங்களை எரிக்க வேணும். தவிரவும் தம்பிமாருக்குப் பூசி வருகிற டீ.விக்காரர் இதப் பற்றி ஒண்டையும் காட்டயில்லையே. இப்ப புரியுதோ ஏன் எனக்குச் சந்தேகமெண்டு?

***சின் :-*** *நீங்கள் இப்பிடிச் சொல்லிறியள்......அங்கால கருணாவும் பழி தீர்ப்பன் எண்டு முழங்கியிருக்கிறார். ஒரு கட்டமாக வாகரையில சில தாக்குதல்களையும் நடத்தியிருக்கிறார் எண்டும் கேள்வி. திருமலையில உங்கட தம்பிமாரால கைதுசெய்யப்பட்ட ரெண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிக்கிறதில சிக்கல் தோன்றியிருக்குதே.....*

**மன் :-** தம்பிமார், தங்கட பொடியளை விடுவிச்சாத்தான் அவைகளை விடுவிப்பம் எண்டு பிடியா நிக்கினம், ஊர்காவல் படையளின்ர குடும்பங்களும், பெரும்பான்மையினரும் விடுதலைக்காக உண்ணாவிரதமிருக்கினம். படுகொலையளை எதிர்த்தும், விடுவிப்புக்காக உண்ணாவிரதமும் பொங்கு தமிழ கூட்டங்களை பகிரங்கமாக நடத்த அனுமதிக்காதேயுங்கோ எண்டு சாவதேசத்திலையும் தம்பிமாருக்கு எதிரான குரல்கள் பலமா ஒலிக்கத் தொடங்கியிருக்கு. தம்பிமார் எதையும் கண்டுகொண்டதாயில்லை. இது எதிலை போய் முடியப்போகுதோ.

***சின் :-*** *படுகுழிக்குள்ளதான் எண்டதில சந்தேகமேயில்லை....... ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒண்ட நடத்தியுள்ளதே.*

**மன் :-** அது லேட்டா நடந்த லேட்டர்ஸ்ட் புரோகிறாம்...ஏன் இப்பிடிச் சொல்லிறன் எண்டு யோசிக்காதயும். பிரதமர் ஒரு கூட்டத்தில பேசயுக்க "நாடு எதிர்நோக்கும் விலையேற்றத்துக்கு எதிராக நான் எதிர்க்கட்சியில இருந்தால் ஒரு ஆர்ப்பாட்டமே நடத்தியிருப்பன்; என்ன செய்ய? நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது என்றாலும் அரசு முடியுமான உதவித்திட்டங்களை பற்றி சில சாதகமான நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வருகிறது" எண்ட கருத்துப்படப் பேசியிருந்தார். இதுதான் எதிர்க்கட்சிகளைத் தூண்டிவிட்டாதாக நினைக்கிறேன்.

***சின் :-*** *எனக்கும் அப்பிடித்தான் படுகுது...பிரதமரின்ர புத்திசாலித்தனம் யாருக்கு வரும்......லண்டனில நடந்து முடிஞ்ச மினி உலகக் கிண்ணத்தை நினைச்சுப் பாக்காதவை சுவிகரிச்சுப் போட்டினமே.*

**மன் :-** ஆங்...கங்காருக்காரர் எடுப்பினம் எண்டுதான் எதிர்பாத்தன். அவைக்கு வாய்ப்பில்லை எண்டதும் லண்டன்தான் வச்சுக்கொள்ளுமெண்டு எதிர்பாத்தன். அதுவும் நடக்கயில்லை. இறுதியாட்டத்தில எட்டு விக்கட்டுக்களை இழந்து இன்னும் 64 ஓட்டங்களைப் பெற வேணும் எண்ட நிலையில் ஆடிக்கொண்டிருந்த மேற்கிந்திய தீவுக்காரர்கள் மிகவும் நிதானமாக ஆடி வெற்றி பெற்றது எவருமே நினைச்சுப் பாக்காதது. ம்.....வெற்றி தோல்வியை முன்கூட்டியே சொல்லிறதும் தப்புத்தானாக்கும்.

***சின் :-*** *எல்லா நேரமும் கணக்குச் சரியா வராதண்ண! பிழைச்சும் போகும். ஹீ....எரியிற மலை நிகழ்ச்சியில மாற்றுக் கருத்தை வலுவாப் பேசிறவை அவ்வளவா பங்கு கொள்ளினமில்லையே.*

**மன் :-** மாற்றுக் கருத்துக்கு யார் மதிப்புக் கொடுக்கினம்? மக்கள் கேள்வி கேக்கினம், ஏன் அவையளைக் கூப்பிடுகிறியளில்லை எண்டு...நிகழ்ச்சி நடத்திற தம்பி தேசியத்தின்ர தேன் குடிக்கிறார் : பின்ன எப்பிடி மற்றதுகளைப் பற்றி யோசிக்கிறது? தனக்கும் முதுகெலும்பு இருக்கெண்டிட்டு எதையெண்டாலும் ஏடாகூடமாச் செய்தாரெண்டால் தேசியக் கட்டுப் பாட்டுக்குள்ள சத்தியெடுக்க முடியாமல் தடுக்கப்படும், தவிரவும், வேறு சில எக்ஸ்ரா பிரச்சினைகளும் வருமெண்டதை யோசிக்காமலா இருப்பார். எல்லாம் ஒரு இதுதான்......

***சின் :-*** *அண்ணை! நல்லாத்தான் புரிஞ்சு வச்சிருக்கிறியள்.... நியாயமாத்தான் செய்தி சொல்லிறாங்கள் எண்டு ஏமாந்துபோற சனங்களை நினைச்சாத்தான் கவலையாக் கிடக்கு. திருகோணமலையில தம்பிமார் வீட்டுக்கொரு ஆள் தர வேணும் எண்ட மாதிரி கேட்கினமாமே.....*

**மன் :-** அதுமட்டுமில்லை...பதினைஞ்சு வயசிலயிருந்து முப்பத்தி ஐஞ்சு வயசு வரையானவை தங்கட கருத்தரங்குகளில கட்டாயமாப் பங்குகொள்ள வேணுமெண்டதோடை போராட்டத்திலையும் பங்குகொள்ள வேணுமெண்டும் கேக்கினமாம் எண்டு சனம் சொல்லியழுகுது. ஒரு சமூகத்தின்ர விடுதலைப் போராட்டமெண்டால் மக்களின்ர விருபத்தோடையும் ஏகோபித்த பங்களிப்போடையும் நடக்கிறதுதான். மக்களைக் கட்டாயப்படுத்திறதும் கலவரப்படுத்திறதுமில்லை எண்டு வயசுபோனதுகள் கவலையாக் கதைக்குதுகள். போராட்டம் திசை மாறிவிட்டுது எண்டதை தொடருகிற சகோதரப் படுகொலைகள் புலப்படுத்தயில்லையோ....

***சின் :-*** *பாவமண்ண மக்கள்....ஏமாந்து போச்சினம்... நாமளும்தான். நாட்டில வரட்சி ஒரு பக்கமும் அடை மழை ஒரு பக்கமுமா இருக்கே.*

**மன் :-** நாட்டின்ர மேலால தாழமுக்கம். அதால ஒரு பக்கத்தில கடும் மழை. அதே நேரத்தில இன்னொரு பக்கத்தில கடும் வெய்யில், கடும் வரட்சி. தேவையான பகுதிகளில மழையில்லை. இயற்கையெண்டது இப்பிடித்தான் எல்லோருக்கும் பொதுவானது. மனிசன்தான் பகுத்தறிஞ்சுகொள்ளுறான். இது நியதி.

***சின் :-*** *வரட்சியால பாதிப்பு ஒரு பக்கம் வெள்ளத்தால பாதிப்பு ஒரு பக்கம். யாருக்கு யார் ஆறுதல் சொல்லிறது. சிகரெட் மதுபானங்களின்ர விலைகளும் அதிகரிக்கப்பட்டிருக்குதே.*

**மன் :-** என்ன ரொம்பக் கவலையாக் கேட்கிறீர்? அது ரெண்டாலையும் ஒரு நன்மையுமில்லையே! பின்ன விலையேறுதெண்டு ஏன் கவலைப்பட வேணும்..... பத்தாதுங்கோ... குடிக்காதயுங்கோ எண்டால் கேக்கமாட்டாங்கள். விலையேறிவிட்டுது எண்டிட்டாவது கைவிட்டால் நல்லது. நல்லதுக்காக நடைபெற்ற விலையேற்றமெண்டு இதைச் சொல்லலாம். ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால அடுப்பில உலைக்குப் பதிலா அப்பாவி மக்களின்ர வயிறுதான் கொதிக்குது எண்டதை சம்பந்தப்பட்டவையள் புரிஞ்சுகொண்டால் சரிதான்.

**மன்னவரும் சின்னவரும்**

# எது சந்தோஷம்?

அவன் மாபெரும் செல்வந்தன். சந்தோஷம்தான் இல்லை. தேடிக்கொண்டு வெவ்வேறு நாடுகளுக்குப் போய்ப் பார்த்தான். சந்தோஷம் கிடைக்கவில்லை. மது, மங்கையர், போதைப் பொருள் என்று எல்லாவற்றின் பின்னாலும் அலைந்து பார்த்தான்....மனம் மகிழ்ச்சியே அடையவில்லை. 'துறவறத்தில் இறங்கினால் சந்தோஷம் கிடைக்கும்' என்று யாரோ சொல்ல....அதையும் அவன் முயற்சி செய்து பார்க்க முடிவெடுத்தான். தனது வீட்டிலிருந்த தங்கம், வைரம், வைடூரியம் என்று எல்லாவற்றையும் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு போய் ஒரு யோகியின் காலடியில் வைத்துவிட்டு.....

"ஸ்வாமி! இதோ என் அத்தனை சொத்துக்களையும் உங்கள் காலடியில் வைத்திருக்கிறேன்! இனி இதில் எதுவுமே எனக்குத் தேவையில்லை! நான் நாடி வந்திருப்பது அமைதியையும் மனச் சந்தோஷத்தையும் மட்டுமே" என்று யோகியிடம் சரணடைந்தான்.

அந்த யோகியோ அந்தச் செல்வந்தன் சொன்னதைக் காதில் வாங்கிய மாதிரியே தெரியவில்லை. அவன் கொண்டுவந்த மூட்டையை மட்டும் அவசரமாகப் பிரித்துப் பார்த்தார். கண்ணைக் கூசவைக்கும் ஒளியுடன் ஜொலித்த தங்கத்தையும் வைரக் கற்களையும் பார்த்த யோகி, மூட்டையைச் சுருட்டி எடுத்துத் தன் தலையில் வைத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தார்.

செல்வந்தனுக்குப் பெரும் அதிர்ச்சி! "அடடா! இருந்திருந்து ஒரு போலிச் சாமியாரிடம் போய் நம் செல்வத்தை ஏமாந்து கோட்டை விட்டுவிட்டோமே" என்ற துக்கம்....ஆத்திரமாக மாற...அந்தச் செல்வந்தன், யோகியைத் துரத்த ஆரம்பித்தான்.

யோகியின் ஓட்டத்துக்குச் செல்வந்தனால் ஈடுகொடுக்க முடியவில்லை. சந்துபொந்துகளில் எல்லாம் புகுந்து புகுந்து ஓடிய யோகி, கடைசியில் தான் புறப்பட்ட அதே மரத்தடிக்கே வந்து நின்றார். மூச்சு இரைக்க இரைக்க அவரைத் துரத்திக்கொண்டு வந்த செல்வந்தனிடம் யோகி, "என்ன பயந்துவிட்டாயா? இந்தா உன் செல்வம். நீயே வைத்துக்கொள்!" என்று மூட்டையைத் திருப்பிக் கொடுத்தார்!

கைவிட்டுப் போன தங்கமும் வைரமும் திரும்பக் கிடைத்துவிட்டது என்பதில் செல்வந்தனுக்குப் பிடிபடாத சந்தோஷம்! அப்போது அந்த யோகி, செல்வந்தனைப் பார்த்துச் சொன்னார் : "இங்கே வருவதற்கு முன்னால்கூட இந்தத் தங்கமும் வைரமும் உன்னிடம்தான் இருந்தன. ஆனால், அப்போது உனக்குச் சந்தோஷம் இல்லை. இப்போது உன்னிடம் இருப்பதும் அதே தங்கமும் வைரமும்தான். ஆனால், உன் மனதில் இப்போது சந்தோஷம் இருக்கிறது!"

இதிலிருந்து புலப்படும் உண்மை ஒன்றுதான்.

சந்தோஷம் என்பது நமக்கு வெளியே இல்லை! மனதில்தான் இருக்கிறது.

இந்த உண்மை, செல்வத்தை மூட்டை கட்டிக்கொண்டு திரிந்த செல்வந்தனைப் போலவே நம்மில் பலருக்கும்கூடத் தெரிவதில்லை. அதனால்தான் நாம் பல சமயங்களில் நமது சந்தோஷத்துக்காகப் பிறரைச் சார்ந்து இருக்கிறோம்.

மேலதிகாரி, "சபாஷ், நீ நன்றாக வேலை செய்கிறாய்!" என்று



பாராட்டினால் நாம் சந்தோஷத்தில் மிதப்போம். அதே மேலதிகாரி, நம்மை ஒரு வார்த்தை திட்டிவிட்டால் சந்தோஷம் ஒட்டுமொத்தமாகப் போய்விடும்!

போதை தலைக்கேறும் வரை குடித்துவிட்டு வீதியிலே விழுந்து கிடந்த ஒருவனிடம் அவனது குறும்புக்கார நண்பன், "டேய்! உன் வீட்டுக்குப் போயிருந்தேன். இன்று சாயங்காலம் உன் மனைவி விதவையாகிவிட்டாள். அதனால் சீக்கிரம் வீட்டுக்குப் போய் உன் மனைவிக்கு ஆறுதல் சொல்!" என்று பொய்யாகப் பதறினான். இதைக் கேட்டு "ஐயையோ....என் மனைவி விதவையாகிவிட்டாளாமே!" என்று அந்தக் குடிகாரன் அழ ஆரம்பித்தான். நம்முடைய அறியாமை இந்தக் குடிகாரனின் அறியாமை போன்றதுதான்.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் இப்படி ஒரு குடிகாரன் இருக்கிறான். உண்மை இல்லாத பல விஷயங்கள்தான் நம்மைப் பல சமயங்கள் சோகத்தில் பிடித்துத் தள்ளுகின்றன. வேறு பல சமயங்களில் முக்கியம் இல்லாத சமாச்சாரங்கள் நம் சந்தோஷத்தைப் பறித்துவிடுகின்றன.

இளம் பெண்மணி ஒருத்தி தன் குழந்தையுடன் கடற்கரைக்குப் போயிருந்தாள். கடல் அலைகளிலே விளையாடிக்கொண்டிருந்த குழந்தையைத் திடீரென்று ஓர் அலை இழுத்துச் சென்றுவிட்டது. "ஐயையோ....என் குழந்தை போய்விட்டதே" என்று அந்தப் பெண் கண்ணீர்விட்டு அழுதாள். அந்தப் பெண்ணின் அழுகை உருக்கமாக இருந்ததால் கடல் தெய்வம், குழந்தையை மீண்டும் உயிருடன் கரைக்கு அனுப்பியது! தன் குழந்தைக்கு ஏதும் ஆகாதது கண்டு சந்தோஷத்தில் திக்குமுக்காடிவிட்டாள். குழந்தையின் கன்னங்களில் மாறி மாறி முத்தம் இட்டவள் எதேச்சையாக குழந்தையின் காலைக் கவனித்தாள். குழந்தையின் ஒரு காலில்தான் செருப்பு இருந்தது. இன்னொரு காலிலே இருந்த செருப்பைக் காணவில்லை! உடனே அந்தப் பெண்ணின் மகிழ்ச்சி பறந்துவிட்டது. "ஐயையோ! செருப்பு போய்விட்டதே" என்று அவள் மீண்டும் அழ ஆரம்பித்தாள்!

இதற்கும் ஒரு படி மேலே ஒரு ரகம் உண்டு. சந்தோஷமான விஷயம் கூடச் சிலருக்குக் கவலையைக் கொடுத்துவிடும். அந்த அளவுக்கு எதிலுமே திருப்தியடையாத மனிதர்களாக இருப்பார்கள்.

அவன் ஒரு விவசாயி. ஒரு பருவத்தில் அவனது தோட்டத்தில் அமோகமாகத் தக்காளி விளைந்திருந்தது! ஆனால், விவசாயி கவலையோடுதான் உட்கார்ந்திருந்தான். "ஏன் கவலையாக இருக்கிறாய்? உன் தோட்டத்தில்தான் இந்த வருடம் நல்ல விளைச்சலாயிற்றே...."என்று ஊர்க்காரர்கள் அவனைக் கேட்க, அதற்கு அவன், "நான் என் தோட்டத்தில் விளையும் தக்காளிகளில் சொத்தைத் தக்காளிகளை எடுத்து என் பன்றிகளுக்குப் போட்டுவிடுவது வழக்கம். இந்த முறை எல்லா தக்காளிகளுமே நன்றாக இருக்கின்றன. ஒரே ஒரு சொத்தைத் தக்காளிகூட இல்லை. பன்றிகளுக்கு எதைப் போடுவேன்? அதுதான் கவலையோடு இருக்கிறேன்" என்றானாம்.

எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், சந்தோஷம் என்பது ஒரு பூட்டு மாதிரி. அறிவு என்பது சாவியைப் போலஅறிவுச் சாவியை எதிர்ப் பக்கம் திருப்பினால் அது சந்தோஷத்தைப் பூட்டிவிடும். அதே சாவியைச் சரியான பக்கம் திருப்பினால் சந்தோஷக் கதவுகளைத் திறந்துவிடும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 80இல் அச்சுப் பிழை காரணமாக தவறுதலான கேள்வி பிரசுரமாகி விட்டதால் அப்போட்டியை இரத்துச் செய்துள்ளோம். இதனால் பரிசுக்குரிய வாசகர்களின் பெயர்களைப் பிரசுரிக்க முடியவில்லை. எனவே தொடர்ந்து போட்டி இல 81இல் இருந்து போட்டிக் கூப்பன்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தவறுக்காக வருந்துகிறோம்.**

## குறுக்கெழத்துப் போட்டி 89

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | 7 | 8 | 9 |
| 10 | | 11 | | 12 |
| 13 | | | 14 | |
| 15 | 16 | 17 | 18 | |
| | | 19 | 20 | 21 |

**இடமிருந்து வலம்**

1. தமிழ்நாட்டில் மூலிகைகள் அதிகமுள்ள இடம். இங்கே குறவர்கள் அதிகமாக வாழ்கின்றனர்.
7. பழம் தின்னும் பிராணி. அதன் இளையதை பிள்ளை என்பர் (திரும்பியுள்ளது).
15. இராசிகளில் ஒன்று.
19. குற்றெழுத்து (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. மிகப் பெரிய மரமுந்திரிகைப் பண்ணை.
3. விட்டமின் C அதிகமுள்ள பழம் (தலைகீழாவுள்ளது).
4. 3,600 செக்கன்.
5. பெண் (குழம்பியுள்ளது).
14. கை கொட்டி ஆடிப் பாடுவது (தலைகீழாகவுள்ளது).
17. பெண் ஆடு.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 05.10.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

**குறுக்கெழுத்துப் போட்டி இல-89**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

63

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ...............



உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-10-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**கம்பளை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 60

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**திருமதி. ஜோதிலக்ஷ்மி**
இல.03, மொல்லிகொட லேன், கம்பளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

## இவ்வாரச் சிறு கதைகள்

# உண்மைக் காதல்

காலைக் கதிரவன் மேனியில் பட்டுத் தெறிக்க கால் போனபடியே நடந்துகொண்டிருந்தான் வசீகரன். ஆயிரம் அலைகள் அடித்து இறுதியில் ஒன்றுதான் கரையை முத்தமிட்டது. அது அவனை எங்கோ அழைத்துச் சென்றது. அவனது பழைய நினைவுகள் மனதில் திரையிட்டன.

தாயை இழந்து தமையனின் பராமரிப்பில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். தாயைப் போல அண்ணி. சொல்லவா வேணும். குடும்பத்தில் நாலு பேரும் பெடியங்கள். பெண் சகோதரிகள் ஒருவருமே இல்லை. கடைக்குட்டி வசீகரன் மீது எல்லோரும் அளவுகடந்த பாசம். அண்ணியின் செல்லப்பிள்ளை என்றுதான் எல்லோரும் அவனை அன்பாக அழைப்பார்கள்.

அமைதி மிகுந்த கோவிலில் இறை பக்தர்கள் பலர் என்பது போல இவர்களின் வீட்டில் சந்தோஷ மிகுதியும் வசீகரனது பாசப் பக்தர்கள் என்பதாகும். பாசத்துக்குக் குறைவில்லை. வசீகரன் க.பொ.த.உயர்தரம் கணிதத்துறையில் படித்துக்கொண்டிருக்கிறான். படிப்பில் பயங்கரப்புலி. வகுப்பில் முதலிடத்தைத் தட்டிச்செல்வான். அதேபோல் விளையாட்டிலும் வீரன். ஒவ்வொரு வருடமும் சம்பியன் கப்புடன்தான் வீட்டுக்கு வருவான்.

சம்பியன் கப்புக்கள் பெறும்போது அதிகமாக இருவர் சந்தோஷப்படுவார்கள். அவர்களில் ஒருவர் அண்ணி. மறைமுகமான மற்றையவரை யாரென்று தெரியாது. அவன் சம்பியன் பெற்று வீட்டிற்கு வந்து சில நேரங்களின்பின் அவனது செல்போன் சிணுங்கும்.

"ஹலோ! யார் பேசுறது?

"ஹலோ வசீ! எனது வாழ்த்துக்கள்"

"எதுக்கு"

"நான் நினைச்ச மாதிரியே ஜெயிச்சிட்டாய்".

"ஏய் நீ யார்."

"ஓ...அதுவா? சொல்லுற காலம் வரேக்க சொல்லுறன்": என்று டாட்டா காட்டி விடைபெறுவாள்.

எல்லோரையுழ் வசீகரிக்கும் மனது, எதையும் தெட்டத்தெளிவாகவும் நிதானமாகவும் பேசும் வார்த்தைகள், எல்லோர் மனதையும் புரிந்துணரும் இதயம், பொறுமை என்ற போர்வைக்குக் கட்டுப்படுதல், ரோஜாப்பூ நிறம், அழகும் கம்பீரத் தோற்றம், எவருடனுமே கதைக்க விரும்பாத அமைதிப் போக்கு. என்னென்ன நற்பண்புகள் இருக்க வேண்டுமா அத்தனையும் கொண்டவன் வசீகரன். அவன்தான் பாடசாலை மாணவத் தலைவன். இவனது குணத்தையும் அழகையும் கொண்டவள்தான் வானதி. அவள்தான் பாடசாலை உதவி மாணவத் தலைவி.

பொருத்தமான ஜோடி - வானதி விஞ்ஞானத்துறையில் இவனோடுதான் கல்வி பயிலுகிறாள். வகுப்பில் முதலிடத்தைப் பெறுவாள். வசீகரனின் அண்ணியின் தங்கை. இவனது மச்சாள். காலம் ஓடிக்கொண்டிருந்தது. பரீட்சைக்கு இரு மாதம் இருக்கும் தறுவாயில் ஒருநாள் இருவரும் சந்தித்தனர்.

"ஹலோ வசீ! என்ன இந்தப் பக்கம்"

"உன்னைப் பார்க்கத்தான் வந்தனான். நீ?"

"நானும் உன்னைப் பார்க்கத்தான்" என்று நிஜ வார்த்தையைப் போலியாக வாய்க்குள்ளால் உருட்டிவிட்டுச் சிரித்தார்கள்.

"வானதி! நான் உன்கிட்ட ஒண்டு சொல்லணும்"

"என்ன?"



-அ.அஞ்சனா, கரவெட்டி

"உண்மையா நான் உன்னைக் காதலிக்கிறன்."

"என்ன காதலா."

"ம்...."

"ஏண்டா உனக்கு கொஞ்சம் கூட அறிவிருக்கா? தாயில்லாப்பிள்ளை எண்டு எவ்வளவு கஷ்டப்பட்டு அக்காவும், அத்தானும் வளக்கினம். நீ என்னடா எண்டா காதலும் கத்தரிக்காயெண்டும் கதைக்கிறாய். முதல்ல நீ என்ஜினியறாவாய் எண்டு எதிர்பாக்கினம். அந்த இலட்சியத்தை நிறைவேற்று" என்று வாய்க்கு வந்தபடி பேசித்தள்ளிவிட்டுச் சென்றாள்.

தாங்க முடியாத வேதனையால் துடித்த வசீ இரு நாட்களின் பின் வீட்டை விட்டுச் சென்றான். இந்தக் கடலோரத்தில் நான்கு நாட்கள் கழித்துவிட்டு நினைவலைகளிலிருந்து மீளமுடியாதிருந்து அழுதபோது பின்னால் "தம்பீ..."என்ற அழைப்பு. திரும்பிப் பார்த்தால் அண்ணனும் அண்ணியும். அவர்களுடன் வீட்டுக்குச் சென்றான்.

"ஏண்டா போனனீ? ஏதாவது பிரச்சினையா?"

"இல்ல" என்று மழுப்பிவிட்டுப் படிப்பைத் தொடர்ந்தான். காலம் ஓடியது. பரீட்சை எழுதி முடிவுகளும் வெளியாகின.

வசீகரன் 3ஏயும் வானதியும் அவ்வாறே எடுத்து வசீகரன் பேராதனைப் பல்கலைகழகத்துக்குப் பொறியியல் மாணவனாகவும், வானதி யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மருத்துவபீட மாணவியாகவும் சென்றார்கள். காலச் சக்கரம் சுழன்றது. ஐந்து வருடங்களின் பின் மீண்டும் வசீகரன் ஊருக்கு வந்தான்.

ஊருக்குள் நுழைந்தவனைக் காணுவதற்காக ஓடோடி வந்தாள் வானதி. பார்க்க மனமின்றித் திரும்பிச் சென்றாள். வானதியாலும், அவனாலும் கதைக்காமல் இருக்க முடியவில்லை. வசீகரனது செல்போன் கதறவே,

"ஹலோ! யாரு பேசுறது?"

"ஹலோ வசீ! வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்."

"எதுக்கு?"

"நான் நினைச்ச மாதிரி ஜெயிச்சிட்டாய்."

"ஏய் நீயா?."

"ஐ லவ் யூ"

"ஏய்"

"என்னைப் பார்க்கணுமா? அப்படியென்றால் உங்களின்ர தோட்டத்திற்கு வா" என்று கூறி முடித்தாள்.

அவசரமாக வெளிக்கிட்டான் வசீகரன்.

"என்னடா, என்னாச்சு? எங்க வெளிக்கிட்டிட்டாய்?" என்று கேட்டு அண்ணி முடிப்பதற்குள் தோட்டத்தை நோக்கி விரைந்தான். அங்கே வானதி இருப்பதைக் கண்டதும் அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

"வா வசீகரன்" என்று வானதி கூற,

"என்ன வேணும்? ஏன் வரச் சொன்னாய்?" என்றான் கோபத்துடன்.

"என்மேல இருக்கிற கோபம் இன்னும் போகலப் போல. நீ நினைப்பாய் நான் வேணுமெண்டுதான் ஏசினனான்" என்று வானதி கூறி முடிக்குமுன், "நீ எனக்கு ஒண்டும் சொல்ல வேண்டாம்" என்றான் வசீகரன்.

"ப்ளீஸ் இதைக் கேட்டுட்டுப் போ." நான் செய்தது சரியா பிழையா எண்டு உனக்குத் தெரியும். நீ உன் காதலை என்கிட்ட சொல்லி விட்டாய். ஆனா நான் சொல்லவும் முடியல்லை. சொல்லாம இருக்கவும் முடியல்லை. ஏன் தெரியுமா? என் காதலால உனது திறமைகளும் படிப்புகளும் எல்லாருடைய எதிர்பார்ப்புக்களும் பாழாகிவிடக் கூடாது எண்டுதான் நான் அப்படிச் செய்தனான். ஆனா செல்போனிலை உனக்கு வாழ்த்துச் சொல்லுறதெல்லாம் நான்தான். இப்ப சொல்லு வசீகரன், நான் செய்தது தப்பா?"

"இல்லை, வானதி எப்பவும் வசீகரனுக்குத் தப்புச் செய்ய மாட்டாள்" என்று கூறி ஆனந்தத்துடன் கட்டியணைத்து முத்தமிட்டான் வசீகரன்.

"உண்மையான அன்பு எப்போதும் ஜெயிக்கும்" என்றாள் வானதி, கல்யாணம் என்னும் பாச பந்தத்தை நோக்கி.

# கலைந்து போன கனவுகள்

"அம்மா! அம்மா! இங்கே வந்து பாருங்களேன். நம்ம அமுதா படம் பிடிச்சி அனுப்பி இருக்கா" என்றபடி அழைத்துக்கொண்டு சமையல் அறையில் சமைத்துக் கொண்டிருந்த அம்மாவிடம் வந்து படத்தை எடுத்துக் காட்டினான் தியாகு. "ஆமாம் அமுதா டாக்டர் உடுப் பெல்லாம் போட்டிருக்கிறாளே" என்று ஆச்சரியத்துடன் கேட்ட அம்மாவிடம்,

"ஆமாம் அம்மா! நம் அமுதா அமெரிக்காவில பெரிய டாக்டர் ஆகிவிட்டாள். இனி நமக்கு எல்லாம் ஒரு கவலையும் இல்லை" என்று சந்தோசத்தோடு ஓடி ஆடிக்கொண்டு இருந்தான்.

அன்று ஆற்றுக்குக் குளிக்கச் சென்றான் தியாகு. அவனது நண்பர்கள் எல்லாம் வழமைக்கு மாறாக "தாடியெல்லாம் சேவ் பண்ணி ஐயா இன்றைக்கு புது மாப்பிள்ளை போல இருக்கிறாரே! என்ன காரணம்?" என்று கேட்டனர். தியாகு தன் நண்பர்களைப் பார்த்து "ஏய்! இங்கே பாருங்க. என் அமுதா என்னை கட்டிக்கப் போகின்றவள்" என்று அந்தப் படங்களை நண்பர்களிடம் காட்டி மகிழ்ந்தான்.

"ஆஹா இதோ பாருடா, நம் தியாகு இனிமேல் டாக்டரின் ஹஸ்பன்ட்டா" என்று கேலி செய்தனர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மோகன் ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்தான். நண்பர்கள் அனைவரும் குளித்துவிட்டு சென்றனர்.

அன்று மாலைப் பொழுதைப் போக்குவதற்காக மோகனும் தியாகுவும் ஆற்றோரமாய் மீன் பிடிக்கச் சென்றனர். அப்போது மோகன் தியாகுவைப் பார்த்து, "தியாகு! இன்றைக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாய் அத்துடன் யாரோ அமுதா, டாக்டர் என்றெல்லாம் பேசுகிறாயே! என்ன?" என்று கேட்டான். அவன் கேட்பதிலும் ஒரு காரணம் இருந்தது. ஏனென்றால் மோகன் ஊருக்கு வந்துள்ள புது நண்பன். ஆகையால் அவனுக்கு எதுவும் தெரியாது என்பதனை புரிந்துகொண்ட தியாகு தன் கதையைக் கூற ஆரம்பித்தான்.

மோகன் என் அம்மாவின் தம்பி சின்னதுரை. மனைவி பெயர் தாயம்மாள். அதாவது எனது அத்தை. இவர்களின் மகள்தான் அமுதா. என்னை விட இரண்டு வயது இளையவள். மாமாவுக்கு ஒரே பிள்ளை அமுதா. எங்கள் வீட்டிலும் நான் மட்டும் ஒரே பிள்ளை என் பெற்றோருக்கு. அதனால் சிறுவயசிலிருந்து எங்கள் மாமா, மாமி, அப்பா, அம்மா எல்லோரும் எனக்கு அமுதா, அமுதாவுக்கு நான் என்று சொல்லி வளர்த்தார்கள். நானும் அமுதாவும் படித்துக்கொண்டு இருந்தோம். சிறு வயதில் அமுதா நன்றாகப் படிப்பாள். அவள் அடிக்கடி என்னிடம் தான் எதிர்காலத்தில் ஒரு டாக்டராக வருவான் என்று சொல்வாள். அப்படி இருக்கும்போது ஒருநாள்

என் மாமாவும் மாமியும் ஒரு பஸ் விபத்தில் ஸ்தலத்திலேயே இறந்து விட்டார்கள். அதனால் என் அப்பா, அம்மா தான் அவளையும் வளர்த்தார்கள். இருந்தாலும் அப்போது என் வீட்டில் வறுமை தலை தூக்கியது. நான் சிறு வயதிலேயே அமுதா மேல் ரொம்ப அன்பு வைத்திருந்தனான். அமுதா தான் படித்து எப்படியாவது ஒரு டாக்டராக வேண்டுமென்று சொன்னாள். அதனால் நான் சிறு வயதிலேயே வேலைக்குப் போய்ச் சேர்ந்தேன். சின்ன வயதில் இருந்து அமுதாவின் படிப்புக்காகப் பணம் சேர்க்க ஆரம்பித்தேன். சேர்த்த பணத்தை வைத்து அமுதாவைப் படிக்க வைத்தேன். அவள் இப்ப பெரிய மேற்படிப்புக்காக அமெரிக்கா போயிருக்கிறாள்.

அவள் எப்போதுமே என் மேல் அன்பாய்த்தான் இருப்பாள். நானும் அவளை என் உயிராகத்தான் நினைத்துக்கொண்டிருக்கின்றேன். அவள் இல்லாவிட்டாள் நானில்லை, நானில்லாவிட்டால் அவள் இல்லை என்றுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்படித்தான் இன்றைக்கும் அமுதாவிடம் இருந்து கடிதம் வந்தது. அமுதாவின் படிப்பு முடிந்துவிட்டதாம். அடுத்த கடிதத்தில் எப்பொழுது இங்கே வருவேன் என்று எழுதுகிறேன் என்றும் அத்துடன் அமெரிக்காவில் அவளுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கும்போது எடுத்த படங்களையும் அனுப்பி இருக்கிறாள்" என்று தன் கதையைச் சொல்லி முடித்தான்.

பின்னர்



ஒரு மாதம் கழித்து தியாகுவுக்கு அமுதாவிடமிருந்து கடிதம் வந்தது. அதில் அமுதா எப்பொழுது ஊருக்கு வருகிறாள் என்று எழுதியிருந்தாள். இதைக் கண்ட தியாகு தன் அம்மாவிடம் போய்;

"அம்மா! அமுதா வந்ததும் அமுதாவும் நானும் கல்யாணம் செய்துகொள்ளலாமென்று கடிதம் போட்டிருக்கிறாள்" என்பதனை சொல்லி சந்தோஷ மழையில் நனைந்துகொண்டிருந்தான்.

அமுதா வருவதாகச் சொல்லியிருந்த நாள் வந்தது. தியாகுவும் அமுதாவை எதிர்பார்த்து வீட்டில் காத்துக்கொண்டிருந்தான், தன் ஆயிரம் ஆயிரம் கனவுகளுடன். திடீரென வானொலிப் பெட்டியில் முக்கிய அறிவித்தல் சொல்ல ஆரம்பித்தனர். தியாகு ஒலியைக் கூட்டினான்.

"இன்று காலை ஏழு மணியளவில் அமெரிக்காவில் இருந்து புறப்பட்ட விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக நடுவானில் வெடித்து சிதறியது. இதில் பயணம் செய்த அனைவரும் இறந்திருக்கலாம் என அஞ்சப் படுகிறது."

இதனைக் கேட்ட தியாகு இடிவிழுந்த ஆலமரம் போல சாய்ந்தான். என்ன நடந்ததோ தெரியவில்லை உயிருக்கு ஆபத்தான நிலையில் போராடிய தியாகு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அமெரிக்காவி லிருந்து தியாகுவின் வீட்டுக்கு அருகிலுள்ள அரசியல் வாதியின் வீட்டுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கிடைத்தது. அதில் அமுதா "நான் இன்று முக்கியமான நிகழ்ச்சியில் கலந்துகொண்டதால் வர தாமதமானது. காலை ஏழு மணிக்குப் புரப்படுவதாகச் சொல்லிருந்தேன். இன்று மாலை மூன்று மணியளவில் புறப்படுகிறேன். தாமதத்துக்கு மன்னிக்கவும்" என்று சொன்னாள்.

அமெரிக்காவிலிருந்து வீட்டுக்கு வந்த அமுதா அங்கே தன் எதிர்காலக் கணவனைக் காண ஆவலுடன் வீடெங்கும் தேடினாள்.

"மாமி! உங்கட மகனைக் காணயில்லையே மாமி. எங்க போயிட்டார்."

"நேற்றுத் திடீரெண்டு தியாகுவுக்குச் சுகமில்லாமல் போய் ஆஸ்பத்திரியில விட்டிருக்கு"

மாமி மேலும் சொன்ன செய்திகளைக் கேட்க அங்கே அமுதா இல்லை.

வேகமாக வைத்தியசாலைக்குப் புறப்பட்ட அமுதா தியாகு அனுமதிக்கப்பட்டிருந்த வாட்டுக்குச் சென்று அவனது கட்டிலைக் கண்டு பிடித்து......

அங்கே தியாகுவின் உடல் முழுக்க வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருந்தது.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## மற்றவர்களில் சார்ந்திராதே!

✱ உங்களைப் புரிந்துகொள்ளாத காரணத்தினால் மக்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாதபோது இறைவன் உங்கள் பக்கம் நிற்பார்.

✱ நான் இப்போது அநுபவிப்பது கடந்த காலத்தின் விளைவாகும். நான் எதிர்காலத்தில் அநுபவிக்க வேண்டியது, நான் இப்போது செய்வதிலேயே தங்கியிருக்கின்றது.

✱ நான் பலரைச் சார்ந்திருந்தால் நான் ஏமாறக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

✱ வளர்ச்சி இருக்கும்போது மாற்றங்கள் தன்னிச்சையானது. நான் மாற்றத்துக்குப் பயந்தால் எப்படி வளர்ச்சி இருக்க முடியும்?

✱ சுயமரியாதையை விருத்தி செய்யாவிடின் நான் பிறரது காலடியில் இருக்க வேண்டியதுதான்.

✱ என்னுடைய செயல்கள் யாவும் இறைவனுக்காக எனக் கருதும்போது எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுவதில் சந்தோஷம் இருக்கும்.

✱ இருளுக்கு மிகுந்த பயம் இருப்பின் எனது கண்களை மூடிக்கொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

✱ இறைவன் எனது தோழன் என்ற உணர்விலே எந்தச் செயலைச் செய்யும் போதும், சாத்தியமற்றதும் சாத்தியமாகும்.

✱ சோதனைக்குரிய நேரமே மனிதர்களை மேன்மையாக்குகின்றது. வெற்றிக்குரிய நேரமல்ல.

✱ நீங்கள் உங்களுடைய இதயத்தை இறைவனுக்கு அர்ப்பணித்தால், உங்களுக்கு மாரடைப்பு ஏற்படாது.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

---

# இலக்கிய நயம்

எல்லோரும் தூங்கிய பிறகும் இவளுக்கென்ன அடுக்களையில் வேலை என்று சலிப்புடன் நினைத்துக்கொண்டான் பிரபு. பாத்திரங்களின் உராய்வும், களகளவென நீரின் ஓசையும் அந்த இரவின் மோனத்தைக் குதறின.

படுக்கையிலிருந்து எழுந்த பிரபு கதவைச் சத்தமெழ ஓங்கி அறைந்து சாத்திவிட்டு வந்து மீண்டும் படுத்தான். காற்றுக்கு மீண்டும் திறந்த கதவு முனகியது. கூரை இடுக்குகள் வழி நிலவின் கீற்றுகள் வழிவதைப் பார்த்தபடி சிறிது நேரம் படுத்திருந்தான். சமையலறையில் ஓசைகள் நின்றன. பிரபு மறுபக்கம் திரும்பிக் கண்களை மூடிக் கிடந்தான். கொலுசொலி காது மடல்களைச் சிலிர்க்கவைத்து இதயம் புகுந்தது. கதவின் கிரீச்சிடலோடு மல்லிகை

## "கூந்தலின் சுகந்தம் மெல்லுடலின் குழைவு கண்களின் குறுகுறுப்பு கிறுகிறுக்க வைக்கிறதே"

யின் வாசனை உள் நுழைந்தது.

அறைக்குள் வந்த பிறகும் ரோகிணிக்கு வேலைகள் முடியவில்லை. குறுக்கும் நெடுக்குமாக ஒரு தென்றல் போல் அலைந்து எதையெதையோ அடுக்கி வைக்கிறாள். பிரபுவின் கண்களைத் தவிர மற்றப் புலன்களனைத்தும் வெகு கூர்மையாக விழிப்புக்கொண்டிருந்தன. மனம் அவள் காலடிகளை எண்ணியபடி ஆவலோடு காத்திருந்தது. மல்லிகையின் வாசனை அவனைச் சுழற்றியடித்தது. மூடிய கண்களுக்குள் அவள் முகமும் உதடுகளும்! அவன் முதுகுப் புறமே படுக்கையில் இடமிருந்தது. ரோகிணி அவனைக் கலைக்க விரும்பாத கவனத்தோடு அங்கு படுத்துக்கொண்டாள். பிரபு முதுகுப்புறம் குறுகுறுப்பாக அவளை உணர்ந்தான். அவளுடலின் மென்மை மெத்தென முதுகில் படிகையில், அதுவரை இருந்த கோபத்தைக் காதல் நிரப்பியது. மெல்லிய அலைகளாக அவளை நோக்கிப் படரும் காமத்தை அவனறிந்தான்.

### தருவது முழடில்யன்

அவளுடைய பேதமை, தன் அழகையும் வசீகரத்தையும் உணராத தன்மை, இன்னும் சிறுமி போல அவன் அணைப்புக்கு ஒண்டிக் குறுகிக் கிடக்கும் சிற்றுடல், மனிதை வெறிகொண்டு பாயவைக்கும் அவள் வாசனை.... இவற்றால், இரவுகள் தோறும் அவள் அருகாமைக்காக வேட்கையுற வைப்பவள். தன்னை முழுமையான ஆண்மகனாக, நாயகனாக, தீராக் காதலனாக உணர வைப்பவள்..... பிரபு முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டவனாக அவளை நோக்கித் திரும்பினான்.

"ம்...இப்போதுதான் உன் வேலை முடிந்ததா?"

ரோகிணி பதிலின்றிப் புன்னகைத்தாள். அவளை இழுத்து நொறுங்கும்படி இறுக அணைக்கும் பரபரப்பு தன் நரம்புகளில் ஏறுவதை உணர்ந்தான். அவள் அவன் கண்களுக்குள் எதையோ தேடினாள்.

"என்னைப் பற்றியே உனக்கு ஞாபகமில்லை" அவன் நினைத்திருந்த கோபத்தில் வார்த்தைகள் வரவில்லை. அவள் இதற்கும் பதிலின்றிக் கிடந்தாள். அவள் மூச்சுக்கேற்ப அசையும் அங்கங்களைக் கண்டான் அவன். பார்வை அவளைக் கண்மூட வைத்தது. உடல் அசைந்து அவன் மேல் சற்று உராய்ந்தது ஒருமுறை.

உடலெங்கும் பாய்ந்த மின்னல் அனலை வாரித் தெளித்தது. ஆவேசத்துடன் அவள் மார்பின் மென்மைக்குள் முகம் புதைத்துக் கொண்டான். அவன் வேகத்திற்குப் பதில் வேகம் அவளிடமிருந்தும் வெளிப்பட்டது.

அவளுடல் அவன் உடல் திண்மையை உணரும் விதமாக மோதி இழைந்தது.

சற்று நேரத்திலேயே அவள் உருகி, அவன் தேடலில் முழுமையாக அழுந்திக்கொண்டாள். அவளுக்கு இணையற்ற துணிவை இன்பத்தின் எதிர்பார்ப்பு அளித்தது. ஒருவரையொருவர் மீறிவிட முயன்ற அந்த முயற்சிப் போராட்டத்தில் வெற்றி எது தோல்வி எது என்று நிர்ணயிக்க முடியாத மயக்கமே தொடர்ந்தது. அறிவு, இடம், பொருள், ஏவல்களை மறந்துவிட்ட அந்த வெறியில் இருவரும் பிணைந்து கிடந்தனர் நீண்ட நேரம்.

இப்போது நினைக்கையில், ரோகிணி மீது தனக்குக் கோபம் வரும் என்பதே ஆச்சரியமாக இருந்தது பிரபுவுக்கு. அவள் சமையலறையிலேயே மூழ்கிக் கிடப்பதையும், அவனைச் சாப்பிட வைப்பதை ஏதோ தெய்வக் கடமையாக எண்ணுவதையும் உணவின் ருசி அவன் முகத்தில் தெரிந்தால் அவள் சந்தோஷத்தில் முகம் மலர்ந்து நிறைவதையும் நினைத்தபோது பிரபுவுக்குக் கவலை அதிகமானது. அவனுக்காகவே தன் சந்தோஷங்களை உருவாக்கிக்கொள்பவளை தான் சரிவரக் கௌரவப்படுத்தவில்லையோ, அவள் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு மென்மையாக நடந்துகொள்ளவில்லையோ என்று மனதில் சங்கடமானான். ஆசை வெறியை உண்டாக்குபவளாகவும் தன் சௌகரியங்களுக்கு ஏற்ற ஒரு கருவியாகவுமே அவளைப் பார்த்திருக்கிறான். அவள் விருப்பங்களை, கவலைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் கணவனாக, அவள் தோழனாக நடந்துகொள்வதை.....அவனுக்குள் ஊறியிருந்த மரபு தடைசெய்தே வந்திருக்கிறது. அவள் மெல்லுடல் தழுவும் நேரம் உண்டாகும் போதையும் மயக்கமும் வேறெந்த எண்ணத்தையும் மழுங்கடித்துவிடுகிறது. அவனை ஒன்றுமில்லாதவனாகச் சிதறடிப்பதாகவும் திறமையாக ஆதிக்கம் புரிபவனாகவும் நிறுத்திப் பார்க்கும் வனப்பு அவளுடையது.

இந்த ஆதிக்க விருப்பு மனமே அவள் அதிர்ந்து பேசாததையும், மென்மையின் கொஞ்சலையும் இரசிக்கிறது. அவள் அடங்கிக் கைகளில் குழைவதில் இன்பம் கொண்டு ஆடுகிறது.

அவள் கூந்தலின் வாசனைச் சுகம், மெல்லுடலின் குழைவு, கண்களின் நாணக் குறுகுறுப்பு, தேனினுமினியதாய்க் கொஞ்சும் மொழி....இப்போது நினைக்கையில் ஏக்கமும் சங்கடமும் மிகுந்து பிரபு அழுதுவிடுவான் போல உணர்ந்தான். அவள் மீது எப்படிக் கோபமெல்லாம் பட முடிந்தது என வேதனையுடன் வியந்தான். தனக்குச் சமமாக அவளை எண்ணி, அவள் தரப்பிலிருந்து தான் எதையும் சிந்தித்துப்



பார்த்ததில்லை என்பது இழிவு மிகுந்த குற்றமாக இவனை இப்போது வாட்டியது.

தன்னைப் பிரிந்திருக்கும் கவலை அவளுக்கு எத்தகையதாக இருக்கும் என்று நினைத்தபோது, அதுவரை இருந்த கவலையை அமுக்கிய பேரலை ஒன்றினுள் பிரபு வீழ்ந்தான்.

*முற்றையும் உடையமோ மற்றே,*
*பிற்றை வீழ்மா மணிய புனைநெடும்*
*கூந்தல் நீர்வார் புள்ளி ஆகம்*
*நனைப்ப விருந்தயர் விருப்பினள்*
*வருந்தும் திருந்திழை அரிவைத்*
*தேமொழி நிலையே.*

*நற்றிணை:- (374:5-9)*

---

# சிந்தியா பதில்கள்

✉ **ஜனாதிபதியின் ஐ.நா.உரை எப்படி?**

-எச்.எம்.எம்.பைரூஸ், ஏறாவூர்.

உலகப் பிரச்சினைகளுக்கெல்லாம் திட்டம் சொல்லத் தெரிந்தவர், உள்ளூர்ப் பிரச்சினைக்கு என்ன செய்யப் போகிறார் என்பதைச் சொல்கிறாரில்லையே!

✉ **பெண்கள் பின்னால் ஆண்கள் சுற்றுவது போல ஆண்களைப் பெண்கள் சுற்றுவதில்லையே ஏன்?**

-எஸ்.பாமரன், கண்டி.

அவர்கள் கோயில், குளம், சாமி என்று அதிகமும் சுற்றுவதால், இவர்கள் சுருக்க மாய் அவர்களைச் சுற்றிப் பயனைப் பெற்றுவிட நினைக்கிறார்கள்..... பேசாமல் விடுங்களேன்!

✉ **படித்தவர்கள், பெரியவர்கள் உள்ளிட்ட நம் மக்கள் முதலில் தங்கள் கண்ணெதிரில் நடக்கும் கொலைகளைக்கூட கண்டிப்பதை நிறுத்தினார்கள். பிறகு அந்தக் கொலைகளைத் தவிர்க்க முடியாதவைகளாக மனதுக்குள் நியாயப்படுத்தி, மனித மனத்தின் சாதாரண நல்லுணர்வைக்கூட தொலைத்தார்கள். பின் அதிர்ச்சியூட்டும் விதமாக, 'தடைகளை நீக்கும் கொலைத் திறனில் நாம் மெருகேறி வருவதாக'வும் சந்தோஷப்பட ஆரம்பித்துவிட்டார்கள்... எப்படி இந்தக் கொலைகளை இரசிக்கும் இசைவாக்கம் நடந்தது?**

-வீ.குமார், கொழும்பு - 13.

எல்லாம் விடுதலையின் பேருக்கே வெளிச்சம்! சமீபத்தில் ஜோசியர்கள் பற்றிய ஒரு விவரணப் படம் பார்த்தேன். ஒரு வயதான கிளி ஜோசியர், 'வா ராஜா வா' என்று கூண்டைத் திறந்துவிடுகிறார். கிளி தத்தித் தத்தி வெளியே வருகிறது. அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அட்டைகளிலிருந்து ஒன்றை அலகால் எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டு, கிளி மீண்டும் கூண்டுக்குள் போய்விடுகிறது. கதவை அந்தக் கிழவர் மூடுவதில்லை. கிளியே மெல்லத் தலையை நீட்டி கதவை மூடிக்கொள்கிறது.

✉ **வெங்காயம் அதுக்கு நல்லதென்கிறார்களே?**

-எஸ்.எம்.ஏ.மனோ, ஹட்டன்.

ஆமாம். கிட்ட நெருங்காமல் துரத்தி விடும் என்பதால்!

✉ **தந்தை நடிகர்களில் உங்களுக்கு யாரைப் பிடிக்கும்?**

-வி.புவனப்பிரியா, வவுனியா.

பட்டாளத்துக்காரராயிருந்து 'டெல்லி' என்ற அடைமொழியைச் சேர்த்துக் கொண்டு சென்னைக்குப் பட்டணப் பிரவேசம் செய்தவரை!

✉ **இந்தியாவுடனான டெஸ்டில் ஷேன் வோர்ன் முரளியை முந்தி விடுவாரா?**

-எம்.றிஸ்வான், கொழும்பு - 12.

உலக மட்டையாளர்களைக் கலங்க வைத்த அவரும் அந்தச் சாதனையை வைத்திருக்க வேண்டியவர்தான். ஆனாலும், இறுதி வெற்றி முரளிக்கே! (மீசையையும் மண்ணையும் நினைவில் வர விடாதீர்கள்!)

✉ **மனநோயாளர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

அவர்கள் நகையாடப்பட, புறக் கணிக்கப்படக் கூடாதவர்கள்.ஆனால், அவர்களைத் தேர்தலில் நிறுத்தி, வாக்குப் போட்டு வெல்ல வைப்பதிலெல்லாம் எனக்கு உடன்பாடில்லை.

✉ **ஒரு காலத்தில் உலகத்தையே தன் கைப்பிடிக்குள் வைத்திருந்த இங்கிலாந்து இன்று அமெரிக்காவுக்கு வால் பிடிக்கின்றதே?**

-எம்.எஸ்.ஏ.இப்ராஹிம், ஏறாவூர் - 03.

ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்!

✉ **இன்றைய அரசியல் குறித்த உங்கள் விமர்சனம் என்ன?**

-எம்.ஏ.ஜௌபர், புதியகாத்தான்குடி - 06.


என் விமர்சனம் இருக்கட்டும். விமர்சன ஜாம்பவான்களாகக் காட்டப்படுகிறவர்கள் செய்யும் (எனக்குத் தலை சுற்றும்) அரசியல் விமர்சனச் சமன்பாடு ஒன்று : ஹெல உறுமய பிற்போக்கு சக்திகள். யூ.என்.பி.க்கு ஆதரவாக அவர்களிருந்தால், 'பிற்போக்காளர்களையும் மடக்கி வைத்திருக்கும் முற்போக்குக் கட்சியாக அசத்துகிறது யூ.என்.பி.! ஹெல உறுமய ஐ.ம.சு.'வுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டால், 'பிற்போக்கு சக்திகளைச் சேர்த்துக் கொண்டு நாட்டைப் பாழ்படுத்தக் கூத்தடிக்கிறது ஐ.ம.சு.மு.'கொலைகளில் நல்ல கொலைகளையும் மக்கள் விரோதக் கொலைகளையும் பிரித்தறிந்து பாராட்டத் தெரிந்திருப்பது போன்ற மானுடநேய அரசியல் ஞானம் இதற்கும் தேவை போலிருக்கிறது. என்னை விட்டுவிடுங்கள்!

✉ **நீண்ட நாளைக்குப் பிறகு 'அழகிய தீயே' யில் ரம்பா ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறாரே..... அது பற்றி நீங்கள் எதுவும் சொல்லவில்லையே?**

-வி.அயூரன், கல்லடி.

ம்...ம்..நீண்ட பாவாடையுடனும் வந்ததால் கவனிக்கவில்லை...ஹிஹி!

✉ **காப்புச் செய்யுளுக்கும் காவியத்துக்கும் வித்தியாசம் தெரியாத சோழன் மகளைக் கல்யாணம் செய்திருந்தால் அம்பிகாபதி ஆயுள்**




**முழுவதும் கஷ்டப்பட்டிருப்பான்தானே... காப்புச் செய்யுள் அவனைக் காப்பாற்றியதா, இல்லையா?**

-க.இராகுலன், யாழ்ப்பாணம்.

ஆருக்குத் தெரியும்...துணிச்சலாய் இழுத்துக்கொண்டு போய்க் காந்தருவ மணம் செய்வதை விட்டுவிட்டு, இப்படிப் பாட்டுப் பாடிக் கெஞ்சிக்கொண்டிருப்பவனைக் கட்டத்தான் வேண்டுமா என்று நினைத்தும் அவள் எண்ணிக்கையை மாற்றிச் சொல்லியிருக்கலாம்!

✉ **நிரந்தரத் தீர்வு பற்றிப் பேச தமிழ்த் தரப்பில் சிலர் தயக்கம் காட்டுவது ஏன்?**

-ஏ.மன்மதன், களுவாஞ்சிக்குடி.

அதுதான் புரியவில்லை! சட்டரீதியாக அதிகாரங்களை எழுத்தில் பகிர்ந்து கொள்வதைப் பிற்போடுவதில் உள்ள ஆபத்தை ஏன் விரும்பிக் கேட்கிறார்கள்! இடைக்கால நிர்வாகம் மட்டும்தானா தேவை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு? தனிநாடு பெற முடியும் என்ற நம்பிக்கையைத்தான் பூரணமாக எல்லோரும் நம்புகிறோமா...... குழப்பங்களுக்கு யாரும் விடை தரப்போவதில்லை. நாம் குட்டி ஜோக் ஒன்றைப் பகிர்ந்துகொள்ளலாம் :

விமானத்திலிருந்து குதிப்பதற்குப் பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றில் ஜோன் சேர்ந்தான். முதல் குதிப்புக்காக விமானத்தில் ஏறி மேலே போனான். அவன் குதிக்கப்போகும் நேரத்தில் "நிறுத்து!" என்று கத்தினார் பயிற்சியாளர். "நீ பராசூட்டைக் கட்டிக்கொள்ளவே இல்லை!" என்றார் அவர்.

"பரவாயில்லை, இது பயிற்சிதானே?" என்றான் ஜோன்.

✉ **மேற்கிந்தியாவின் வெற்றி?**

-து.ரொஷாந்தன், கொழும்பு - 12.

வீரர்கள் ஒவ்வொருவரிடமும் வெல்லும் ஆவேசம் துடித்ததைக் காண முடிந்தது. 2007இல் சொந்த மண்ணில் காட்டப்போகும் உற்சாகத்துக்கு அச்சாரமோ இது!

✉ **மறதி மட்டும் மனிதனுக்கு இல்லையென்றால்....?**

-சி.மதிருபன், அன்புவழிபுரம்.

நமக்குப் புதுப் புது எம்.பி.க்கள் கிடைத்துக்கொண்டிருப்பார்கள்! (எந்த எம்.பி.யும் இரண்டாம் முறை தேர்தலில் ஜெயிக்க முடியாது என்பதால்!)

✉ **தன்னை நம்பாதவர்களையும் அந்தக் கடவுள்தானே படைத்தார்?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

நம்பாதவர்களுக்கு ஏது கடவுள்!




**பெ**ரும் பரபரப்பை ஏற்படுத்திய பொடிலைன் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது டெஸ்ட் போட்டி 1932ஆம் வருடம் டிசம்பர் மாதம் 30, 31ஆம் திகதிகளிலும் 1933 வருடம் ஜனவரி மாதம் 2, 3ஆம் திகதிகளிலும் மெல்போர்ன் நகரில் உள்ள மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியைக் கண்டு களிப்பதற்கு 70 ஆயிரம் பார்வையாளர்கள் கூடி இருந்ததாகத் தெரிய வருகின்றது.

இதன்போது துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி



ஹெரல்ட் லாவூட்

தனது முதலாவது இன்னிங்ஸில் 228 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. இரண்டாவது இன்னிங்ஸின்போது டொனால்ட் பிரட்மன் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

பதிலுக்காகத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 169 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 139 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் சிறந்த பந்துவீச்சில் ஈடுபட்ட டபிள்யூ.ஜே.ஓரய்லி முதலாவது இன்னிங்ஸில் 63 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் இரண்டாவது இன்னிங்ஸில் 66 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணிக்கு 111 ஓட்டங்களினால் வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்.

பொடிலைன் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியானது கிரிக்கெட் வரலாற்றிலேயே இடம்பெற்ற மிகவும் மோசமான போட்டி என்று பிரபல விஸ்டன் நூல் குறிப்பிட்டுள்ளது.

இப் போட்டி எடிலேட் நகரில் உள்ள எடிலேட் மைதானத்தில் 1933ஆம் வருடம் ஜனவரி மாதம் 13, 14; 16, 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதன்போது இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளரான ஹெரல்ட் லாவூட் வீசிய பந்துகள் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களின் உடல்களையும் பதம் பார்த்தன.

லாவூட் மின்னல் வேகத்தில் வீசிய பந்தொன்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் பில் அட்புல்லின் நெஞ்சுப் பகுதியில் பட்டதனால் வேதனையால் துடித்த அவரது கையிலிருந்த துடுப்பு நிலத்தில் வீழ்ந்தது.

அத் தருணத்தில் இங்கிலாந்து அணித் தலைவர் டக்ளஸ் ஜாடின் ஹெரல்ட் லாவூட்டை அழைத்து; மிக நல்ல பந்துவீச்சு எனக் கூறியுள்ளார். லாவூட்டின் அடுத்த பந்துவீச்சில் அட்புல்லின் துடுப்பு எகிறிப் போய் வீழ்ந்தது.

இவ்வாறான அச்சுறுத்தல் மிகுந்த பந்துவீச்சுக்கு முகங்கொடுத்த பில் அட்புல் பின்வாங்காமல் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

இதே நேரம் பிரபல துடுப்பாட்ட வீரரான டொனால்ட் பிரட்மனின் உடம்பை குறிவைத்து லாவூட்டும் வோஸும் மாறி, மாறி பந்து வீச்சுக்களில் ஈடுபட்ட போதிலும் பிரட்மன் 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இப் போட்டியின்போது இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 341 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 417 ஓட்டங்களையும் பெற்றது. அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 222 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 193 ஓட்டங்களையும் மாத்திரமே பெற்றுக்கொண்டது.

இப் போட்டியில் இங்கிலாந்து அணி 338 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களது இரக்கமற்ற பந்துவீச்சுக் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு பாதிக்கப்படுமளவுக்கு முரண்பாடுகள் தோன்றின. இப் பிரச்சினையானது அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திலும் கூட எதிரொலித்தது.

இப் போட்டி தொடர்பில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் அட்புல் 'இரு அணிகளில் ஓர் அணி உரிய முறையில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டது. மற்றைய அணி உரிய முறையிலான கிரிக்கெட் விளையாட்டை விளையாடவில்லை' என நாசூக்காகத் தெரிவித்திருந்தார்.

இறுதியில் ஹெரல்ட் லாவூட் அவுஸ்திரேலியா அணி வீரர்களிடம் மன்னிப்புக் கேட்டதுடன், அதன் பின்னர்



அதிகூடிய ஓட்டங்களால் வெற்றி பெற்ற டெஸ்ட் போட்டிக்குத் தலைமை தாங்கிய இங்கிலாந்து அணித் தலைவர் ஏ.பி.எவ். சேப்மன்

இங்கிலாந்து அணி சார்பில் விளையாடுவதை நிராகரித்துவிட்டார்.

அவுஸ்திரேலிய அணி வீரர்களைத் துன்புறுத்தி பந்துவீச்சில் ஈடுபட்ட ஹெரல்ட் லாவூட் 1950ஆம் வருடம் அவுஸ்திரேலிய நாட்டில் குடியேறினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவர் 1995 ஜூலை மாதம் 22ஆம் திகதி சிட்னியில் மரணமானார். 1904ஆம் வருடம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நொடின் ஹெம்ஷயர். நன்காகேட் பகுதியில் பிறந்த ஹெரல்ட் லாவூட் நொடின் ஹெம் ஷயர் மாநில அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியுள்ளார்.

பொடிலைன் சம்பவம் காரணமாக விரக்தியுற்ற நிலையில் இடைநடுவில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டில் இருந்து விலகிக்கொண்ட இவர், இங்கிலாந்து அணி, சார்பாக 21 போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றியுள்ளார். 1926 முதல் 1933வரையிலான காலப் பகுதிக்குள் 78 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். பொடிலைன் போட்டிகளின்போது மாத்திரம் அவர் 33 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத் தக்கது.

**-மைந்தன்.**

---

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

## ஆதிக்கம் 5: பிறந்த கிழமை புதன்

பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்னும் அளவிற்குச் சிறப்பு மிக்கது புதன்கிழமை. இப்படிப்பட்ட ஒரு கிழமையில் நீங்கள் அவதரித்தது நீங்கள் செய்த பாக்கியமே. அத்தோடு பல சாதனைகளுக்குக் காரணமாகத் திகழும் ஆதிக்க எண் 5இல் பிறந்திருக்கின்ற நீங்கள் எதற்கெடுத்தாலும் பிறரை மதிக்காமல் பேசுவீர்கள். எதற்கெடுத்தாலும் குறை கண்டுபிடித்துக்கொண்டே இருப்பீர்கள். என்றாலும் பிறகு தவறை உணர்ந்துகொள்வீர்கள். பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சாதகமான செயல்களை செய்ய முயற்சிப்பீர்கள்.

நூதனமான ஆடைகளையும் அழகான நுட்பமான ஆபரணங்களையும் தயாரிப்போர் இந்த எண் 5 ஆதிக்கக்காரர்களைப் பயன்படுத்துவார்களானால் அதனால் கூடிய முன்னேற்றத்தைக் காண்பார்கள் என்பது உறுதி. தரிசாகக் கிடக்கும் நிலங்களைச் சிறந்த விளைச்சல் தரக்கூடிய நிலங்களாக மாற்றக்கூடிய திறன் உடையவர்தான் நீங்கள். ஒன்றுக்கும் உதவாத நிலங்களைச் செம்மைப்படுத்தி பயிர் பச்சைகள் செய்து முன்னேற்றம் அடைவதில் கெட்டிக்காரர்களாக நீங்கள் இருப்பீர்கள்.

தொழிற்சாலைகள் பலவற்றைப் பெரிய அளவில் அமைத்து அதனைத் திறம்படவும் இலாபகரமாகவும் நிர்வகிப்பதில் அதிகத் திறன் உடையவர்களாகத் திகழ்வீர்கள். குழந்தைகளை நேசிக்காதவன் இதயம் இருந்தும் பிணத்திற்குச் சமமானவன்! ஆனால், நீங்கள் நல்ல இதயம் கொண்டவராக இருப்பதனால் குழந்தைகள் மீது அதிக விருப்பமும் அவர்கள் மீது அதிக அன்பும் கொண்டவர்களாக இருப்பீர்கள்.

அதிகாரத்தை எப்பொழுதும் பிழையான வழியில் பயன்படுத்தாமல் அதிகாரத்தைச் சரியான வழியில் பயன்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டவர்களாக இருப்பீர்கள். காரியத்தைச் செய்வதில் கண்டிப்பு மிக்கவர்களாகவும் இருப்பீர்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்பதில் உறுதியாக இருப்பீர்கள். அந்தளவிற்குப் பிடிவாதக்காரர்களாக இருப்பீர்கள். தான் செய்வதுதான் சரி; தான் சொல்லுவதுதான் சரி என்பதை நிறுவுவதற்குப் பெரிதும் முயற்சி எடுப்பீர்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு" என்பது திருவள்ளுவரின் வாக்கு. இதற்கேற்ப தனக்கு உதவி செய்வதவர்களை ஒருபோதுமே மறக்கமாட்டீர்கள். அவர்களுக்குக் கைமாறு செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பினையும் சந்தர்ப்பத்தினையும் எதிர்பார்த்திருப்பீர்கள். இதனால் முடியுமான வரை கூடுதலாக உதவி செய்யும் மனப்பாங்கு உள்ளவர்தான் நீங்கள்.

உங்களால் பலர் உதவி பெற்றுப் பயன் பெறுவார்கள். துன்பத்தை எதிர்நோக்குபவர்களுக்கு மனம் உவந்து அந்தத் துன்பத்தை நீக்க முயற்சி செய்வீர்கள். நீங்கள் உங்கள் உடலை வருத்தி உழைக்க வேண்டும் என்ற தேவையோ அல்லது அவசியமோ இல்லை. இலகுவான முறையில் பல வழிகளில் உங்கள் கைக்குப் பணம் வந்த வண்ணம் இருக்கும். உங்களது 28 வயது முதல் வருமானம் படிப்படியாக உயர்ந்து செல்லும். 29, 32, 35, 42 வயது வரை வருமானம் மிகச் சிறப்பாக இருக்கும்.

இதனால் உங்களுடைய அதிகமான தேவைகள் நிறைவேறிவிடும்.

43 வயது ஆரம்பத்திலிருந்து 45, 48, 52 வயது வரை உங்கள் வருமானம் சமநிலையில்தான் இருக்கும். 53 வயதில் ஒரு பஸ் வாங்கி அதன் மூலம் அதிக வருமானத்தைப் பெறுவீர்கள். இதனால் ஆயுள் வரை கஷ்டமோ நஷ்டமோ இல்லாத வகையில் சந்தோசமாக வாழ்வீர்கள். 47 வயதில் உங்கள் தேக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுக் குணமடைவீர்கள்.

உங்கள் உயிருக்குத் தீமையில்லை. இதன் பின்னர் எந்த விதமான ஆபத்துக்களும் உங்களை வந்தடையாது.

38 வயதில் கண் தொடர்பான நோய் ஏற்படும். 44 வயதில் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் ஏற்படும். இந்த நோய்கள் சிகிச்சை பெற்றதும் சுகமாகிவிடும். இதன் பிறகு உங்கள் தேக ஆரோக்கியம் பாதிப்படையாது. 38 வயது தொடக்கம் 41 வயது வரை பின்வரும் உணவுகளை அதிகம் உண்ணுங்கள். எலுமிச்சம்பழம், கற்கண்டு, பசுநெய், புளி, மாம்பழம், முருங்கைக்கீரை, பப்பாளிப்பழம், தக்காளிப்பழம்.

44 வயது தொடக்கம் 47 வயது வரை அப்பளம், அரைக்கீரை, கத்தரிக்காய், கோதுமை, சர்க்கரை, சுண்டைக்காய், முருங்கைக்காய், சுறாமீன், நெய், வாழைப்பூ, வாழைப்பழம், வெங்காயம் போன்றவற்றை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். உங்களின் அதிர்ஷ்ட எண் 5, 14, 23 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் புதன்கிழமையில் அமைந்தால் அதிர்ஷ்டம் பன்மடங்காகும்.

உங்களுடைய ஆடையில் அதிர்ஷ்ட நிறம் சந்தன நிறம். வைடூரியம் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். ஆகவே புதன்கிழமையினையும் ஆதிக்க எண் 5ஐயும் கொண்ட நீங்கள் வாழ்வில் சிறப்புற என் நல்லாசிகள்.

புதன் பொன்னுக்கு மேலான தினம். இதனில் எண் ஐந்தில் யோகம். அதனால் வாழ்வில் சிறப்பு அதிகம். இதனை மனத்தில் கொள்ள கிடைக்கும் சுகம்.

**அடுத்து ஆதிக்கம் 5 வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்**

---

# பொங்கு தமிழ் நிகழ்ச்சி பற்றி....

## வீ. ஆனந்தசங்கரி

**எ**மது மண்ணில் தமிழ் மக்களின் விடுதலை என்ற பெயரில், கலைக்கப்பட்ட ஈரோஸ் முதல் இன்று கருணா அணி வரை, சகல ஆயுத இயக்கங்களும் இதுவரை கொன்று குவித்த எமது தமிழ் உறவுகளின் எண்ணிக்கை இலங்கை இராணுவம் செய்துவிட்ட கொலைகளையும் விஞ்சி நிற்கின்றது. இதில் கல்விமான்கள், மனித உரிமைவாதிகள், நீதி கேட்ட பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள், சக போராளிகள், தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் அடங்குவர். இன்றும் சமாதான சூழலிலும் ஒவ்வொரு நாளும், ஈழமண்ணில் தமிழ்ப் பெண்கள் தமிழர்களாலேயே விதவைகள் ஆக்கப்பட்டு கொண்டுதான் இருக்கின்றார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளின் தகப்பனோ தாயோ அரசியல் காரணங்களுக்காக சுட்டுக் கொல்லப்படும் கொடுமையான காட்சிகளைக் கண்டும் ஏன் எவரும் இன்னும் பொங்கி எழவில்லை?

தமது அமைப்பின் தலைவரான சிறீசபாரத்தினத்தை இழந்த ரெலோ அடைக்கலநாதனும் மௌனித்துப் போனார். தனது தலைவர் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபாவையும் சக தோழர்களையும் ஒரே நாளில் இழந்த சுரேஸ் பிரேமச்சந்திரனும் பயத்தில் கூனிக் குறுகிப் போய்விட்டார். எமது தலைவர், அமிர்தலிங்கத்தை இழந்த- கவரிமான் என வாழ்ந்து கொண்டதாக நினைத்த சம்பந்தரும், சேனைத்தளபதியாக காட்டிக்கொண்ட சேனாதிராஜாவும் கூட களை இழந்த கவரிமான்களாக ஆக்கப்பட்டதும் துவக்கினால் அன்றி சுய விருப்பினால் அல்ல. தங்கள் தலைவர்களை விடுதலைப் புலிகளிடம் இழந்தவர்கள், தம் தலைவர்களிற்கு போலி அஞ்சலி செலுத்திக்கொண்டு, உங்களுக்கும் போலி வேடம் போட்டு, தமக்கும் போலியாக இருப்பதை விட, தம் கட்சிகளைக் கலைத்து விட்டு விடுதலைப் புலிகளுடன் சேர்வதுவே மேல். வெளிநாடு போல் வசதிகள் அற்ற யாழ். மாணவர்களின் கல்வி வசதிக்கு விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவால் பூட்டப்பட்ட யாழ். நூலகத்தைத் திறக்கக் கோரி எந்த மாணவரும் பொங்கி எழவில்லை. யாழ். நூலகத்தை திறந்துவிடக் கோரிக் குரல் கொடுத்தாலும் அதுவும் நானாகத்தான் இருக்கும். இந்த நிலையில் புலம் பெயர்ந்த நாட்டில் நாம் பொங்கித்தான் என்ன பயன்? தமிழனைத் தமிழன் இரத்த வெள்ளத்தில் கோழைத்தனமாகக் கொல்வதை நிறுத்த புலம் பெயர்ந்த தமிழர்கள் பொங்கி எழ வேண்டும். இதற்கு கல்விமான்கள், மனித உரிமைவாதிகள், தரம் கொண்ட பத்திரிகைகள், வானொலிகள் முன்வர வேண்டும். இந்தச் சமூகக் கடமை எம் அனைவருக்கும் உண்டு. சொந்த மண்ணில், உயிர் வாழும் உரிமை மறுக்கப்பட்டு, வெறும் உரிமைகளுக்காக மட்டும் பொங்கி என்ன பயன்? யாழ். மண்ணிலிருந்து விரட்டப்பட்ட, பெரும்பாலும் ஏழைத் தையற் தொழிலாளிகளான தமிழ் பேசும் முஸ்லீம்களை மீளக் குடியமர்த்தாத, "தமிழ் தேசியக் கோஷம்" முழுமை பெறமாட்டாது என்பதும் கசப்பான உண்மை. அன்று பத்மநாபாவின் கொலையின்போது, மயிரிழையில் உயிர் தப்பிய பிரேமச்சந்திரன் இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இணைந்து, துரோகிப்




வீ. ஆனந்தசங்கரி

பட்டம் தியாகியாக மாறிய விந்தையும் எமது மண்ணில்தான். அவரும் தமிழ்த் தேசியம் பற்றிய போதனையில் இன்று உலா வருகின்றார். அமரர் அமிர்தலிங்கத்துடன் இறக்காது, பிந்தி இறந்து கொண்டதால் அமரர் சிவசிதம்பரம் ஒரு தியாகி என்ற பட்டத்துடன் அமரரானதும் கடவுள் விட்ட வழி என்பதில் அமிரை விட சிவா அதிர்ஷ்டசாலிதான் மனித உரிமைகளை மதிக்கும் முன்னோடி நாடான கனடிய அரசு எமது மண்ணில் சமாதானம் மட்டுமல்ல, மனித உரிமைகளை மதிக்க, எமது மண்ணில் மரணித்துக்கொண்டிருக்கும் மனித உரிமைகளை மீள நிலைநாட்ட, தமிழ் மக்களுக்கு கற்றுக் கொடுத்து அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும். வடக்கு - கிழக்கு என்ற இணைந்த தாயகத்தில், இந்துக்களும் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், துப்பாக்கிப் பயம் இன்றி, முன்பு போல் இணைந்து பொங்கும் நாள்தான் எமது இனத்தின் உண்மையான பொங்கு தமிழ் ஆக இருக்க முடியுமே அன்றி, எல்லோரும் நடிக்கின்றார்களே என்று வானொலிகளும், பத்திரிகைகளும், மாணவர்களும், மக்களும், நடிக்கப் புறப்பட்டுவிட்டால், எங்கள் ஒவ்வொருவரின் மரண ஓலத்திலும் இன்னொரு தமிழன் பொங்கிக்கொண்டுதான் இருப்பான். இது நியாயம்தானா? தமிழ் மக்கள் உங்கள் மனச்சாட்சியின்படியே தீர்மானித்துக்கொள்ளுங்கள். தாய்மண்ணில் மௌனமாக அழுதுகொண்டிருக்கும் உங்கள் உறவுகளின் அடிப்படை உரிமைகளுக்காகவும் பொங்கி எழுங்கள். தாய்மண்ணிலும், வெளிநாடுகளிலும் எமது மக்களுக்கு மறுக்கப்பட்டுவரும் ஜனநாயக உரிமைகள், அரசினால் மட்டுமல்ல, தமிழ் இயக்கங்களினாலும் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது ஆணித்தரமான வேண்டுகோள்.தாங்கள் சொன்னதைச் செய்யத்தான் கூட்டமைப்பினர் இருக்கின்றனர் என்ற அன்ரன் பாலசிங்கத்தின் கூற்றை மறுத்துரைத்த ஒரே ஒரு தமிழ் அரசியல்வாதியும் நான்தான். எனது முன்னைநாள் சகாக்கள் சகித்துக்கொண்டு மௌனமாக என்னிடம் அழுததும் எனக்குத்தான் தெரியும். நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்கெஹெம், பாராளுமன்ற பார்வையாளர் வரிசையில் வைத்து இனவாத சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரால் அவமானப்படுத்தப்பட்டபோது, அதை மறுத்துரைத்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் நான் ஒருவனே. தங்கள் பதவிகளைத் தக்கவைப்பதற்காக மட்டும் மௌனமான ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஒவ்வொரு தலைவர்களையும் விட நான் சர்ச்சைக்குரியவனாக இருக்கலாம். "ஆமா" போடுவதுதான் தலைவர்களின் வேலை அல்ல, தட்டிக் கேட்பதுவும் தலைமைத்துவக் கடமைகளில் ஒன்று. உண்மைகள் உண்மைகளாக இருக்கும்போது சுடத்தானே செய்யும். தலைவர்களுக்கே இந்தக் கதியென்றால், மக்கள் மந்தைக் கூட்டம் அல்ல என்பதை மறுத்துரைப்பது யார்?எனது அரசியல் நிலைப்பாடு காரணமாக என்னில் அக்கறை கொண்ட அன்பர்கள் என்னையும் ஊரோடு ஒத்து ஓடும்படி எனக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கின்றார்கள்தான். முன்னாள் ஆயுதத் இயக்க தலைவர்கள் சிலரும், எமது மூத்த தலைவர்களும், மாணவர்களும், மக்களும் பத்திரிகைகளும் பயத்தில் ஊரோடு ஒத்து ஓடுகின்றார்கள் என்பதற்காக நானும் ஏன் அவர்களுடன் பயத்தில் ஓட வேண்டும்? ஜனநாயகத்தில் மக்கள்தான் எஜமானர்களே அன்றி துப்பாக்கிகள் அல்ல என்பது தான் அன்றும், இன்றும், என்றும் எனது நிலைப்பாடாகும். சரியைசரி என்றும் பிழையைப் பிழை என்றும் கூறும் மானசீக உரிமையை இழந்து போலித் தலைவர்கள் போல் உயிர்வாழ விரும்பவும் இல்லை.

தமிழர்களே இவற்றுக்கெல்லாம் நீங்கள் என்று பொங்கி எழுகின்றீர்களோ அன்றுதான் நானும் உங்களோடு சேர்ந்து பொங்கு தமிழுக்காய்க் குரல் கொடுப்பேன்.

*நன்றி:-* www. Thenee.Com

“மாஜிக் தந்திரங்கள்” குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

பிறகு வெட்டாத புதிய சீட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து, பலகையின் மேல் வைத்து, அளவுகோலை கோட்டின் ஓரமாக வைத்து புதிய சவர பிளேடின் முனையினால் இலேசாக அதாவது சீட்டின் கனத்தில் சரிபாதி அளவு அறும்படியாகக் கீறி இடது பக்க மேல் நுனியில் பிளேடைக் கொண்டு, கனத்தை இரண்டாகப் பிளந்து அந்த இடது பகுதியைத் தனியே எடுத்துவிட வேண்டும். இப்படி எடுக்கப்பட்ட சீட்டின் மேல் பகுதியில் இடது பக்கக் குறுக்கு இடம் வெண்மையாகவும் வலது பகுதியில் அச்சிட்ட சீட்டின் குறியும் தென்படும்.

வெட்டி, அட்டையை இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஒரு துண்டை எடுத்து ஒரு பகுதி பிரிக்கப்பட்ட சீட்டின் வெண்ணிறப் பகுதியில் மட்டமாக வைத்துப் பார்த்தால் அந்த சீட்டின் வலது பக்கத்தில் கிளாவர் 5உம் இடது பக்கத்தில் அது எந்தவகை சீட்டோ அந்த சீட்டின் அடையாளமும் தென்படும். இதை அப்படியே வைத்துவிட வேண்டும்.

ஒரு சிறிய கிண்ணத்தில் ஒரு ரூபாயெடை வெண்ணிறமான பிசினைப் போட்டு, அது ஊறும் அளவிற்கு தண்ணீர் விட்டு மூடி ஓர் இடத்தில் வைத்துவிட வேண்டும்.

பிசின் முழுவதும் தண்ணீரில் கரைந்து அது தடவும் அளவிற்கு பதமானவுடன் சீட்டுகளையும், பலகையையும் எடுத்து வைத்துக்கொண்டு ஒரே நம்பர் உள்ள வெட்டிய சீட்டு ஒன்றை எடுத்து அதை திருப்பிப் போட்டு, பின்பக்கமாகப் பசையை நன்றாகத் தடவி பாதியளவு பெயர்த்து எடுக்கப்பட்ட முழுச் சீட்டிலுள்ள வெண்ணிறப் பகுதியில் இந்தத் துண்டுப் பகுதியை சமமாக ஒரே மாதிரி இணைந்திருக்கும்படி சுத்தமாக ஒட்டிவிட வேண்டும். வெளியே வந்திருக்கக் கூடாது. பசை வெளியே வந்திருந்தால் சுத்தமான துணியில் ஒரு பகுதியை சிறிதளவு தண்ணீரில் நனைத்து பசையைச் சுத்தம் செய்துவிட வேண்டும்.

இப்போது இந்தக் கார்டில் இடது பக்கம் கிளாவர் 5 உம், வலது பகுதியில் வேறு ஏதாவது ஒரு நம்பரும் இருக்கும். இந்த விதமாக எல்லாச் சீட்டுகளுக்கும் ஒட்டி நன்றாகக் காய்ந்தபின் ஒன்றாக அடுக்கி, மேலும் கீழும் அட்டை வைத்து மேலே பளு ஏற்றி வைத்துவிட்டால் எல்லாச் சீட்டுகளும் ஒரே விதமாக படிமானமாகிவிடும்.

இதை எடுத்து நன்றாகக் குலுக்கிவிட்டு, இடமிருந்து வலமாக சீட்டுகளை விசிறி போல விரித்தால் எல்லாச் சீட்டுகளும் கிளாவர் 5ஆம் நம்பர் உள்ளதாக இருக்கும். இவற்றை ஒன்றாகச் சேர்த்துவிட்டு வலது பக்கமிருந்து இடது பக்கமாக சீட்டுகளை விசிறி போல விரித்துப் பிடித்தால், புதிய சீட்டுக் கட்டு போல பல வகையான சீட்டுகள் தோன்றும்.

காட்சி ஆரம்பிக்கும் சமயம் காட்சியாளர் சபைக்கு வந்து மந்திரக் கோலை ஆட்டிவிட்டு மேசை அருகே சென்று இரண்டாவதாக வைக்கப்பட்ட நல்ல சீட்டுக் கட்டைக் கையில் எடுத்து வந்து அதைச் சபையோரிடம் காண்பித்து விட்டு, அதைக் கையில் கொண்டுபோய் மேசை மேல் வைத்துவிட்டு ஓரத்திலுள்ள ஸ்ரூலை எடுத்து வந்து மேசையின் மேல் முன்பகுதியில் போட்டுவிட்டு, மறுபடி மேசை அருகில் சென்று புதிய சீட்டுக் கட்டின் பக்கமுள்ள கிளாவர் 5 ஒட்டப்பட்ட சீட்டுகள் அடங்கிய சீட்டுக் கட்டை எடுத்து வந்து அதை ஒருதரம் நன்றாகக் கலப்பது போல, கலந்துவிட்டு ஸ்ரூலின் மேல் வைத்து கறுப்புக் கைக் குட்டையால் மூடி, மந்திரக்கோலைக் கொண்டு மந்திரம் போடுவது போல நடித்து, சீட்டுக் கட்டை எடுத்துக் குலுக்கி கையில் பிடித்து வலது பக்கமிருந்து இடது பக்கமாக சீட்டை விரித்துக் காண்பிக்க அதில் பல வகை சீட்டுகள் இருப்பதை சபையோர் காண்பார்கள்.

உடனே சீட்டை ஒன்று சேர்த்து ஒருதரம் கலக்கி, மந்திரக்கோலைக் கொண்டு சீட்டுக்கு மந்திரம் போட்டு, சீட்டுக் கட்டை இடது பக்கமிருந்து வலது பக்கமாக விசிறி போல விரித்தால், அவ்வளவு சீட்டும் கிளாவர் 5ஆகத் தோன்றும். வேறு எந்த நம்பரோ, ஜாதியோ இதில் இருக்காது.

உடனே ஒன்று சேர்த்து, வலது பக்கமிருந்து இடது பக்கமாக விரித்தால் பல ஜாதி சீட்டுகள் தோன்றும். உடனே சீட்டுக்கட்டை மேசை மேல் வைத்துவிட வேண்டும். இதைக் காணும் சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

*குறிப்பு* :- சீட்டுகளை வெட்டி ஒட்டும் வேலை வெகு சுத்தமாக இருக்க வேண்டும். எக் காரணம் கொண்டும் இந் தச் சீட்டுக்கட்டை சபையோரிடம் கொடுக்கக் கூடாது. சீட்டுக் கட்டில் எந்தப் பக்கம் கிளாவர் 5 இருக்கிறது. என்பதை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். மேசை மீதிருந்து சீட்டுக் கட்டை எடுக்கும்போது புதிய சீட்டுக் கட்டை எடுத்துவிடக் கூடாது.

## துண்டு, துண்டாக அறுத்த நூலை நீளமாக வரச் செய்தல்

இந்தக் காட்சியை நடத்த இரண்டு தகரக் குழாய்கள் தயாரிக்க வேண்டும். சுமார் 18 செ.மீ. உயரம், 7 செ.மீ. குறுக்களவுள்ள ஒரு குவளை தயார் செய்ய வேண்டும். இது பால் கறக்கும் குவளை போல இருக்க வேண்டும். ஆனால் வாய் விளிம்பு மடக்கப்படாமல் கூர்மையாகவே இருக்க வேண்டும்.

இதே போல மற்றொரு குழாய் தயாரிக்க வேண்டும். இது முதலில் தயாரிக்கப்பட்ட குவளையினுள் தளர்ச்சியாகப் போய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். இதையும் ஒரு குவளை போலவே அடித் தகடு போடப்பட்டதாகத் தயாரிக்க வேண்டும். ஆனால், இரண்டாவது குவளையின் வாய் விளிப்பு சற்று வெளியே வளைத்து விடப்பட்டதாக இருக்க வேண்டும். இரண்டு மி.மீ. கனமே வளைந்திருக்க வேண்டும். முதல் குவளையினுள் இரண்டாவது குவளையை இறக்கினால், அது முழுவதும் உள்ளே இறங்கிவிடாமல் விளிம்பின் தடையில் தட்டி நிற்க வேண்டும். இந்த விதமாக இரண்டு குவளைகளையும் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தக் காட்சியை நடத்துவதற்கு உல்லன் நூல் மிகவும் நல்லது. பார்வையாக இருக்கும்.

இந்தக் காட்சிக்கு 40 மீற்றர் வெள்ளை நூல் அல்லது கலர் நூல் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். தேவையானால் மேலும் 10 மீற்றர் நீளம் வாங்கலாம். இந்த நூலை சரி சமமாக இரண்டு துண்டுகளாக வெட்டி, ஒரு சிறிய அட்டையில் தனித் தனியே சுற்றி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நூலைச் சுற்றும் இரண்டு அட்டைகளும் ஒரே நிறத்தில் ஒரே அளவாக இருக்க வேண்டும். இவற்றை தயாரித்து வைத்துக்கொண்டு ஒரு மெல்லிய அட்டை அதாவது வளையக்கூடிய அட்டை எடுத்து, இரண்டு குவளைக்கும் அட்டைக்கும் 4மி.மீ. இருக்கும்படியாக சுற்றி அட்டைக் குழாய் ஒன்று தயார் செய்ய வேண்டும்.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

ஐயா வணக்கம்! அம்மா வணக்கம்! வணக்கம், வணக்கமுங்கோ! என்ன பாக்கிறியள்? வலு அன்பாய் பண்பாகக் குழையிறனெண்டோ? அது பாருங்கோ, நீங்கள் யார்? சாதாரண மனிசரே? வாக்காளப் பெருமக்களெல்லோ! உங்கட கையில வாக்கிருக்கேக்க நான் அன்பாய் ஒழுகி வழியாட்டில் எப்பிடி எம்.பி.யாகிறது.

ஏதோ ஒரு தினுசாப் பேசிறனெண்டு நினைக்கிறியளே? இவ்வளவு காலமும் வாக்கு இருந்ததுதானே எங்களிட்ட; அப்பவெல்லாம் ஏறெடுத்தும் பாக்காதவர் இப்பவேன் வந்து வாலாட்டிக்கொண்டு நிக்கிறாரெண்டு ஆச்சரியப்படுறியளே? அப்பவெல்லாம் உங்களிட்ட வாக்கு இருந்தாலென்ன, சாக்கு இருந்தாலென்ன? எம்.பி.யாகிறதுக்கு உங்கட வாக்கையே நம்பியிருந்தனாங்கள்? நீங்கள் பொத்திப் பொத்தி வைச்சிருக்கிற ஒற்றை வாக்கை வைச்சு இத்தினை லட்சம் விருப்பு வாக்குகளைச் சம்பாதிச்சு சீற் பிடிச்சிருக்க ஏலுமே? எங்களைப் பாராளுமன்றப் படியேத்தி வைச்சது உங்கட வாக்குகளில்லைக் கண்டியளோ! நாங்கள் போடுவிச்ச கள்ள வாக்குகள்தான்! முறைப்படி நாங்கள், எங்களுக்கு வாக்களிச்சவைக்கு நன்றிக்கடனா ஏதேனும் செய்ய வேணுமெண்டால் சுடலையில போய் நிண்டு செத்த மனிசரெல்லாருக்கும் ஒவ்வொரு சிலை கட்டி வைக்க வேணும்! ஏனெண்டுறியளோ! செத்தாக்களின்ர வாக்குகள்தானே எங்களுக்குச் செல்வாக்காய் அமைஞ்சது. மற்றது உந்த வெளிநாட்டுக்குப் போன சனங்களுக்கும் ஏதேனும் உளமாற நன்றி சொல்லத்தான் வேணும். அதுக்கு வேணுமெண்டால் பாராளுமன்றக் கணக்கில வெளிநாடு போய்வாற வேளையில கொஞ்சம் தலையக் காட்டி, ஒரு கையை ஆட்டிப் போட்டு பி.பி.சி. அக்காமரைப் பிடிச்சு ஒரு பேட்டியும் குடுத்திட்டு வரலாம். வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்திருக்கிற எங்கட சனத்தின்ர வாக்குகளை இங்கையிருக்கிற பால்குடியளைக் கொண்டு போடுவிச்ச கெட்டித்தனம் எங்கடயெல்லோ! உண்மை அதுவாயிருக்க எப்பிடி உங்களுக்கு நன்றி காட்டிறது? உண்மையில உங்கட உங்கட வாக்குகள யார் யாருக்குப் போட்டியளெண்டு யார் கண்டது? ஆனால் பாருங்கோ, எங்கட செத்த வாக்கும், இல்லாத வாக்கும் சொன்னபடி செய்யும். அரக்காது. அங்க வாக்களிக்கிறதத் தீர்மானிக்க இன்னொரு சொந்த மூளை இல்லையே பாருங்கோ. எங்கட மூளைதான் அந்த வாக்குகள யாருக்குப் போடுறதெண்டு தீமானிச்சது. ஆனால் இங்க நீங்கள் அப்பிடியே பகுத்தறிவெண்டு ஒண்டைப் புகுத்தி வைச்சுக்கொண்டு, வாக்களிக்கிறது யாருக்கெண்டத நீங்களாயெல்லோ தீர்மானிச்சுக்கொள்ளுறியள். எங்களக் காணக்க உங்களுக்குத்தான் வாக்களிப்பமெண்டு ஒரு ஒப்புக்காகச் சொன்னாலும், பின்னால யாருக்கு வாக்களிச்சியளெண்டு யாருக்குத் தெரியும்?

அதை விடப் பாருங்கோ, உந்த ஒரேயொரு வாக்கை வாங்க உங்களுக்கு நாங்கள் எத்தினை கதையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கு. உணர்ச்சியைக் கொட்டிக் கத்த வேண்டியிருக்கு. தேர்தல் முடியும் வரை பாத்தும் பாராமல் அள்ளியள்ளிச் செலவளிச்சுத் தள்ள வேண்டியிருக்கு. இதுக்குப் பிறகு, எம்.பி.யா வந்தும் உங்களுக்காக முறியிறதுக்கு எங்களுக்கென்ன விதி? அதுதான் பாருங்கோ, நாங்கள் தேர்தல் முடிஞ்ச கையோட உங்களை மறந்திடுறது. நீங்கள் எட்டத்தில வாறதாய் அறிஞ்சவுடனயே வாச்மேனிட்ட ‘ஐயா ஊரில இல்லை’ யெண்டு சொல்லச் சொல்லிப் போடுறது. தச்சமயம் இடக்கு முடக்காச் சந்திச்சாலும், அவசர வேலையாப் போறதாக் காட்டிக்கொண்டு கழண்டிடுறது. கதை பேச்சு வைச்சுக்கொண்டால் காரியம் செய்து குடுக்க வேண்டி வந்திடுமெண்டிட்டு முறைப்பாய் முகத்தை வைச்சுக்கொண்டு திரும்பி நிக்கிறது.

இப்பிடியெல்லாம் உங்கள நடத்திற நாங்கள் 'என்ன வாக்காளப் பெருமக்களே' எண்டு வழிஞ்சு விழுகிறம் எண்டு யோசிக்கிறியள் போல. இல்லைப் பாருங்கோ. இது வேற சமாச்சாரம். அதாவது கண்டியளோ, இனிமேல் தேர்தலில ஐடென்ரி கார்ட்டைக் காட்டித்தான் வாக்களிக்க வேணுமெண்டதாச் சட்ட மசோதாவொண்டக் கொண்டுவாறாங்களெல்லே. அதுதான் வயித்தைக் கலக்குது எங்களுக்கு. ஐடென்ரிக் கார்ட்டை அமுல்படுத்தினால் எங்கட கள்ள வோட்டெல்லாம் அடிபட்டுப் போயிடுமெல்லே. செத்தவையும் வெளிநாடு போனவையும் நேரில வரப்போகினமே எங்களப் பாராளுமன்றம் அனுப்பவெண்டு? அப்பிடியொரு நிலமை வந்த உங்களத் தவிர வேற கதி எங்களுக்கில்லை. அதுதான், உங்களக் கொஞ்சம் கூல் பண்ணி வைக்க வேணுமெல்லோ! ஏனெண்டால், எனி உங்கட கையிலதான் வாக்கு இருக்கப் போகுது. அதால...ஐயா வணக்கம்! அம்மா வணக்கம்! எண்டபடி உங்களிட்ட வருவம்...கவனியுங்கோ.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(30.09.2004 தொடங்கி 06.10.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், வியாழன், புதன், செவ்வாய், துலாம் - கேது, மேடம் - இராகு, கார்க்கடகம் - சனி, சிங்கம் - வெள்ளி
சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் பலிதம், இனசன நன்மை, பிரயாண மிகுதி, செலவு மிகுதி, பெரியோர் சகாயம், மனக் குறை நீங்கும், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி வீழ்ச்சி, புதிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நன்மை, காரியானுகூலம், உறவினர் உதவி, மறைமுக எதிர்ப்பு, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மாற்றம், செலவு மிகுதி, புதிய தொழில் முயற்சி, காரியக் கேடு, அன்னியர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் தொல்லை, மணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சை வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மந்தம், பண வரவு குறைவு, தேக சுகம் பாதிப்பு, உறவினர் உதவி, வீண் குறை கேட்டல், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் மேன்மை, பண வரவு, கௌரவம், வீடு மனை சேரல், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கலக்கம், பெரியோர் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிரமம், பிரயாண மிகுதி, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், பரீட்சையில் தடை, வியாபாரிகள், விவசாயிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் கலக்கம், உறவினர் உதவி, இனசன மகிழ்ச்சி, பெரியோர் பகை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிரமம், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் மேன்மை, உயர்ந்த ஸ்தானம், இனசன மகிழ்ச்சி, பெரியோர் சகாயம், உத்தியோகச் சிறப்பு, மனக் கிலேசம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவாசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம் :- 03

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை, பண வரவு தடை, மறைமுக எதிர்ப்பு, குடும்பக் கவலை, உத்தியோக நன்மை, பதவி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் கலக்கம், பண விரயம், புதிய தொழில் முயற்சி, அன்னியர் சகாயம், உத்தியோகக் கவலை, பதவி இழப்பு, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04


**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மகிழ்ச்சி, காரியானுகூலம், இனசன கஷ்டம், வீண் குறை கேட்டல், கடன்படல், உத்தியோகச் சிரமம், மாணவர் கல்வி உயர்ச்சி, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழிலின்மை, கௌரவம், புதிய தொழில் முயற்சி, பணக் கஷ்டம், நண்பர்கள் உதவி, உத்தியோகச் சிரமம், பிரயாண மிகுதி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)

# தவிப்பு

பரகுவே நாட்டின் யுகுவா பொலன் எனும் இடத்தில் ஆகஸ்ட் 01ஆம் திகதி சுப்பர் மார்க்கெட் கடைத் தொகுதி ஒன்று திடீரெனத் தீப்பற்றியது. அச் சமயம் காயமுற்ற சிறுமி ஒருவரைக் காப்பாற்றும் முயற்சியே இது. இத் தீவிபத்தில் ஏறக்குறைய 464 பேர் கொல்லப்பட்டிருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஆச்சரியம்




இது சாதாரண நீரூற்று அல்ல. நிலத்திலிருந்து 500 மீற்றர் உயரத்திற்கு வெந்நீர் பீச்சிப் பாய்கிறது. லூனா எனும் இடத்தில் இந்த அரிய காட்சி உள்ளது. திருகோணமலையில் வெந்நீர்க் கிணறு உள்ளது. ஆனால் இது அதையும் தாண்டியதோ.

# பேரழிவு

அமெரிக்காவின் புள்டா கொர்டா பிளாலை எனும் இடத்தில் கடந்த ஆகஸ்ட் 15ஆம் திகதி வீசியடித்த சுழல் காற்றில் அந் நகரமே பெரும் சேதத்துக்கு உட்பட்டது. இதில் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். மேலும் பல பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்து அழிவுகளும் ஏற்பட்டன. அக் காட்சியே இது.



# சரிவு




அதிபார குத்துச்சண்டை என்றாலே மைக்டைசன் என்று அர்த்தப்பட்டது ஓர் காலம். அவரையே குத்தி வீழ்த்தியிருக்கிறார் வில்லியம்ஸ். லண்டனில் நடந்த இருவருக்குமிடையிலான போட்டியில் நான்காவது சுற்று முடிவில் மைக்டைசன் விழுந்து கிடக்கும் வியப்புக் காட்சி இது.

# கனவு

கனடாவின் தங்கக் கனவு கலைந்தது, ஏதென்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் தடை தாண்டும் போட்டியில் கனடாவின் வீராங்கனை பெலிசீயன் கால் இடறி விழுந்தார். ஆகஸ்ட் 24ஆம் திகதி இச் சம்பவம் நடைபெற்றபோது கனேடிய இரசிகர் உயர்த்திய கைகளை தட்டாமலே தவித்துப்போனார்கள். அடுத்த தடவை முயன்றால் வெல்ல வாய்ப்பு உள்ளது.





பிலின்டொப்



லாரா

# மக்ராத்



2004ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆட்ட வீரராக ஐ.சி.சி.யினால் தெரிவு செய்யப்பட்டவர் பிளின்டொப், இங்கிலாந்தின் சமீபத்திய வெற்றிகளுக்குப் பெரும் பங்காற்றியவர். அண்மைய 7 ஒருநாள் போட்டிகளில் 3 சதங்களையும், ஒரு 99 ஓட்டங்களையும் பெற்றதோடு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

அவுஸ்திரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் மெக்ராத்தின் பந்துகள், மினி உலகக் கோப்பைக்கான போட்டியின் அரை இறுதியில் இங்கிலாந்து வீரர்களால் துவம்சம் செய்யப்பட்டன. இவர் கொடுத்த ஓட்ட எண்ணிக்கையே இங்கிலாந்தின் வெற்றிக்கு வாய்ப்பளித்தது. கிரிக்கெட் உலகின் சாம்பியன் என்ற தகுதியைக் கொண்டுள்ள அவஸ்திரேலிய அணி, இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற போட்டியில் அதிர்ச்சித் தோல்வி கண்டமை நம்ப முடியாமல் இருந்தது. அவுஸ்திரேலிய அணியினர் இந்தியாவிற்கு விளையாட வருகிறார்கள். இந்திய அணி என்ன செய்யப்போகிறதோ?

அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி புத்தெழுச்சி பெற்றுள்ளது. இவ்வணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் பிரைன் லாரா பாகிஸ்தான் அணி வீரர் அக்தரின் வேகப் பந்துவீச்சில் தாக்கப்பட்டு இடையிலேயே மைதானத்தை விட்டு வெளியேறினார். இப்போது குணமடைந்துள்ளார். இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மினி உலகக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் இப்போதுதான் மோதுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.


வெள்ளவத்தையில் சாயி சத்யா

No.119, Manning Place, Colombo-06 இல் தனது 14ஆவது சொகுசு தொடர்மாடியை அமைக்கவுள்ளது

விஸ்தீரணத்தில் பின்வரும் வசதிகளை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. அவரவர் விருப்பத்திற்கு ஏற்றபடி மேலதிக மாற்றங்களும் செய்து தரப்படும்

2 படுக்கையறைகள்
2 குளியறைகள்
800 ச.அடி 850 ச.அடி

2 படுக்கையறைகள்
2 குளியறைகள்
750 ச.அடி

ஒரு மாதத்திற்குள் பதிவு செய்வோருக்கு விசேட கழிவுகள்

- தரமான Main Door
- Car Park
- Mitsubishi Lift
- Plastic குளியலறை கதவுகள்
- தரமான மர கண்ணாடி யன்னல்கள்
- தனித்தனியான தண்ணீர், மின்சார Meters
- 3 Phase மின்சார வசதி
- இறக்குமதி செய்யப்பட்ட Tiles
- இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை இணைப்புக்கள்
- Intercom வசதி
- Tube Wells
- Stainless Steel Sink

Special Featuers

விசாலமான Lobby போதிய காற்றோட்ட வெளிச்ச வசதிகளுடன் நல்ல தனிமையான சூழ்நிலையில் அமையவுள்ளது. மற்ற தொடர்மாடி மனைகளுடன் ஒப்பிடும்போது விலையில் மிகக் குறைவு.

SHANTHINIKENTHAN PROPERTY DEVELOPERS

7/5,Hamers Avenue, Wellawatte,Colombo-06

Tel: 2-360031, 2-501380 Mobile:0722-405271

E-mail: singam@sltnet.lk